# தமிழரசு

16.7.1981 50காசு

திருவள்ளுவர் ஆண்டு 2012

துன்மதி ஆடி - 1













# தென் மாவட்டங்களில் வறட்சி நிவாரணப் பணிகள்



# தியாகத்தின் வடிவம்

''தியாகத்தின் அடையாளச் சின்னம் காமராஜர்.

''போராடிப் போராடி வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டுக் கொண்டு தன்னை உயர்த்திக் காட்டியவர் காமராஜர்.

''மக்களுக்குத்தான் சட்டமே ஒழிய, சட்டத்துக்காக மக்கள் அல்ல என்பதைச் செயலில் காட்டியவர்.

''ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, அழுத்தப் பட்ட, தூக்கியெறியப்பட்ட மக்களின் உள்ளத்திலே உறுதியும் வீரமும் துணிவும் அறிவும் வர, செயல்பட்ட காமராஜருக்குப் பல்வேறு வகையில் நினைவு கூரத்தக்க வகையில் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்த ஆவன அனைத்தையும் தமிழக அரசு செய்யும் - செய்து வருகிறது."

[15-7-'78 ல் காமராஜர் நினைவு இல்லத் திறப்பு விழாவில் மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் ஆற்றிய சிறப்புரையிலிருந்து..]


தமிழரசு

மலர்: 12 16.7.1981 இதழ்: 2

திருவள்ளுவர் ஆண்டு 2012

துன்மதி ஆடி - 1

# விவசாயக் கூட்டுறவுக் கடன் பாக்கியைச் செலுத்த தவணைக் காலம் நீட்டிப்பு

தமிழ்நாட்டில் விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பெற்ற கடன்களை நீண்ட காலமாகச் செலுத்தாமல் இருந்த சூழ்நிலையில், கூட்டுறவுச் சங்க வங்கிகள் ரிசர்வ் வங்கிக்கும், இதர கடன் வழங்கும் நிறுவனங்களுக்கும் வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்த முடியாத கடுமையான நிதி நெருக்கடி ஏற்பட்டு, தமிழ்நாட்டில் வேளாண்மைத் தொழிலுக்கும், விவசாயிகளுக்கும் பேருதவி புரிந்து வந்த கூட்டுறவுத் துறையே முடக்கப்படும் அபாய நிலை ஏற்படுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்காக, அரசு கடனை வசூல் செய்ய சில நடவடிக்கைகளைத் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் எடுத்தது.

மிகுந்த நிதி நிலை நெருக்கடியையும் பொருட்படுத்தாது தமிழக அரசு விவசாயிகளின் கஷ்டங்களையும் நெருக்கடிகளையும் கருத்தில் கொண்டு கடந்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 160 கோடிக்கு மேல் சலுகை வழங்கியதோடு, இறுதியாக இம்மாதம் 30-6-81-க்குள் கடன்களைச் செலுத்துபவர்களுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்வது என்று கடைசிச் சலுகையை அளித்தது.

அரசின் இந்த வேண்டுகோளை ஏற்று தங்களுக்குள்ள கஷ்டங்களுக்கு இடையில் தமிழ்நாட்டின் நலனை மனத்தில் கொண்டு பெரும்பாலான விவசாயிகள் தமிழ்நாட்டில் சுமார் ரூ. 126 கோடி வரைகடன் பாக்கிகளைச் செலுத்தியுள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு அரசு தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாட்டிலுள்ள விவசாயச் சங்கங்கள் அனைத்தும் 30.6.81 என்று தரப்பட்டுள்ள காலவரையறையை 31.12.81 வரை நீட்டிக்க வேண்டும் என்று தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வந்துள்ளன. இந்த வேண்டுகோளைப் பரிசீலித்து தமிழ்நாடு அரசினால் நியமிக்கப்பட்ட வேளாண்மை உயர்மட்டக் குழுவின் சார்பில் அக்குழுவின் தலைவர் திரு முனுஆதி அவர்கள் தமிழக முதல்வர் அவர்களிடம் 31.12.81 வரை கால நீட்டிப்பு கொடுக்கலாம் என பரிந்துரை செய்துள்ளார்கள். இவைகளை எல்லாம் தமிழக அரசு தீவிரமாகப் பரிசீலித்து கீழ்க்கண்ட முடிவை எடுத்துள்ளது:

**தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்கள் அனைத்தும் கேட்டுக்கொண்டுள்ளதாலும், வேளாண்மை உயர்மட்டக் குழுவின் தலைவர் பரிந்துரை செய்துள்ளதாலும், விவசாயிகள் தங்கள் கடனைத் திருப்பிச் செலுத்தும் தவணையை 31.12.1981 வரை நீட்டிக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.**

31.12.81 வரை தவணைக் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளதால் அதுவரை, கடன் வசூலில் ஜப்தி போன்ற தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது.

## ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களின் இடமாற்றம்

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களும் 1.6.81-ஆம் நாளிலிருந்து அரசு ஊழியர்களாக்க அரசு ஏற்கனவே ஆணை பிறப்பித்துள்ளது. இந்த ஆசிரியர்கள் அனைவரும் 1.6.81 ஆம் நாளிலிருந்து கல்வித்துறையின் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்படுவதால் அவர்கள் ஊராட்சி ஒன்றியத்தின் உள்ளே உள்ள பிற பள்ளிகளுக்கோ அல்லது வேறு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பள்ளிகளுக்கோ மாற்றப்படுவதால் நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படும். எனவே, அத்தகைய மாற்றுதல்கள் எதுவும் செய்யவேண்டாமென சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவிடுமாறு ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. ஏதாவது இடமாற்றுதல் உத்தரவு இடப்பட்டிருந்தாலும் அவைகள் அமல் செய்யப்படக்கூடாது. மேலும் புதிய பணி நியமனமும் செய்யப்படக்கூடாது.



# மரம் வளர்ப்போம்!

மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்

திரு. இராம. வீரப்பன்

மனிதன், மிருகம், தாவர இனம் இவை யாவும் அடங்கிய உயிரினங்கள், நிலம், நீர், காற்று ஆகிய இயற்கைச் சக்திகளுடன் இணைந்து ஒரு சீரான வாழ்க்கை நிலையைத் தோற்றுவித்துள்ளன. இங்கு இயற்கை நிலையை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் மாற்றினால் சுற்றுப்புற சூழலின் இயற்கை நெறி மாறி, உயிரினங்களுக்கு குறிப்பாக மனித சமுதாயத்துக்குத் தவிர்க்க முடியாத தீமைகள் விளையும். காடுகளும், மரங்களும் இயற்கையின் முக்கியமான அங்கங்கள். தாவரங்கள் இல்லாத கோளங்களில் உயிரினங்கள் இல்லை. எனவே மரங்களை அளவின்றி வெட்டி காடுகளை முறையின்றி அழித்தால், இயற்கையின் சீற்றத்திற்கு உயிரினம் ஆளாகும். இதனை உணர்ந்தே, சமீப காலங்களில் உலகெங்கும் மரம் வளர்ப்பதற்கு முனைப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொன்மைக்காலத்தில் உலகில் காடுகள் எங்கும் நிறைந்திருந்தன. மக்கள் தொகை குறைந்திருந்தது. மக்கட்தொகை பெருகப் பெருக, வேளாண்மைக்காகவும் மனிதனின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யவும், மரங்கள் வெட்டப்பட்டும், காடுகள் அழிக்கப் பட்டும் வருகின்றன. நமது இளமைக்காலத்தில் நாம் பார்த்து மகிழ்ந்த மலைவளம் மற்றும் இயற்கைக் காட்சிகள்கூட தற்போது பெரிதும் மறைந்து வருகின்றன. முன்பெல்லாம் மலைகள் மரங்களாலும் செடி கொடிகளாலும் போர்த்தப்பட்டு பசுமையுடன் காட்சி தரும். ஆனால், இப்போதுமலைகள் வெறும் தற்பாறைகளின் குவியலாகப் பெருமளவில் காட்சி அளிக்கின்றன. இது ஒரு சோகமான – 'அதிர்ச்சிதரும்' காட்சியாகும். கிராமங்களும், நகரங்களும் பசுமையான மரங்களின்றிப் பாலைவனச் சூழ்நிலைக்குத் தயாராகிக் கொண்டிருக்கின்றன. ஐக்கியநாடுகள் நிறுவனம் 1977-ஆம் ஆண்டு நடத்திய ஒரு கணக்கெடுப்பின்படி உலகில் சுமார் 630 மில்லியன் மக்கள் வாழும் நிலப்பரப்பு, எதிர் காலத்தில் பாலைவனமாக மாறக்கூடிய அபாய நிலை இருப்பதாக கூறுகிறது. இந்திய வனக் கொள்கையின்படி, நாட்டின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியாவது காடுகள் வளர்ந்திருக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தியாவின் நிலப்பரப்பில் 22 சதவீத நிலங்களில்தான் காடுகள் உள்ளன. தமிழ்நாட்டிலே, அதற்கும் குறைவாக, சுமார் ஆறில் ஒரு பங்கு நிலப்பரப்பில்தான் காடுகள் உள்ளன. ஆகவே மனித வாழ்க்கைக்கு இயற்கையின் பாதுகாப்பு வேண்டுமானால் மரம் வளர்க்கும் பணியில் நாம் மும்முரமாக சடுபட வேண்டும்.

தமிழ்நாட்டில் சுமார் 70 சதவீதமக்கள் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். இவர்களில் பெரும்பாலோர் விவசாயத்தை நம்பி வாழும் மக்கள். வேளாண்மைக்கு காடுகளும் மரங்களும் செவிலித்தாய் போன்றவை. 'நீரின்றி அமையாது உலகு' என்பது முதுமொழி. நீருக்கு ஆதாரமானது மழை. மேகங்களைத் தடுத்து மழை பொழியச் செய்ய மலைப்பகுதிகளில் வானுற ஓங்கி வளர்ந்த மரங்கள் நிறைந்த அடர்ந்த காடுகள் தேவை. அடர்ந்த காடுகளில் உள்ள மரம், செடி, கொடிகளிலிருந்து இலைகள் தரையில் விழுந்து மக்கி, நிலத்திற்குக் கணிசமாக அமைந்து மழை நீரை பஞ்சுபோல் உறிஞ்சி, சிறிது சிறிதாக வெளியே விடுவதாலும், தரையில் உள்ள தாவரங்களின் வேர்த் துவாரங்களின் மூலமாக நிலத்துக்குள் நீர் சென்று பின்பு சுனைகளின் மூலம் வெளியே வருவதாலும், மழையில்லாக் காலங்களிலும் அருவியெனப்பாய்ந்து மக்களுக்கு நீர்கிடைக்க மரங்

களும் காடுகளும் உதவுகின்றன. பூமியிலுள்ள ஈரப்பசை காற்றினாலும் சூரியவெப்பத்தாலும் உலர்ந்து பூமி வறண்டு விடாமலும் மரம், செடி, கொடிகள் பாதுகாக்கின்றன. இதனை உணராது காடுகளை - மரங்களை அழித்ததினால்தான் தமிழ்நாட்டிலுள்ள சுமார் 10 பெரும் ஆறுகளில் ஒன்றிரண்டு தவிர மற்றவை. ஆறுகள் என்று சொல்லுவதற்கு அருகதையற்று மணல் வெளிகளாகக் காட்சியளிக்கின்றன. ஆறுகள் வற்றிவிட்டதினால் நிலத்தடி நீரைப் பயன்படுத்துகிறோம். மரங்களும் காடுகளும் வரைமுறையின்றி அழிக்கப்பட்டால் நிலத்தடி நீரும் விரைவில் வற்றிவிடும். ஆண்டுதோறும் வட இந்தியாவில் கங்கைச் சமவெளிப் பிரதேசங்களில் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளமும், கோடைக்கால கடும் வறட்சியும், இமயமலைப் பகுதிகளில் காடுகளை அரித்ததினால் ஏற்பட்ட தீய விளைவுதான். அண்மையில் தமிழ்நாட்டில் நீலகிரி மலைகளில் ஏற்பட்ட பெரு வெள்ளமும், மண் அரிப்பும் பெரும் நிலச் சரிவுகளும் அங்குள்ள மரங்களை முறையின்றி முன்பு வெட்டியதினால் ஏற்பட்ட விளைவுகளேயாகும்.

இப்படி வெள்ளத்தினாலும் பெருங் காற்றினாலும் ஏற்படும் மண் அரிப்பைத் தடுக்க மரங்களும் காடுகளும் அவசியம். மழைத் துளிகள் வேகமாக நிலத்தில் விழாமல் பாதுகாத்தும் மழை நீரோட்ட வேகத்தைக் குறைத்தும் கட்டுப்படுத்தியும் காற்றின் வேகத்தை மட்டுப்படுத்தியும் மரங்கள் மண் அரிப்பைத் தடுக்கின்றன. மலைகளில் ஏற்படும் மண் அரிப்பினால், ஆறு, குளம், ஏரி போன்ற நீர்நிலைகளில் வண்டல் படிந்து, அவற்றின் நீர் கொள்ளளவு குறைந்த மழைக் காலத்தில் வெள்ளமாகப் பெருகி தண்ணீர் வீணாகி விடுவதால் பின் வேளாண்மைக்கு வேண்டிய சமயத்தில் தண்ணீரின்றித் தவிக்கின்றோம்.

இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 6 மில்லியன் டன்கள் உரச் சத்துக்குச் சமமான, சுமார் ஆறாயிரம் மில்லியன் டன் அளவுக்கு வளமான மேல்மண், காற்றினாலும் மழையினாலும் ஏற்படும் மண் அரிப்பினால் அடித்துச் செல்லப்படுகிறது. இது ஆண்டுதோறும் சுமார் 1,500 கோடி ரூபாய்கள் இழப்புக்குச் சமம் என்றும் கணக்கிட்டுள்ளார்கள். வயல்களிலும், பண்ணைகளின் ஓரங்களிலும், ஏரிகளிலும், பல்வேறு உயரமான மரங்கள் நட்டால் அவை காற்றுத் தடுப்பாகப் பயன்பட்டு உணவுப் பொருள் உற்பத்தியும் பெருக வகை செய்யும்.

சராசரி 50 ஆண்டுகள் வாழும் ஒரு மரம், தன்னுடைய வாழ்வுக்காலத்தில் விறகு, மரம் கனி, தழை போன்ற பொருட் பயனையன்றி, சுமார் 15.7 இலட்சம் மதிப்புள்ள இதர பயன்களைத் தருவதாகப் பேராசிரியர் ஒருவர் கணக்கிட்டுள்ளதாக ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகிறது. தாவரங்கள் ஒளிச் சேர்க்கையின் போது சுற்றிலுமுள்ள கரியமிலவாயுவை எடுத்துக் கொண்டு சர்க்கரைப் பொருளை உற்பத்தி செய்வதுடன், நாம் உயிர் வாழ்வதற்கு வேண்டிய பிராண வாயுவை வெளி விடுகின்றன. ஒரு எக்டேர் நிலப்பரப்பிலுள்ள மரங்கள், 45 நபர்கள் உயிர் வாழ்வதற்கு, ஒரு ஆண்டுக்குத் தேவையான சுமார் 10 டன் பிராண வாயுவை வெளியிடுவதாகக் கணக்கிட்டுள்ளார்கள்.



மனிதர்களின் உறைவிடம், நாடு, நகரம் விலங்குகளின் உறைவிடம், கானகம்; பறவைகளின் இருப்பிடம் மரங்கள், இயற்கையை சமநிலையில் வைக்க இந்த மூன்று உயிரினங்களிடமும் ஒத்துழைப்பு தேவை. மரங்களையும் காடுகளையும் வளர்ப்போமானால் மனிதனுக்கு உதவி செய்யும் பறவைகள், விலங்கினங்கள் வாழ வழி செய்கிறோம் என்று பொருள். விலங்கினங்களும் பறவைகளும் வாழ்கின்றன என்றால் மனிதனுக்குப் பாதுகாப்பான காடுகளும் மரங்களும காப்பாற்றப் படுகின்றன என்று பொருள்.

முக்கியமான எரி பொருளாகிய விறகு மட்டுமின்றி, வீடு கட்டத் தேவையான மரமும் வீட்டுச் சாமான்கள் செய்யவும்,வேளாண்மைக்கு வேண்டிய கருவிகளும், இன்னும் மனித வாழ்விற்கு இன்றியமையாத பல்வேறு பொருள்களையும் தருவது மரங்களும் காடுகளும்தான். மனித வாழ்விற்கு அடிப்படைத் தேவைகட்கான மூலப்பொருள்கள் பலவற்றை நாம் காடுகளிலிருந்துதான் பெறுகிறோம். நோய் தீர்க்கும் மூலிகையிலிருந்து, உயிர்காக்கும் காற்றுவரை, காடுகளும் மரங்களும்தான் வழங்குகின்றன.

மரங்களைப் பாதுகாக்க வேண்டும்என்று கூறும்பொழுது மரங்களை வெட்டுவதை



## ஆதரவற்ற கைம்பெண்களுக்கு உதவ தமிழ்நாடு அரசின் சிறப்புத் திட்டம்

ஆதரவற்ற, துயரால் வாடும் விதவைகளுக்கு உதவி செய்யும் சிறப்புத் திட்டமாக தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் சலுகைகளை வழங்க முடிவெடுத்துள்ளது:

அரசு மருத்துவ நிறுவனங்களில் கீழ்க்கண்ட பணியிடங்களில் வேலைவாய்ப்பகம் மூலம் நியமனம் செய்வதில் முன்னுரிமை கொடுப்பது; அப்படி தேவையான அளவு விதவைகள் வேலை வாய்ப்பகம் மூலம் கிடைக்கவில்லை என்றால், நேரடியாக வேலை கோரும் விதவைகளை நேரடியாக நியமன அதிகாரி பணியில் நியமனம் செய்யலாம்.

1. செவிலியர் உதவியாளர்கள்
2. ஆயா
3. பெருக்குபவர்கள்
4. துப்புரவுப்பணியாளர்கள்
5. மருத்துவமனை ஊழியர்கள்
6. சமையல் செய்பவர்கள்
7. சமையல் உதவியாளர்கள்
8. தண்ணீர்ப் பணியாளர்கள்

மேற்கண்ட பணிகளில் நியமனம் செய்யப்படும் விதவைகளுக்கு உச்ச வயது வரம்பு கிடையாது. வரிசை 2-ல் இருந்து 8 வரையில் உள்ள பணிகளுக்குத் தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்தால் போதும்.

---

அறவே தடை செய்ய வேண்டுமென்பது நோக்கமல்ல. இயற்கைக் காடுகளை அழித்தால் அவற்றை மீண்டும் வளர்த்தல் அரிது. தொழிலுற்பத்திக்காக அல்லது விறகுக்காக வளர்க்கப்படும் மரங்களை தக்க பருவத்தில் ஒரு முறையோடு வெட்டி அவ்வாறு வெட்டப்படும் மரங்களுக்குப் பதிலாக உடனே மரங்களை நட்டு வளர்க்க வேண்டுமென்பதே குறிக்கோளாகும். அளவுமீறிய மக்கட் பெருக்கம், கிராமப்புற ஏழ்மை, வேளாண்மை விளை பொருள் குறைவு, தொழில் வளத்திற்குத் தேவையான மூலப் பொருள்களின் பற்றாக் குறை போன்ற பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும், மண் அரிப்பு, வெள்ளம், வறட்சி ஆகிய இயற்கையின் தாக்குதலால் ஏற்படும் இழப்புகட்கும், தூய்மையற்ற காற்றினால் தொடரும் கொடிய நோய்போன்ற பிரச்னைகளுக்கும் நல்ல தீர்வு நமக்குக் கிடைக்க வேண்டுமானால் நாடெங்கும் மரம் வளர்த்தாக வேண்டும்.

மக்களின் தேவைகள் அனைத்திற்கும் அரசினர் காடுகளிலிருந்து மரங்களை வழங்குவது என்பது எக்காலத்திலும் இயலாது. ஆதலால், தங்களால், இயன்ற வரையில், மக்கள் குறிப்பாக கிராம மக்கள், தங்களின் மரப் பொருள்களின் தேவைகளை தங்கள் நிலங்களிலும் அல்லது பொது நிலங்களிலும் மரங்களை வளர்த்துப் பெறுதல் வேண்டும். தமிழ் நாட்டில் மரங்களை வளர்ப்பதற்கும் நிறைய நிலங்கள் உள்ளன. 1960-ஆம் ஆண்டிலிருந்து கிராமங்களில் பொது நிலங்களில் பஞ்சாயத்துக்களின் ஒத்துழைப்புடன் வனத்துறையினர் மரங்களை நட்டு வருகின்றனர். இதனைத் துரிதப்படுத்த எண்ணி, சமூக நலக்காடுகள் என்ற பெயருடன், பலவித பொது நிலங்களிலும் வெறுமையாக இருக்கும் தனியார் நிலங்களிலும், கோடிக்கணக்கான மரங்களை நட்டு, நாட்டின் இயற்கைச் செல்வத்தை மேம்படுத்த அரசு ஒரு திட்டம் தீட்டி அதனை இவ்வாண்டிலிருந்து செயல்படுத்த எண்ணியுள்ளது. இதற்கு மக்களின் முழு ஒத்துழைப்பும், ஆதரவும் தேவை. பொது நிலங்களில் மரங்களை வளர்த்துப் பாதுகாப்புடன் தனிப்பட்டவரிடம் இருக்கும் நிலங்களில், நிலச் சொந்தக்காரர்களே, முக்கியமாக வேளாண்மைத் தொழில் செய்யும் மக்கள் தாங்களாகவே பெருமளவில் மரம் வளர்க்க வேண்டும். தனியார் நிலங்களில் மரம் வளர்ப்பதற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்க வனத்துறை காத்துள்ளது. பல்வேறு கிராமங்களிலும் நகரங்களிலும் தேவையான மரச் செடிகள் வளர்க்கப்பட்டு மக்களுக்கு வழங்கப் படுகிறது. இந்த ஓராண்டில் மட்டும் பொது மக்களுக்கு வழங்குவதற்காக, சுமார் 9 லட்சம் மரக்கன்றுகள் வனத்துறையால் வழங்கப் பட்டு வருகின்றன. கிராமப்புறங்கள் மட்டும் அல்ல, நகர்ப்புறங்களிலும் மரம் வளர்ப்பு தற்போதுள்ள சூழ்நிலையில் மிகவும் அவசியமாகிவிட்டது. பிராண வாயுவை வழங்கவும், ஒலி ஆரவாரங்களைக் குறைக்கவும், தூசிக் காற்றை சுத்தப்படுத்தவும் வீடுகளைச் சுற்றிலும், சாலை ஓரங்களிலும் குறிப்பிட்ட இடங்களில் சில ஏக்கர் அளவிலான மரத் தோப்புகளாகவும் மரம் வளர்க்க வேண்டும். நாட்டுக்கும் வீட்டுக்கும் ஒருசேர நன்மை தரும் மரம் வளர்க்கும் பணியை பல முறைகளிலும் பல சந்தர்ப்பங்களிலும் எல்லோரும் செய்ய வேண்டும். பொது விழாக்களிலும், தனியார் விழாக்களிலும், கடவுள் வாழ்த்துப் பாடி விழாத் துவக்கம் செய்துவதுபோல், மரம் நட்டு விழாவினைத் துவக்க வேண்டும். ஒவ்வொரு ஆணும் பெண்ணும், தன் நினைவாகத் தான் வாழ்வதின் அடையாளமாக ஒரு மரத்தை வளர்க்கலாம். இஸ்ரேல், நாட்டினரைப் போல, பிறந்தநாள் விழாக்களிலும், திருமணங்களின்போதும் மரம்நட்டு, விழா கொண்டாட வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் மரம் நடும் பணி ஒரு மக்கள் இயக்கமாக, சமுதாயப் பேரியக்கமாக உருவெடுக்க வேண்டும். அப்போதுதான் அழிந்துகொண்டிருக்கும் நமது இயற்கைச் சூழ்நிலை வலிவு பெற்று நாடும் வளம்பெறும். நம் வாழ்வும் வளம் பெறும். இயற்கை வலிவு பெற்றால் பொருள் வளமும், தொழில் வளமும், சமுதாய வளமும் தாமாகவே பெருகும். அதனைத் தொடர்ந்து நமது வாழ்க்கைப் பிரச்சினைகளும் தீரும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் நாம் வாழ வேண்டுமானால், மரம் வளர்க்க வேண்டும். மரம்தான் மனிதனின் உயிரைக் காக்கும் மாபெரும் சக்தி. அந்த மரங்களை வளர்ப்போம். மக்களின் உயிரைக் காப்போம்.

[சென்னை வானொலி—
1-7-81]

# அரசின் அறிவிப்புகள்-ஆக்கப்பணிகள்

தொகுப்பு : ஜி. ஆனந்தன்

## 1—6—81

அரசு ஊழியர்களாகியுள்ள ஆசிரியர்களுக்கு நேரடியாக வங்கி மூலம் சம்பளம் வழங்குவது பற்றி அரசு பரிசீலித்து வருவதாக மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் தெரிவித்தார்.

## 3—6—81

தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சித் திட்டத்தின் கீழ், பால் உற்பத்தியைப் பெருக்க ரூ. 40 கோடிக்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்துள்ளார்.

## 5—6—81

பணிக்காலத்தில் இறந்துபோகும் நெசவாளரின் குடும்பத்திற்கு ரூ. 5,000 நிதியுதவி அளிப்பது பற்றி அரசு ஆலோசித்து வருவதாக மாண்புமிகு பொதுப்பணி-கைத்தறித் துறை அமைச்சர் திரு எஸ்.என். ராசேந்திரன் அவர்கள் அறிவித்தார்.

## 6—6—81

சிறு தொழில்கள் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் 11 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டதாக மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ண சாமி அவர்கள் அறிவித்தார்.

## 7—6—81

தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் நவீன தொழிற்பேட்டை ஒன்று அமைக்க அரசு ஆலோசித்து வருவதாக மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

தமிழக அரசு சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளிலும் இன்னும் 3 ஆண்டுகளில் எல்லாப் பணிகளும் தமிழிலேயே நடைபெறும் அளவிற்கு மாற்றம் ஏற்படுத்தப்படும் என்று மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார்.

## 8—6—81

இன்னும் 3 ஆண்டுகளில் தமிழகத்திலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் பேருந்து வசதி செய்து தரப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் அறிவித்தார்.

## 12—6—81

திராவிட இயக்கத் தூண்களில் ஒருவராக இருந்த அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி பெயரில் பேருந்துப் போக்குவரத்துக் கழகம் ஒன்றை தமிழக அரசு அமைத்துள்ளது.

## 14—6—81

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும், அந்தந்த மாவட்டங்களில் கிடைக்கக்கூடிய கச்சாப் பொருட்களைக் கொண்டு சிறுதொழில்களைத் தொடங்குவது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்தார்கள்.

## 20—6—81

மின்வாரியத்தில் பணிபுரியும் 50 பொறியாளர்களுக்கு, இங்கிலாந்தில் தொழிற்பயிற்சி அளிக்க அரசு யோசித்து வருகிறது என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்.

சேலம் இரும்பாலையை முதலில் திட்டமிட்டபடி அமைக்க வேண்டும் என்று வற்புறுத்தி மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுதிய கடிதம் மத்திய அமைச்சரிடம் அளிக்கப்பட்டது. மேலும் இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை விரிவாக்கப்பகுதியில் ரூ. 100 கோடி செலவில் 'கலர் பிலிம்' தொழிற்சாலையாக அமைக்கப்பட விருப்பதாக மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தெரிவித்தார்.

## 22—6—81

தர்மபுரி மாவட்டம் பொம்மிடிப் பகுதியில் கிராமக் கைத்தொழில் திட்டத்தின் ஒரு பகுதியாக 100 தீப்பெட்டித் தொழில்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக உதவியுடன் 30 இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன என்று மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

## 23—6—81

தமிழகத்தில் இந்த ஆண்டில் 400 உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்படும் என்று பள்ளிக் கல்வி இயக்குநர் திரு வேங்கடசுப்பிரமணியம் அவர்கள் அறிவித்தார்.

முன்அறிவிப்பு எதுவுமின்றிப் பணிக்கு வராமல் நின்றுவிட்ட 50 காவலர்களுக்கு மீண்டும் வேலை தர அரசு உத்தரவிட்டுள்ளது.

## 26—6—81

தொழிற்சாலைகளில் பணியாற்றும் சிறுவர்களுக்குத் தமிழக அரசு கூலி நிர்ணயம் செய்திருக்கிறது. இதை அமல் படுத்தாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். ராகவானந்தம் அவர்கள் அறிவித்தார்.

சென்னை அருகே ஒன்றரைக் கோடி ரூபாய் செலவில் கருப்புக் கல் மெருகேற்றும் தொழிற்சாலை அமைக்கப்படும் என்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.



தமிழ் வளர்த்த பெரியார்கள்

# குடந்தை ப.சுந்தரேசனார்

—பகீரதன்

**தா**ன் எந்த தேசத்தில் இருந்தாலும், தான் பிறந்த திருத்தலத்தையே நினைத்துக் கொண்டு, தனக்கென சொந்த வீடு எதுவுமின்றி, பிறந்த மண்ணுக்கே பெருமை தரும் வண்ணம் வாழ்ந்தவர் - பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை சுந்தரேசனார் அவர்கள்.

1914-ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் நாளில் குடந்தைத் திருநகரில் திரு பஞ்சநதம் பிள்ளை-குப்பம்மாள் ஆகியோருக்குத் திருமகனாய்த் தோன்றி, தன்னைப் பெற்றவர்களுக்குப் புகழ் சேர்க்கும் வண்ணம் ஒழுக்க சீலராக வளர்ந்தார். சொர்ணாம்பாள் என்ற மங்கை நல்லாளைத் திருமணம் செய்து கொண்டார். எல்லாக் குழந்தைகளையும் தனதாகப் பாவித்ததால், தனக்கென ஒரு புத்திரப் பேறும் இல்லாதவரானார்.

பள்ளியையே அறியாத இவர் படித்த பாடங்கள் ஏராளம். அக்காலத்தில் கிராமபோன் இசைத்தட்டுக்களில் ஒலிக்கும் பாடல்களை அடிக்கடி கேட்டு இசையில் இவருக்கு ஒரு விருப்பு ஏற்பட்டது. அக்காலத்தில் குடந்தையில் புகழ் பெற்றிருந்த தேவாரம் கந்தசாமி ஐயா என்பவரிடம் தேவாரத் திருப்பாடல்களைக் கற்றார். பின்னர் பல்லவி வித்வான் வேதாரண்யம் இராமச்சந்திர ஐயர் என்பவரிடம் பதினேழு ஆண்டுகள் வரை பழைய குருகுலவாசம் என்ற முறையில் தீட்சிதர், தியாகராஜர் போன்ற மகனீயர்களுடைய பாடல்களையும், பல தமிழ்ப் பாடல்களையும் நிரம்பக் கற்றார்.

அக்காலத்தில் பிறமொழிப் பாடல்களைப் பாடுவோர்க்கு, மொழியில் அவ்வளவு பயிற்சி இல்லாததனால் பாடுவதில் பொருளும் இல்லை. உச்சரிப்பும் சரியில்லை என்று பலர் சொல்ல அது. அவருடைய மனத்தில் [illegible]தனையை உண்டாக்கியது அதற்காகவே அவர் தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளை நன்கு கற்று எழுதவும், படிக்கவும், பேசவும் கைவரப் பெற்றார். இவர், தானே படித்துப் பேசி இந்தி மொழியில் இராஷ்டிரபாஷா வரை படித்துத்தேர்ந்தார்.

சங்கீத சந்திரிகை, சங்கீத கானாமிருத சாஹரம் ஆகிய பழைய இசை நூல்களைப்படித்து இசை இலக்கணத்தை ஒருவாறு கற்றுத் தேர்ந்தார். அக்காலத்தில் குடந்தையில் மிருதங்க வித்துவான் அழகுநம்பிப் பிள்ளை அவர்களுடன் நன்கு பழகிய காரணத்தால் நல்ல ஒரு தாளக் கட்டுப்பாடு அவரிடத்திலே இருந்தது. எல்லாத் தாளங்களிலும் பாடுவதற்கு வாய்ப்பாகப் பல திருப்புகழ்ப் பாடல்களை அதில் குறிப்பிட்டுள்ள சந்தத்தில் பாடுவதில் சமர்த்தரானார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்த நடராஜ சுந்தரம் பிள்ளை எனற நாதஸ்வரமேதை அவர்களின் பாடல்கள் பலவற்றிற்கு இவர்இசைக் குறிப்புகள், தாளக்குறிப்புகள் பலவும் தந்து, நூலொன்றும் வெளிவந்திருக்கிறது. அப்பல்கலைக் கழகத்தில் மூன்று ஆண்டுகள் தேவாரப் பிரிவிற்கு ஆசிரியராகப் பணிபுரிந்தார். சென்னை தமிழிசைச் சங்கம் தோன்றிய காலத்திலே இருந்து பல ஆண்டுகள் அங்கு நடக்கும் பண் இசை பற்றிய ஆராய்ச்சிகளில் இவர் பெரும் பங்கு ஏற்றதை நாடு அறியும். இயலும், இசையும், இலக்கணமும் ஒருசேரக் கற்றுணர்ந்த காரணத்தினால் இவரை அச்சங்கத்தில் மிகவும் போற்றி வந்தவர்கள் செட்டிநாட்டரசர் ராஜா சர் முத்தைய செட்டியார், இசைப் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி, அரியக்குடி ராமானுஜ அய்யங்கார், கோவை ஆர்.கே. சண்முகம் செட்டியார், மு. வரதராசனார் போன்றவர்களாவர். திரு. மு. வ. அவர்களின் முன்னுரையோடும், திரு சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் அணிந்துரையோடும் பாரி நிலைய வெளியீடாக வெளிவந்த அவரது ''முதல் ஐந்திசைப் பண்கள்'' என்ற சிறுநூல், சிறந்த இசைக்கருவூலம் ஆகும்.

திருவையாற்றில் அரசர் கல்லூரியிலே தேவார ஆசிரியராகச் சில ஆண்டுகள் பணிபுரிந்தார். அதற்கு முன்பாக அருட்திரு விபுலானந்த அடிகள் எழுதிய ''யாழ் நூல்'' அரங்கேற்றத்தின் போது இவர் நேரே சென்று அவருடைய அருள் ஆசியோடு ஒரு பிரதியைப் பெற்று, தாங்கள் தான் இந்த நூலைப் பரப்பவேண்டும் என்று அடிகளார் கட்டளையிட அதன் வண்ணம் இறுதி மூச்சு உள்ள வரை அப்பணியிலேயே அயராது உழைத்தார்.

சிலப்பதிகாரம், பரிபாடல் போன்ற சங்க இலக்கியப் பாடல்களை அவர் பாடும் பாணியே தனி. பண் அமைதி கெடாமல் பழைய முறைப்படி பொருட்செறிவு, சொற்செறிவுடன் பாடுவதில் அவருக்கு நிகர் அவரே. அக்காலத்தில் அவர் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் மிகுந்த தொடர்பு கொண்டிருந்த காரணத்தால், அச்சங்கத்தின் வெளியீடாக வந்துகொண்டிருந்த 'தமிழ்ப் பொழில்' என்ற மாத ஏட்டில் இவரது இசைக் கட்டுரைகள் தொடர்ச்சியாக வெளிவந்ததை யாவரும் அறிவர். அண்மைக் காலங்களில், சென்னைப் பல்கலைக் கழகம் இவர்களை அழைத்துத் தமிழ் இசை, கர்நாடக இசை பற்றிய விளக்கங்களைக் கேட்பதில் மிகவும் ஆர்வம் காட்டிற்று.

அவர், பொருளுக்காக வாழவில்லை. பொருள் பொதிந்த வாழ்வு வாழ்ந்தார். இசைக்காக வாழ்ந்தார். கச்சேரி செய்து வாழவில்லை; இசைக்கலையின் நயத்தை எடுத்துரைப்பதற்காக வாழ்ந்தார். அரிய இசை நூல்களைப் பதிப்பிக்க உதவினார்.

சிலப்பதிகாரத்து 'கானல்வரி' யிலே காணும் இசைச் செய்தி

களைப் பரப்பிக் கொண்டே இருந்தார். இசைக் கருவிகளை நன்றாக இயக்கத் தெரிந்திருந்தார்.

பழங்கால இசைக்கருவிகள் பலவற்றைப் பற்றிய அரிய செய்திகளை அறிந்து இருந்தார் திரு சுந்தரேசனார்.

சிலப்பதிகாரத்தில் வரும் யாழ்க் கருவியைப்போல ஒரு யாழ்க் கருவியை உருவாக்கி அதை இசைத்துக் காட்ட வேண்டும் என்று திட்டம் இட்டிருந்தார்.

தெலுங்கு சாகித்யங்கள் பாடுவதற்காக, தெலுங்கு மொழியையே கற்றுக் கொண்டார். பொருள் தெரியாமல் பாடுவது அவருக்குச் சம்மதமில்லை.

'கர்நாடக இசை' என்று தவறாக நம் தமிழ் இசையைச் சொல்கிறார்களே என்று அவர் ஒவ்வொரு கூட்டத்திலும் வருந்தினார்.

கன்னட மொழி பிறப்பதற்கு முன்பே தமிழ்ப் பண்கள் செழிப்புடன் பாடப்பட்டு வந்திருக்கின்றன என்று எடுத்துக் காட்டினார்.

'தமிழ்ப் பண்களிலேயே கர்நாடக, தெலுங்கு சாகித்ய கர்த்தாக்கள் தங்கள் சாகித்யங்களைப் பாடினார்கள்' என்று சொன்னார். மிகச் சிறந்த சாகித்யங்களாக அவை இருந்தமையால், தென்னாடெங்கும் அவை பரவி, அவையே கர்நாடக இசையாக ஆகிவிட்டன என்று திரு. சுந்தரேசனார் சொன்னார்.

தியாகராஜர், வாசுதேவாச்சாரியார் முதலியவர்களை அவர் மனமாரப் போற்றினார். வணங்கினார். அவர்களுடைய பாடல்கள் சுவரப்படுத்தப்பட்டு பத்திரிகைகளில் வந்தபோது ஒன்றுவிடாமல் வாங்கி, 'பைண்ட்' செய்து வைத்துக் கொண்டார்.

தொளதொளவென்று பெரிய பட்டு ஜிப்பாவும், காதில் கடுக்கன்களுமாக கற்றறிந்த கனவானாக திரு. சுந்தரேசனார் மேடையிலே நின்று,

''ஒருதிறம், பாணர் யாழின்
தீங்குரல் எழ
ஒருதிறம், பாணர் வண்டின்
இமிரிசை எழ''

என்ற பாடல்களைப் பாடிக் காட்டி விளக்கம் கூறியது அப்படியே கண்ணில் நிற்கிறது.

வலம் வருகிற கவிஞனின் இடது காதில் முதலில் பாணர்கள் யாழின் தீங்குரல் விழுகிறதாம். அதே சமயம் இயற்கை அழகு சொரிந்த அந்தக் குன்றின் மலர்களிலே ரீங்கரித்துப் பறக்கும் வண்டின் இசை விழுகிறதாம்.

வாழ்நாளில் மிக சௌகரியமாக ஒன்றும் அவர் வாழ்ந்துவிடவில்லை. கச்சேரி செய்ய அவர் நினைத்ததே இல்லை. கூப்பிட்டால்தான் போவார்; இசையைப் பற்றியும், இசைக் கருவிகள் பற்றியும் அவர் நிறையப் பேசுவார். அதிலேயே அவர் பேரின்பம் கண்டு வந்தார்.

பழந்தமிழகத்தில் 'பஞ்சமரபு' என்ற ஓர் இசை நூல் இருந்தது. அறிவனார் என்னும் இசைப் புலவர்இயற்றிய அந்த அரிய நூலைப் பற்றி உரை ஆசிரியர்கள் எல்லாரும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் அந்த நூல் மறைந்துவிட்டது என்று தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் அவர்களே குறிப்பிட்டு இருக்கிறார்.

அந்த அரிய நூல் வெகுகாலம் வரை எங்கே இருக்கிறது என்று தெரியாமல் இருந்தது. தற்செயலாக அந்த நூல் தமிழ் அறிஞர் திரு பெ. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களிடம் இருப்பது தெரியவந்தது.

இதை அறிந்த திரு நா. மகாலிங்கம் அவர்கள் ''பஞ்சமரபு'' என்ற நூலின் சுவடிகளைத் திரு தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களிடம் இருந்து வாங்கினார் அந்த நூலைச் சரி பார்த்துத் திருத்தமாக அச்சிட ஏற்பாடு செய்தார். திருத்தி ஏடு பெயர்த்துப் பதிப்பிக்கும் பணி பண் ஆராய்ச்சி வித்தகர் திரு.ப. சுந்தரேசனாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

திரு. சுந்தரேசனாரின் அரிய முயற்சியினால்தான் அந்த நூல் இரண்டு பாகங்களாக வெளி வந்தது. இந்த நூலை இசை உலகுக்குக் கிடைக்கும்படிச் செய்த பெருமையில் திரு சுந்தரேசனாருக்குப் பெரும் பங்கு உண்டு.

தமிழக அரசின் பெரும் ஆதரவில் ஆங்காங்கு நடைபெறும் அரசு விழாக்களில் நிறையப் பங்கேற்றிருக்கிறார். எந்த ஒரு இலக்கிய மாநாடாயினும் அல்லது விழாவாயினும் அதில் இசை பற்றிய செய்தி இருக்குமானால், அதைப் பற்றிப் பேச இவரை அழைத்துப் பெருமைப்படுத்தியவர்கள் ஏராளம். ஒரு நிறுவனத்தில் ஒரு கட்டுப்பாட்டில் இருந்து கொண்டு கூண்டுக்கிளியாய் வாழ விரும்பாவிடினும் தன் இரு பைக் கூடுகளில் ஒன்றில் தான வழிபடும் தெய்வத்தையும் மற்றொன்றில் இசைபற்றிய நூல்களையும் சுமந்துகொண்டு, பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சில நேரங்கள் கால்நடையாகவே சென்று தனது இசைக் கருத்துக்களைப் பரப்பி வந்தார். இந்த எளிமையை வியக்காதவர் யாருமிலர் எனலாம். அண்மையில் மதுரையில் நடந்த உலகத்தமிழ் மாநாட்டில் அவர்களது இசைக் கருத்துக்களைப் பல வெளிநாட்டவர்களும் கேட்டு வியந்தனர்.

இவரது இசைப்புலமையை நன்கு புரிந்து கொண்ட இராமலிங்கம் பணிமன்றத்தினர், சுந்தரேசனார் அவர்களை அழைத்து பலரும் பயன்படும்படியாக அவரை மையமாக வைத்து பல இசைக்கலை விழாக்களை நடத்தினர். அதன் மூலம் இதுவரை வழக்கில் வராத பரிபாடல், சித்தர் பாடல் ஆகியவற்றுக்கு இசை வடிவு கொடுத்து பழமை குன்றாமல் பாடிக்காட்டிய பணி மிகச் சிறந்தது எனலாம்.

'பஞ்சமரபு' என்ற இசை நூல் வெளிவருவதற்குத் துணையாக ப. சுந்தரேசனார் அவர்கள் ஆற்றிய பங்கு பொன்னெழுத்துக்களில் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். இசை தெரிந்த அனைவரும் கையில் வைத்திருக்க வேண்டிய அரிய நூல். சைவத்தில் மிகுந்த சடுபாடு கொண்டிருந்ததால் தமிழ் நாடெங்கும் பல சமயச் சார்புடைய பல கழகங்களைத் தாமே நிறுவி, அங்கெல்லாம் புராணக் கதைகளையெல்லாம் சொல்லி வந்தார்கள். இவையெல்லாவற்றையும்விட இவரது தோற்றம், எளிமை, இவரது பேச்சு எல்லாரையும் கவர்ந்தன. இவரது பண்ணாராய்ச்சித் திறனை வியந்து குன்றக்குடி அடிகளார் தலைமையில் இவருக்குப் 'பண்ணாராய்ச்சி வித்தகர்'' என்ற விருது தரப் பெற்றது. இதனைத் தவிர 'எழிசைத் தலைமகன்' 'திருமுறை கலாநிதி' 'பண்ணாய்வுப் பாவாணர்' 'தென்னக உயர் தனிச் செவ்விசைப் புலவர்' என்ற சிறப்புப் பட்டங்களையும் பெற்றிருக்கிறார்.

தான் வாழும்வரை இசைத் தொண்டு செய்தே தீரவேண்டும் என்றிருந்த அவர் சென்ற சில மாதங்களாக மதுரைப் பல்கலைக் கழகத்தில் மூன்று ஆண்டுகள் ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொண்ட சிலப்பதிகாரத்தைப் பற்றிய இசை விளக்க நூற்பணி முடியும் முன்பாகவே 9.6.1981-ல் இயற்கை, எய்திவிட்டார்-இசை உலகிற்கு அவரது மறைவு சடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.



# வேளாண்மைப் பொறியியல் பிரிவு

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையத்தின் ''என்கோபெட்'' டினுடைய நோக்கங்கள் வருமாறு :

(அ) இவ்விணையத்துடன் இணைக்கப்பட்ட வட்டார வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவு மையங்களின் பணிகளையும், மாவட்டக் கூட்டுறவு வேளாண்மைப் பணிச் சங்கங்களின் பணிகளையும் ஒருங்கிணைத்தல்.

(ஆ) விவசாயிகளுக்குத் தேவையான உபகரணங்கள், டிராக்டர், பம்புசெட்டுகள், மின்சார சாதனங்கள், ஆயில் எஞ்சின்கள். துளைபோடும் எந்திரங்கள் புல்டோசர்கள் மற்றும் பிற உதிரி உபகரணங்களை விற்பனை செய்தல், கொள்முதல் செய்தல் மற்றும் ஏஜெண்டாகச் செயல்படுதல்.

(இ) விவசாயக் கருவிகள் மற்றும் உபகரணங்களைப் பழுது பார்க்கும் பணியை மேற்கொள்ளுதல்.

(ஈ) ஒருங்கிணைக்கப் பட்ட பணிச் சங்கங்களுக்குத் தொழில் நுட்ப ஆலோசனை கூறுதல், இதற்கான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு நிறுவுதல், அவற்றில் பணி புரியும் ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தல்.



**வட்டார அளவிலான மையங்கள்:**

மத்திய அரசின் நிதி உதவியுடன் ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 220 வட்டார அளவிலான மையங்களை நிறுவும் திட்டம் தமிழக அரசால் அங்கீகரிக்கப் பட்டது.

வட்டார அளவிலான மையங்கள் விவசாயிகளுக்குத் தேவையான விதைகள், உரங்கள் பூச்சி மருந்துகள், உபயோகத்திற்கென டீசல் ஆயில், விசைத் தெளிப்பான்கள், விவசாய உபகரணங்கள், விவசாயக் கருவிகளுக்குத் தேவையான உதிரி பாகங்கள் மற்றும் பிறவும் வழங்கவும், விவசாயிகளின் விவசாய உபகரணங்களைப் பழுது பார்க்கப் பணிக் கூடங்கள் கட்டும் பொருட்டும், டிராக்டர்கள், மற்றும் விசைத் தெளிப்பான்களை வாடகைப் பணிக்கு விடவும் மற்றும் விவசாயிகளுக்குத் தேவையான பிற பணிகளை மேற்கொள்ளவும் மேம்படுத்தப்பட்டன. இதன் படி வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவு மையங்கள் 723 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளன.

**மாவட்டக் கூட்டுறவு வேளாண்மைப் பணிச் சங்கங்கள்:**

பன்னிரெண்டு மாவட்ட கூட்டுறவு வேளாண்மைப் பணிச் சங்கங்களுக்குத் தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுச் சம்மேளனத்தின் மூலம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது :

இச்சங்கங்கள், விவசாயிகளுக்குத் தேவையான உரம், விதை, பூச்சிக் கொல்லி மருந்து முதலியவற்றை விநியோகம் செய்வதைத் தவிர, இயந்திரக் கலப்பையின் வாடகைப் பணியையும், பிற சேவைப் பணிகளையும் முழு

அளவில் செயல்படுத்தியுள்ளன. தனது தொழில் பட்டரை மற்றும் தொழிற் கூடங்கள் மூலமாக எல்லாவிதமான விவசாய இயந்திரங்கள் பழுதுபார்க்கும் பணிகளையும், சிறுசிறு உற்பத்தித் தொழில்களையும் மேற்கொண்டு செயல்பட்டு வருகின்றது.

(1) விசைத் தெளிப்பான்கள்: வட்டார மற்றும் மாவட்ட அளவில் தேவைப்படும் சிறு பெட்ரோல் இன்ஜினுடன் கூடிய விசைத்தெளிப்பான்களை வாங்கி இணையம் வினியோகம் செய்துள்ளது. அது பற்றிய விற்பனை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | எண்ணிக்கை | மதிப்பு |
|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1977—78 | 1561 | 13.74 |
| 1978—79 | 3576 | 31.76 |
| 1979—80 | 1608 | 17.34 |

(2) விவசாயத் தேவைகள்: விவசாயிகளுக்குத் தேவையான பூச்சி மருந்து, உரம் போன்றவற்றை வினியோகம் செய்த வகையில் ஏற்பட்ட வருவாயே மையங்களின் முக்கிய வருவாயாகும்.

| ஆண்டு | வருவாய் விவரம் |
|---|---|
| | கோடி ரூபாய் |
| 1977—78 | 7.0 |
| 1978—79 | 7.5 |
| 1979—80 | 7.4 |
| 1980—81 | 1.09 |

**வாடகைப் பணி:**

வேளாண்மைப் பணிச் சங்கங்களின் முக்கியப் பணி டிராக்டர் ஆயில் என்ஜின் மற்றும் பிற விவசாய இயந்திரங்களை விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் தருவதாகும். இதற்கென மொத்தம் 231 டிராக்டர்கள், 195 டிரெயிலர்கள், 149 ஆயில் என்ஜின்கள், 314 விசைத் தெளிப்பான்கள், 11 பாறை உடைக்கும் கருவிகள், 1 விசைக் கலப்பை முதலியவைகளைக் கொண்டு இதனைச் சார்ந்துள்ள சங்கங்களின் விவசாயிகளின் உபயோகத்திற்கெனப் பயன்படுத்தி வருகின்றன.

| ஆண்டு | வருவாய் விவரம் |
|---|---|
| | ரூபாய் லட்சம் |
| 1977—78 | 55.0 |
| 1978—79 | 37.0 |
| 1979—80 | 35.0 |
| 1980—81 | 15.94 |



தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக்- கூட்டுறவு இணையத்தின் தலைவராக பொறுப்பேற்றுள்ள திரு. கே. குப்புசாமி, எம்.எல்.ஏ. அவர்கள்.

**பழுதுபார்க்கும் பணி:**

வட்டார அளவில் 25 பணி மையங்களிலும் மாவட்ட அளவில் 12 பணிச் சங்கங்களிலும் விவசாயிகளின் இயந்திரங்களை நன்னிலையில்விவசாயிகள் நியாயமான செலவில் பழுது பார்த்துக் கொள்ள வசதி செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**ஒருங்கிணைப்புத் திட்டம்:**

ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் முக்கிய நிலவள வங்கிகள் மூலமாக விவசாயிகளுக்குப் பம்பு செட்டுகள், டீசல் என்ஜின்கள் மற்றும் அதற்கான உபகரணங்களுடன் விவசாயிகளுக்கு வழங்கும் திட்டத்தை வெற்றியுடன் செயல்படுத்தி வருகிறது. 1980-81ஆம் ஆண்டில் (மார்ச் முடிய) 303 டீசல் என்ஜின்களும், 71 மின்சார மோட்டார்களும் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளன.

**விவசாயத் தேவைக்கான எரி பொருள் விற்பனைக் கேந்திரங்கள்:**

கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட டீசல் ஆயில் கட்டுப்பாட்டில் விவசாயிகள் தங்கள் தேவைகளைச் செவ்வனே பெற இயலவில்லை. இத்தட்டுப்பாட்டைச் சமாளிக்க ''என்கோபெட்'' தமது 220 வட்டார அளவிலான வேளாண்மைப் பணிக் கூட்டுறவு மையங்களின் மூலம் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்கி அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முன் வந்தது. மையங்களில் பீப்பாய்களில் டீசல் விற்பனை செய்வது அல்லாது, இந்துஸ்தான் பெட்ரோலியக் கழகம் மற்றும் பாரத் பெட்ரோலியக் கம்பெனி, சென்னை—ஆகியோரின் ஒத்துழைப்புடன் டீசல் விற்பனைக் கேந்திரங்களை நிறுவி வருகின்றன. தற்போது கடலூர், மாதனூர், குருங்குளம், மல்லிப்பட்டினம், மணமேல்குடி மற்றும் இளையான்குடி முதலிய மையங்களில் டீசல் விற்பனைக் கேந்திரங்கள் நிறுவப்பட்டு விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன. 1979-80 1980-81 ஆண்டுகளில் முறையே ரூ. 25,98,511.54 மற்றும் ரூ. 28,41,704 மதிப்புள்ள 15,52,934 மற்றும் 10,12,150 லிட்டர் டீசல் ஆயில் இச்சங்கங்களின் மூலம் விற்கப்பட்டுள்ளது.

# வீட்டுவசதித் துறையின் நற்பணிகள்

வில்லிவாக்கத்தில், சென்னை பெருநகர் அபிவிருத்தித் திட்டம் 1-ன் கீழ் உலக வங்கியின் உதவியுடன் பொருளாதாரத்தில் பின் தங்கியோருக்காக 678 மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இதே திட்டத்தின் கீழ் வில்லிவாக்கம் மற்றும் கொடுங்கையூரில் 1023 மனைகள் மற்றும் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

சென்னைப் பெருநகர் அபிவிருத்தித் திட்டம் II-ன் கீழ் மேலும் ஒரு மனை மற்றும் சேவை திட்டம் மொகப்பர் மற்றும் நெற்குன்றம் ஆகிய இடங்களில் ரூ. 2379.80 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த உலக வங்கி அங்கீகாரம் அளித்துள்ளது. இத்திட்டங்களின் கீழ் வருவாயில் பின்தங்கியோர், குறைந்த வருவாயினர், நடுத்தர வருவாயினர் மற்றும் உயர் வருவாயினருக்காக 15,000 மனைகள் மேம்படுத்தப்பட இருக்கின்றன. மேற்கொண்ட திட்டங்கள் சமீபத்தில் தொடங்கப்பட்டு 9-6-80 முதல் 31-3-81 வரை ரூ. 134.00 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவு மூலம் வீட்டுவசதி :**

புதிது புதிதாக வீடுகள் கட்டுக்கொள்வதும் ஆடம்பர வாழ்க்கை நடத்துவதும் நகர மக்களின் ஏக போக உரிமை என்றிருந்த நிலைமையை மாற்றி, இந்தியாவிலே தமிழக அரசு மட்டுமே கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு குறிப்பாக பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழை எளியமக்களுக்கு மலிவு விலையில் வீடுகள் அமைத்துக் கொடுக்க கூட்டுறவு வீட்டு வசதித் திட்டத்தின் மூலம் திட்டம் தீட்டி நிறைவேற்றி வருகிறது.

கிராம வீட்டுவசதி திட்டம் 1976-ஆம் ஆண்டு முதல் கூட்டுறவு சங்கங்கள் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகின்றதெனினும், குறுகிய எல்லையை விடுத்துத் தமிழ்நாட்டிலுள்ள அனைத் கிராமங்களும் பயனடையும் வண்ணம் 1977-78-ஆம் ஆண்டு 50ம் 1978-79ஆம் ஆண்டு 40ம் ஆக கூடுதல் 90 கோட்ட அளவிலான ஊரக கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் துவக்க அரசு ஆணை பிறப்பித்தது. இச்சங்கங்கள் உறுப்பினர்களின் இருப்பிடத்திற்கு அண்மையில் அமைத்திட வேண்டும் என்ற அரசின் கருத்தினை நிறைவேற்றும்வகையில் 100 கிராம வீட்டு வசதி கூட்டுறவு சங்கங்கள் தமிழ் நாட்டிலுள்ள எல்லா கிராமங்களை தங்கள் செயற்பாட்டின்கீழ் கொண்டு வந்துள்ளன. தமிழ் நாட்டைபொறுத்தவரைஇது ஒரு மாபெரும் சாதனையாகும்.



### கிராமங்களில் வீடுகள் கட்ட மாபெரும் திட்டம் :

மக்கள் தொகையில் 80 விழுக்காடு கிராமங்களில் வாழ்கின்றனர். இக்கிராமப்புற மக்களுக்கு வீடுகள் கட்டும் பணியினை மேலும் உயர்த்தும் வண்ணம் 1978-70ஆம் ஆண்டில் தொடங்கிய ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராம பகுதிகளில் ஊரக வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக ஒரு லட்சம் வீடுகள் கட்டடப்பட வேண்டும் என அரசு முடிவெடுத்தது. மைய அரசின் திட்டக்குழு ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தை 1978-83-ஆம் ஆண்டிலிருந்து 1980-85-ஆம் ஆண்டு முடிய உள்ள காலமாக மாற்றியமைத்துள்ளதை அடுத்து இவ்வைந்தாண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு 40.000 வீடுகள் வீதம் மொத்தம் இரண்டு இலட்சம் வீடுகள் ஊரக வீட்டு வசதி கூட்டுறவு சங்கங்கள் மூலம் கட்டி முடித்திட வேண்டும் என்கிற குறியீட்டை அரசு தற்பொழுது நிர்ணயித்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகள் ஒரே வடிவமைப்பில் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 200 சதுர அடி பரப்பளவில் ரூ. 3750 மதிப்பில் வீடுகள் கட்டப்படுகின்றன.

### திட்டத்தின் சிறப்பியல்புகள் :

1. ஒவ்வொரு உறுப்பினரும் வில்லங்கம் இல்லாத 1.5 செண்டு நிலம் உடையவராக இருத்தல் வேண்டும்.

2. உறுப்பினர் ஆதிதிராவிட இனத்தவராக இருந்தால் வட்டி இல்லாமல் கடன் வழங்கப்படுகிறது.

3. ஆண்டு வருமானம் ரூபாய் 4.200-க்கு மிகாமல் இருக்கும் ஆதிதிராவிட இனத்தவருக்கு கடன் தொகையில் ரூ. 1.000 மானியமாக வழங்கப்படுகிறது.

4. ஆதிதிராவிட மக்கள் பெருமளவில் வாழும் இடங்களில் வீடு கட்ட முன்வரும் இதர இனத்தாருக்கும் ஆண்டு வருமானம் ரூ. 4.200-க்கு மிகாமல் இருந்த இருந்தால் கடன் தொகையில் ரூ. 1,000 மானியமாக வழங்கப்படுகிறது.

5. கட்டுமானச் செலவை குறைக்கும் பொருட்டு உள்ளூரில் கிடைக்கும் நாட்டு மரங்கள். செங்கல், இன்னபிற பொருட்களை வீடுகள் கட்ட பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. கட்டுமானம், அங்கத்தினர்கள் சொந்தப் பொறுப்பில் நடைபெறுவதால் வெளியார் குறுக்கீடு இல்லை.

6. கடன்கள் 30: 40 : 30 என்ற விகிதத்தில் மூன்றுதவணைகளாக வழங்கப்பட்ட கடன் தொகைக்கு ஏற்ப கட்டிடவேலை நடைபெற்றுள்ளதா என்று நேரில் சென்று பரிசீலித்த பின்னரே வழங்கப்படுவதால் கடன் தொகை தவறாகப் பயன்படுத்துவதின்றும் தடுக்கப்படுகிறது.

ஊரக கூட்டுறவு வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 1978-79ஆம் ஆண்டிலிருந்து 31-3-81 வரை கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் 59623 ஆகும். இவற்றின் விவரம் பின்வருமாறு :

| | | வீடுகள் | மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1978-79ஆம் ஆண்டு (1-7-78 முதல் 30—6—79வரை) | | | |
| | ஆதிதிராவிடர்கள் | 3003 | |
| | இதரர்கள் | 4427 | |
| | மொத்தம் | 7430 | 3.70 |
| 1979—80 (1-7-79 முதல் 30-6-80 வரை) | | | |
| | ஆதிதிராவிடர்கள் | 21481 | |
| | இதரர்கள் | 7560 | |
| | மொத்தம் | 29041 | 11.17 |
| 1980—81 (1-7-80 முதல் 30-3-81 வரை) | | | |
| | ஆதிதிராவிடர்கள் | 19351 | |
| | இதரர்கள் | 3801 | |
| | மொத்தம் | 23152 | 9.66 |

31-3-81 அன்றைய நாளில் 31453 வீடுகள் பல்வேறு நிலைகளில் கட்டுமானத்தில் உள்ளன. 30-6-81 உடன் முடிவடையும் கூட்டுறவு ஆண்டில் குறியீட்டளவான 43 000 வீடுகள் கட்டி முடிக்கப்படும்.

### நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதித்திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள 1200-க்கு மேற்பட்ட நகர்ப்புற கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் நகர்புறத்





தில் வாழும் மக்களின் வீட்டுவசதி தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றன. 1-7-80 முதல் 31-3-81 வரை முடிவடைந்த காலத்தில் இவ்வித கூட்டுறவு சங்கங்கள் மூலம் ரூ. 686.86 இலட்சம் அங்கத்தினர்களுக்கு கடனாக வழங்கப்பட்டது. இந்தக் காலத்தில் 6104 வீடுகள் நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மூலம் கட்டி முடிக்கப்பட்டன. இவற்றுள் 711 வீடுகள் ஆதி திராவிட மக்களுக்கு சொந்தமானதாகும். இதுவன்றி 31-3-81 அன்றைய நாளில் 8487 வீடுகள் பல்வேறு நிலைகளில் கட்டுமானத்தில் உள்ளன.

**நகர் மற்றும் ஊரமைப்பு செயல்பாடுகளில் முன்னேற்றங்கள்**

தமிழ்நாடு நகர்-ஊரமைப்புச் சட்டத்தின் மூலம் மாநில வளர்ச்சியை குறிப்பாக உள்ளூர். நகராட்சிகள், உள்ளூர் திட்டக்குழுமங்களின் வளர்ச்சியை முறைப்படுத்தி செம்மைப்படுத்துதில் நகர் ஊரமைப்புத் துறை தனது பணியினைத் தொடர்ந்து செய்து வருகின்றது.

1980-ஆம் ஆண்டில் நாமக்கல் விழுப்புரம், திண்டுக்கல் கோபிச் செட்டிபாளையம். அரக்கோணம், மாமல்லபுரம், இராஜபாளையம், மேட்டூர் போன்ற நகரங்களுக்கு முழுமைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இம்முழுமைத் திட்டங்கள் இருபது ஆண்டு காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் இடைவெளி வளர்ச்சியையும் போதுமான சமுதாய தேவைகள், போக்குவரத்து வசதிகளைக் கொண்டதான நில உபயோகத்தையும் அவற்றில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் எடுத்துக் காட்டுவனவாகும். தனியார் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கக் கூடிய, வளர்ச்சி பெறத் தகுதியுள்ள பகுதிகளைத் தெரிந்தெடுப்பதிலும் இம்முறைத் திட்டங்கள் பெரிதும் உதவுகின்றன. மேலும், உடனடி வளர்ச்சி வாய்ப்பும் தகுதியும் மிக்க நகர மையங்களின் பல பகுதிகளுக்கு விரிவான வளர்ச்சித் திட்டங்களையும் இந்நகர் ஊரமைப்புத் துறை மிகவும் தெளிவான முறையில் தீட்டியுள்ளது. இவை குடியிருப்பு தொழில் கல்வி சுகாதார மற்றும் பொழுது போக்கு வசதிகளை பொருத்தமாக ஆங்காங்கே அமைப்பதற்கு பேருதவி புரிந்து வருகின்றன.

**மாநில நகர் ஊரமைப்பு வாரியம் வளர்ச்சி நிதி நிர்மாணம்**

வளர்ச்சிப் பணிகளைத் தெரிவு செய்வதற்கும் நகர மையங்களின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை இணைத்து செயல்படுத்தவும் தமிழக அரசு மாநில ந...-ஊரமைப்பு வாரியத்தின் உயர்மட்ட குழுவினை நிர்மானித்துள்ளது. தமிழ்நாடு நகர் ஊரைமப்பு வளர்ச்சி நிதியிலிருந்து உள்ளூர் குழுமங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட பணிகளுக்கு பணம் வழங்கும் அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிதிக்கு தமிழக அரசு 1979-80 ஆண்டில் ரூபாய் 3.79 கோடியும் 1980-81 ஆண்டிற்கு ரூபாய் இரண்டு கோடியும் ஒதுக்கியுள்ளது. பேருந்து நிலையமைத்தல் சந்தை அபிவிருத்தி வர்த்தகக் கட்டடக்குழு போன்ற பல்வேறு ஆக்கப்பணிகளுக்கு 1980-81ஆம் ஆண்டில் மேற்படி நிதியிலிருந்து போதுமான நிதி வழங்கப்பட்டுள்ளது. அறுபது கட்டணக் கழிப்பறைகள் கட்டுவதற்காக முப்பத்தாறு நகராட்சிகளுக்கு மேற்படி நிதியிலிருந்து கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது.

1980-81 ஆண்டிற்கு கீழ்கண்ட நகராட்சிகளுக்கு அவற்றின் வருமானம் தரக்கூடிய பணித் திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

1. குடியாத்தம் 2. குன்னூர் 3. பண்ருட்டி 4. ஸ்ரீவில்லிபுத்தூர் 5 தஞ்சாவூர் 6. திண்டுக்கல் 7. திருச்செங்கோடு 8. ஆர்க்

காடு 9. கடையநல்லூர் 10. கடலூர் 11. திருவொற்றியூர் 12. நாமக்கல் 13. தாம்பரம் 14. திருவண்ணாமலை 15. மணப்பாறை. 16. தருமபுரி 17. உதகமண்டலம் 18. கிருட்டிண கிரி 19. ஆலந்தூர் 20. கரூர் 21. ஓசூர். 22. திருநெல்வேலி. 23. புதுக்கோட்டை. 24. திரு வெறும்பூர்.

மக்கட் தொகை அடர்த்தியாக உள்ள மதுரை. கோயம்புத்தூர் நகரக்கூட்டுத் தொகுதிகளுக்கு (Urban Agglomeration) மத்திய, மாநில உதவியுடன் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

கோயம்புத்தூர்

1. சிங்காநல்லூர் குடிநீர்த் திட்டம்.

2. குறிச்சி குடிநீர்த் திட்டம்

3. குறிச்சி தொழில் மனைத் திட்டம்.

4. வடக்குப் பேரூர் சாலை குறைந்த வருவாய் உள்ளோர்க் கான வீட்டு வசதித் திட்டம்.

5. தெற்குப் பேரூர் சாலை குறைந்த வருவாய் உள்ளோர்க் கான வீட்டு வசதித் திட்டம்.

6. அவினாசிச் சாலையிலும் நஞ்சப்பா சாலையிலும் வர்த்த கக் கட்டடக்குழு அமைக்கல்.

மதுரை

1. வைகையின் வடக்குப் பகுதிக்கு குடி நீர் மேம்பாட்டுத் திட்டம்.

2. அவனியாபுரம் கழிவுப் பணிகள் மேம்பாட்டுத் திட்டம்

3. சந்தைப் பேட்டையில் கூடுதல் நீரேற்றும் நிலையம்

4. இஸ்மாயில்புரம் சாக் கடைத் திட்டம்.

5. எல்லிஸ் நகர் வீட்டு வசதித் திட்டம்.

6. நடைபாதைகள் அமைத் தல்.

7. பாதையோரத் தடுப்புச் சுவர்கள் முக்கிய சாலைகளில் அமைத்தல்.

8. ஆட்சித் தலைவர் அலு வலகத்திற்கு அருகில் புதிய பேருந்து நிலையம் அமைத்தல்.

9. பழைய மாநகராட்சிக் கட்டடத்தில் கடைக்கன்னிகள் கட்டடக்குழு ஏற்படுத்துதல்.

## முன்னாள் இராணுவத்தினரின் துணைவியருக்கான ஒய்வூதியம் வழங்கும் திட்டம்

## தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது

இராணுவத்தில் பணியாற்றி 1964-ஆம் ஆண்டுக்கு முன் ஓய்வு பெற்ற இராணுவ வீரர் களின் துணைவியருக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தினை மேற்கொண்டு அதனைச் செயல் படுத்தி முடித்ததில் தமிழ்நாடு இந்தியாவில் முதலாவதாகத் திகழ்கிறது. இத் திட்டத்தின்கீழ் 250 கைம்பெண்களுக்கு மாதந்தோறும் ரூ. 50/- வீதம் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மேலும் கைம்பெண்ணின் இரண்டு குழந்தைகளுக்கு ரூ. 10/- வீதம் வழங்கப்படுகிறது. இதன்படி இதுவரை 60 குழந்தைகள் பயன் பெற்றுள்ள னர்.

## தேரழுந்தூர் அரசு உயர்நிலைப்பள்ளி கம்பர் அரசு உயர்நிலைப்பள்ளி எனப் பெயர் மாற்றம்!

தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வி இயக்குநரின் பரிந்துரையினை ஏற்றுக்கொண்டு தஞ்சை மாவட் டம்,தேரழுந்தூர் அரசு உயர்நிலைப் பள்ளியின் பெயரினை 'கம்பர் அரசு உயர்நிலைப் பள்ளி தேரழுந்தூர்' என மாற்றுவதற்கு அரசு ஆணை யிட்டுள்ளது.

## அரசு ஊழியர்கள் குடியிருப்பு வாடகைக் குறைப்பு

அரசுக்குச் சொந்தமான வீடு களில் குடியிருக்கும் அரசு ஊழியர்களுக்கு மாத வருமா னம் ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக இருந்தால், அவர் களுடைய வீட்டு வாடகை குறைக்கப்பட்டுள்ளது.

தற்போது பல்வேறு நகரங் களில் அரசுக் குடியிருப்புகளில் குடியிருக்கும் அரசு ஊழியர் களிடமிருந்து நூற்றுக்கு 10,9,7, மற்றும் 5 என்ற விகிதங்களில் வாடகை வசூல் செய்யப்படு கிறது. முறையீடுகள் வந்ததன் பேரில் இந்த விகிதங்கள் தற் போது மாற்றியமைக்கப்பட் டுள்ளன.

புதிய வாடகை விகிதங்கள் வருமாறு :

ரூபாய் 350லிருந்து 599ரூபாய் வரையிலான ஊதிய விகிதம் பெறுவோருக்கு முதல் நிலை (ஏ மற்றும் பி பிரிவு உள்பட) மற்றும் இரண்டாம் நிலை தகுதி பெற்ற ஊர்களில் 5 சத விகிதம், மூன்றாம் நிலை தகுதி பெற்ற இடங்களில் 4 சதவிகிதம்.

ரூபாய் 600-லிருந்து ரூபாய் 999 வரையில் ஊதியம் பெறுவோருக்கு முதல் நிலை தகுதி (ஏ மற்றும் பி பிரிவு உள்பட) பெற்ற ஊர்களில் 6 சதவிகிதமும் இரண்டாம் மூன் றாம் நிலை தகுதி பெற்ற ஊர் களில் 5 சதவிகிதமும் வீட்டு வாடகை என்று நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

இந்தப் புதிய வாடகை விகி தங்கள் இவ்வாண்டு மே 1-ஆம் தேதி முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதாகக் கணக் கில் கொள்ளப்படும். மேலும் இந்த வாடகை விகிதத்தில் அடிப்படை ஊழியர்கள் மற்றும் அரசாங்க ஊர்தி ஓட்டுநர் போன்றவர்களுக்கு விலக்களிக் கப்பட்டுள்ளது.



**1980**-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இந்த அரசு பொறுப் பேற்றுக் கொண்ட பிறகு உணவு நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வந்தது. பருவமழை பொய்த்ததன் காரணமாக மாநிலத்தின் பல பகுதிகளில் வறட்சி நிலைமை காணப்பட்டது. 1980-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசியின் தேவை மாதம் ஒன்றுக்கு 7,000 டன்கள் முதல் 11,000 டன்கள் என்ற அளவிற்கு நிதானமாகவே இருந்து வந்தது. ஆனால், டிசம்பர் மாதத்தில் மேலும் தேவை அதிகரித்து 18,000 டன்கள் என்ற அளவில் உயர்ந்தது. பெருகி வரும் பொது விநியோகத் தேவைகளையும் அரசு கைவசம் இருந்த இருப்பையும் கவனமாக ஆராய்ந்த பின்பு கையிருப்பைப் பலப்படுத்த வர்த்தக லெவி மூலம் கொள்முதல் செய்வதென அரசு முடிவு எடுத்தது. இதன்படி வர்த்தகர்கள் தாங்கள் வாங்கும் நெல் அரிசியில் 40 விழுக்காட்டை அரசுக்கு லெவியாகத் தர வேண்டும். உற்பத்தியாளர்களுக்கோ சில்லறை வர்த்தகர்களுக்கோ லெவி கிடையாது. வெளிச் சந்தையில் நிதானமான விலையில் பொதுமக்களுக்கு அரிசி கிடைக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் லெவியினின்றும் விலக்கு அளிக்கப்பட்டது

**கொள்முதல் விலைகள் :**

விவசாயிகளுக்குத் தாங்கள் உற்பத்தி செய்யும் நெல்லுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. நெல்லின் கொள்முதல் விலையைக் கணிசமாக உயர்த்த வேண்டும் என்று இந்த அரசு மத்திய அரசிடம் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றது. 1978-79-ஆம் ஆண்டில் சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 85 என்ற கொள்முதல் விலையை மத்திய அரசு நிர்ணயித்திருந்தபொழுது தமிழக அரசால் 1979-ஆம் ஆண்டு ஜூன் திங்களில், கூடுதலாக ரூ. 20 கொடுத்து குவிண்டால் ரூ. 105 என்ற விலையில் சாதாரண ரக நெல்லையும், குவிண்டால் ரூ. 109 என்ற விலையில் சன்னரக நெல்லையும் நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக வாங்கப்பட்டது. மத்திய அரசை, இந்த அரசு தொடர்ந்து வற்புறுத்தி வந்ததன் விளைவாக சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 95ரூபாய் என்றும் பின்பு ரூ. 105 என்றும் மத்திய அரசு உயர்த்தியுள்ளது. ஆனால், இந்த உயர்வு அரசுக்கு மன நிறைவை அளிக்கவில்லை. எனவே, ஆதரவு விலையை சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 115 என நிர்ணயித்து விவசாயிகள் தாங்களாகவே முன் வந்து விற்கும் நெல்லை இந்த விலையில் வாங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அண்மையில் டெல்லியில் நடந்த விவசாய விளை பொருள் ஆணைக்

# உணவுப் பொருள் வழங்கு துறையின் உயர்வு!



குழுவின் கூட்டத்தில் கூட நெல்லின் விலையைக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 150 ஆக நிர்ணயிக்க வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

**பொது விநியோகம் :**

பிற மாநிலத்தவரும் பாராட்டத்தக்க வகையில் தமிழகத்தில் பொது விநியோகத் திட்டம் செயல்பட்டு வருகிறது. ஏறக்குறைய 80 விழுக்காடு மக்கள் கிராமப்புறங்களில் வசிப்பதால் அத்தியாவசியப் பண்டங்கள் குடும்பக் கார்டுகள் அடிப்படையில் நகர்ப்புறங்களில் உள்ள மக்களுக்கு கிடைப்பது போல் கிராம மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு இந்த அரசு 1977-ஆம் ஆண்டில் பொறுப்பேற்றுக் கொண்டதும் கிராமம் தோறும் நியாய விலைக் கடைகள் திறக்க வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தது. இதனால் ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய நான்கு கோடி ரூபாய்கள் மான்யமாக வழங்க வேண்டியிருந்தாலும்கூட கிராமப்புற மக்கள் நலனை மனத்தில் கொண்டு இத்திட்டத்தை



நிறைவேற்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன்படி ஏறக்குறைய 10,714 நியாய விலைக்கடைகள் கிராமப்புறங்களில் திறக்கப்பட்டன. இன்று ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திற்கும் நியாய விலைக்கடை செயல்பட்டு வருகிறது. அவற்றின் மூலம் அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய், பாமோலின் எண்ணெய், புளி, பருப்பு போன்ற எல்லா அத்தியாவசியப் பண்டங்கள் குடும்பக் கார்டுகள் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றன. மலைப் பகுதிகளிலும், உட்பகுதிகளில் அமைந்துள்ள கிராமங்களில்கூட தற்பொழுது நியாய விலைக் கடைகள் மூலமாக அரசு நிர்ணயித்த விலையில் மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பண்டங்கள் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மற்ற மாநில அரசு அலுவலர்களும், அமைச்சர்களும் தமிழகத்தின் பொது விநியோகத் திட்டம் செயல்படும் முறையை நேரடியாக வந்து கண்டு சென்றுள்ளனர்.

அத்தியாவசியப் பண்டங்கள் தட்டுப்பாடின்றி நியாயமான விலைகளில் மக்களுக்குக் கிடைக்க வகை செய்யும் பொருட்டு வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகள், அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் 1955-ன் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதன்படி வணிகர்கள் ஒவ்வொரு அத்தியாவசியப் பண்டத்திற்கும் ஓர் உரிமம் வாங்க வேண்டும் என்று விதி முறைகள் செய்யப்பட்டு இருந்தது. இதனால் பல சங்கடங்கள் உள்ளன. எனவும் ஒரே உரிமம் முறையைக் கொண்டு வர வேண்டும் எனவும் வர்த்தகர்களிடம் இருந்து பரவலாக கோரிக்கைகள் வந்தன. அவற்றை எல்லாம் அரசு ஆராய்ந்த பிறகு சர்க்கரை, மண்ணெண்ணெய் நீங்கலாக மற்ற எல்லா அத்தியாவசியப் பண்டங்களுக்கும் ஒரே உரிமம் இருந்தால் போதுமானது என்று முடிவு எடுத்து அதற்காக ஓர் ஆணை வெளியிடுவதற்கு மத்திய அரசின் ஒப்புதலைக் கோரி உள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்ததும் இந்த ஆணை பிறப்பிக்கப்படும். இதை வர்த்தகச் சமுதாயம் வரவேற்றுள்ளது.



நாட்டின் பல பகுதிகளில் வறட்சி நிலைமை காணப்பட்டதாலும் அரசு பொது விநியோகத் திட்டத்தை நடத்துவதற்குத் தேவையான அரிசியைக் கொள்முதல் செய்ய முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளது. பிற மாநிலங்களிலிருந்தும் அரிசியை வாங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தமிழகத்தில் தற்பொழுது நெல், அரிசி தட்டுப்பாடு என்ற பிரச்சினை இல்லை. எல்லாக் கிராமங்களிலும் குடும்பக் கார்டுகள் மூலமாக பொதுமக்களுக்கு அரிசி விநியோகம் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். அந்த மாவட்டங்களில் போதுமான இருப்பு வைப்பதற்கும் அரசு ஏற்பாடு செய்துள்ளது.

மக்கள் எல்லோரும் படித்துப் பயன் பெறவும் அறிவை வளர்த்துக்கொள்ளவும் மாநிலம் அளாவிய நூலக இயக்ககம் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள எல்லா மாவட்டந்தோறும் (கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக) மாவட்ட மைய நூலகங்களும், நகரங்களிலும் பேரூர்களிலும், சிற்றூர்களிலும் கிளை நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

கீழ்க்காணும் நூலகப் பணி முனைகள் தமிழ்நாடு பொது நூலகத்துறையின்கீழ் செயல்பட்டு வருகின்றன:—

| | |
|---|---|
| (1) மாநில மைய கன்னிமாரா நூலகம் | 1 |
| (2) கவிமணி நூல் நிலையம் நாகர்கோயில் | 1 |
| (3) மாவட்ட மைய நூலகங்கள் | 14 |
| (4) கிளை நூலகங்கள் | 1440 |
| மொத்த பணி முனைகள் | 1456 |

**தனி நூலகத்துறை:**

(அ) தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் ஏப்ரல் 1950 முதல் செயல்படத் தொடங்கியது. பொதுக் கல்வி இயக்குநர் அவர்களின் நேர்ப்பார்வையில் அல்லது நிர்வாகத்தின் கீழ் இயங்கிவந்த நூலகப்பிரிவு 1972 ஆகஸ்டு முதல் நூலகத்துறை என ஒரு தனித்துறையாகச் செயல்படத் தொடங்கியது.

(ஆ) மாவட்ட அளவில் அதிகமாகி வரும் நூலகப் பணியைக் கவனிக்க மாவட்ட நூலக அலுவலர்கள் பதவி ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஒரு பதவி வீதம் தோற்றுவித்தது. அதன்படி 13 பதவி இடங்களை அரசு 1977 முதல் மாவட்ட நூலகஅலுவலர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர். 1.6.80 முதல் பெரியார் மாவட்டத்திற்கும் ஒரு நூலக ஆணைக்குழு ஏற்படுத்தி அதனை நிர்வகிக்க ஒரு மாவட்ட நூலக அலுவலரையும் அரசுநியமித்துள்ளது.

**பணியாளர்கள்:**

நூலகப் பணித்துறையில் பணிபுரியும் நூலகப் பணியாளர்கள் அனைவரும் அரசு பணியாளர்கள் போலவே, அரசு பணியாளர்கள் பெறும் சலுகைகள் எல்லாவற்றையும் பெற அரசு ஆணையிட்டுள்ளது.

பணிக்காலத்தில் இறந்துவிட்டால் அவரது குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் 10.10.79 முதல் நூலகப் பணியாளர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

**ஓய்வு ஊதியம்:**

அரசு ஊழியர்கள் போலவே நூலகப் பணியாளர்களுக்கும் பணியில் இருந்து ஓய்வு பெறும் போது ஓய்வு ஊதியம் முதலிய சலுகைகள் 1.4.74 (பண பயன் 1.4.79) முதல் அளிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

**நூலகப்பயிற்சி:**

நூலகத்தில் பணிபுரியும் பயிற்சி பெறா பணியாளர்களுக்கு நூலகவியல் சான்றிதழ் பயிற்சிப் படிப்பு நூலகத்துறையின் கீழ் அளிக்க இந்த அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டம் 22.5.1979 முதல் சென்னையில் செயல்பட்டு

# தமிழ் நாட்டில் நூலகப் பணி



வருகிறது. இதனைத்தொடர்ந்து திருச்சியிலும் ஒன்று துவக்கஅரசு ஆணையிட்டுள்ளது.

**நிதி:**

நூலகப் பணியை வளர்க்கும் பொருட்டு நூலகச் சட்ட அடிப்படையிலே நூலக வரி விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நூலகவரியை ஆங்காங்குள்ள உள்ளாட்சி நிறுவனங்கள் - மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், சொத்து அல்லது வீட்டு வரியில் மேல்வரியாக வசூலித்து நூலக ஆணைக் குழுக்களுக்குச் செலுத்தி வருகின்றன.

மக்கள் தரும் நூலக வரிக்குச் சமமாக சட்டபூர்வமாக இணை மான்யம் அரசு வழங்குகிறது. நூலகப் பணியைக் கிராமப் பகுதியில் உள்ள மக்களுக்கு நீட்டிக்கும் வகையில் நிறுவப்படும் திட்ட நூலகங்களுக்கான பராமரிப்பு மான்யமும் அரசு தருகிறது.



நூல் இருப்பு:

*1954* முதல் *1974* வரை- அதாவது கடந்த இருபதாண்டுகளாக நமது 1456 நூலகங்களிலும் உள்ள நூல்கள் 50 இலட்சங்கள்தான். இந்த நிலையை மாற்றுவதற்கு அரசு கொடுக்கப்படும் இணை மான்யத்தில் 25 விழுக்காடு அதாவது கால் பகுதி நூல்களாகக் கொடுப்பது என முடிவு செய்தது. இதன்படி 1979-80ஆம் ஆண்டு கணக்கின்படி தற்போது 79 இலட்சம் நூல்கள் நூலகத்தில் உள்ளன.

மேற்படி திட்டத்தின்படி *1979-80* வரை வாங்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கை அதன் மதிப்பு ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ. எண் | ஆண்டு | நூல்கள் | படிகள் | தொகை ரூபாய் பை |
|---|---|---|---|---|
| 1. | 1977—78 | 2074 | 5,01,406 | 29,13,129.30 |
| 2. | 1978—79 | 1484 | 3,66,229 | 24,99,074.55 |
| 3. | 1979—80 | 3087 | 4.94,432 | 30,52,440.40 |
| | மொத்தம் | 6645 | 13,62,067 | 84,64,644.25 |

**கட்டடங்கள்:**

தற்போது எட்டு மாவட்ட மைய நூலகங்களுக்குச் சொந்த கட்டடம் உள்ளது. மற்ற ஆறு மாவட்ட மைய நூலகங்கள் வாடகைக் கட்டடங்களில்இயங்கி வருகின்றன.

தற்போது 1440 கிளை நூலகங்களில் 57 கிளை நூலகங்கள் சொந்தக் கட்டடத்திலும் மற்றவை வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன.

எனவே, இந்நிலையை மாற்றி சொந்தக் கட்டடங்களைக் கட்ட அரசு திட்டமிடப்பட்டுள்ளது.

இம்முறையில் நகராட்சிகள் இலவசமாக இடம் கொடுத்தால் அரசு மானியம் பெற்று கட்டடங்கள் கட்ட உள்ள திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**சென்னை மாவட்டக் கட்டடம்:**

வட்டாரத்திற்கு ஒரு நூலகம் வீதம் 15 வட்டார நூலகங்களும் ( Circle Library ) வட்டத்திற்கு ஒரு கிளை நூலகம் ( Branch Library ) வீதம் 135 கிளை நூலகங்களும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு மாநகராட்சி, வீட்டுவசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் முதலியவைகளோடு தொடர்பு கொண்டு இடம் பெற்று கட்டடம் கட்ட முயற்சி நடந்து வருகிறது.

மதுரை வட்டத் தலைநகர்களிலும், நகரசபை உள்ள ஊர்களிலும் புதிதாக ஒன்பது நூலகக் கட்டடங்கள் ஒவ்வொன்றும் ரூ. 2 இலட்சம் செலவில் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர, பேரூராட்சி, ஊராட்சிகளில் காலி மனைகள் நன்கொடையாகப் பெறப்பட்டவைகளில் புதிய கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ரூ. 30 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்ட மைய நூலகத்திற்கு பல அடுக்கு மாடிக் கட்ட

டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 3.10.1980ல் அடிக்கல் நாட்டப்பட்டது.

ரூ. 25 இலட்சம் செலவில் கோயம்புத்தூர் நகரில் வடக்கு கோயம்புத்தூரில் ஒரு கட்டட மும், பெரியக் கடை வீதியில் ஒரு கட்டடமும் கட்ட ஆணை இடப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் நகர சபைக்குச் சொந்தமான வ.உ.சி. பூங்காவில் உள்ள கட்டடத் தினை (தற்போது மாவட்ட மைய நூலகம் இயங்கிவரும்) நூலக ஆணைக் குழுவிற்கு வாங் கப்பட்டுள்ளது.

மேலும் நகரின் பிற பகுதி களிலும் இடம் பெற்று கட்டடம் கட்ட முயற்சி நடந்து வருகிறது.

சேலம் நகரில் 9.60 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்ட மைய நூலகக் கட்டடம் முடியும் தறு வாயில் உள்ளது.

**சென்னை (மாவட்ட மைய நூலகம்)**

மறைந்த தமிழ் அறிஞர் தேவ நேயப் பாவாணர் அவர்களின் பெயர் சென்னை மாவட்ட மைய நூலகத்திற்கு வைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

வேலூர் மாவட்ட மைய நூலகத்திற்குத் தந்தை பெரியார் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

**எதிர்காலத் திட்டங்கள்:**

மக்கள் ஆதரவு பெற கொடை பெறும் முயற்சி திட்டமிடப்பட் டுள்ளது. இம்முறையில் ரூபாய் ஐம்பதாயிரம் மதிப்புள்ள கிளை நூலக கட்டடம் கட்டிக்கொடுக்க முன் வருபவர்கள் குறிப்பிடும் மறைந்தவர் ஒருவரின் பெயர் அக் கட்டடத்திற்குச் சூட்டப்படும்.

மக்கள் தொகை 5000 இருந் தும் நூலகம் இல்லாத ஊர்களில் 20, புதிய நூலகங்கள் 1981-82 ஆம் ஆண்டில் திறக்க திட்ட மிடப்பட்டுள்ளது.

## சித்த மருத்துவ வளர்ச்சிக்கான குழு

சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழுவினைத் தமிழ் நாடு அரசு 1973-ஆம் ஆண்டு ஏற்கெனவே அமைத்து இருந் தது. கிடைத்தற்கரிய சித்த முறை நூல்கள், கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றைச் சேக ரிப்பது; பாளையங்கோட்டையி லுள்ள சித்த இந்திய முறை மருத்துவக் கல்லூரியின் பயனுக் காகச் சித்த மருத்துவ முறை பற்றிய எல்லா நூல்களையும், ஆரிய சித்த வைத்திய நூல்கள், கையெழுத்துப் பிரதிகள் ஆகிய வற்றையும், சென்னையில் உள்ள அரசு அச்சகம் அல்லது தனியார் அச்சகங்களில் அச்சிடு வது;, பரம்பரையாக மருத்துவம் செய்பவர் மட்டும் தெரிந்து வைத்துள்ள சித்த மருத்துவ மருந்துகள் பற்றித் தகவல்கள் அறிந்து தகுந்த ஆராய்ச்சிக்குப் பின் அவற்றைத் தொகுப்பது ஆகிய பணிகள் இந்தக் குழு விற்குத் தரப்பட்டு இருந்தன. பின்னர் 1977-ஆம் ஆண்டு மேலும் 3 ஆண்டுகளுக்கு இந்தக் குழு மீண்டும் அமைக்கப்பட்டது. தற்போது இக்குழுவினை அரசு மீண்டும் அமைத்துள்ளது. இக் குழுவில் கீழ்க்கண்டவர்கள் உள்ளனர்:

1. முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம்; 2. திரு கே. பலராமையா; 3. டாக்டர் சி. எஸ். உத்தம ராயன்; 4. டாக்டர் ஏ. அனந்த குமார்; 5. டாக்டர் பி. குரு சிரோன்மணி; 6. பண்டிட் முத்துக்கருப்பப் பிள்ளை; 7. டாக்டர் பி. சிர்காபாய் 8. டாக்டர் ஏ. ஜி. கணபதி; 9. டாக்டர் ஆர். தியாகராசன்; 10. டாக்டர் சி. பி. சாமி; 11. திரு பி. கேசவப்பிள்ளை; 12. திரு கே. வி. கிரி; 13. திரு எஸ். கிருஷ்ணமூர்த்தி; 14. திரு எம். எஸ். பிரகாசம்; 15. திரு கே. வி. கே. வெங்கடாசலம்; 16. டாக்டர் சரோஜினி கிருஷ்ண சாமி; 17. டாக்டர் கே. எஸ். கமாலுதீன்; 18. இயக்குநர், இந்திய மருத்துவ முறை; 19. இயக்குநர், பொது நூல கங்கள், 20. திருமதி லலிதா காமேஸ்வரன்; 21. முதல்வர், பாளையங்கோட்டை இந்திய முறை மருத்துவக் கல்லூரி; 22. டாக்டர் பி. ஜெயப்பிரகாஷ் நாராயணன், மருத்துவ அதி காரி; 23. டாக்டர் ஃபாஸ்ஸு தீன் அகமது; 24. டாக்டர் கே. நடராசன்; 25. திரு ஆர். குமாரசாமி, தனி அலுவலர், மதுரை மருத்துவப்பண்ணை.

இக்குழு உறுப்பினர்கள் மூன்று ஆண்டுகள் பணியில் இருப்பர்.



கிளை நூலகங்களுக்குக் கட்ட டம் கட்ட ரூ. 5 இலட்சம் நூலக ஆணைக் குழுக்களுக்கு மானிய மாக வழங்க 1981-82ல் நிதி ஒதுக்கீடு அரசு செய்துள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டு விட்டால் இம்மாவட்டத்தில் ஒரு நூலக ஆணைக்குழு ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டுடன் இணைந்த கன்னியாகுமரி மாவட்டத்திற் கும் தமிழ்நாடு பொது நூலகச் சட்டத்தை நீட்டிக்க முயற்சி நடக்கிறது.

கன்னிமாரா பொது நூலகத் திற்கு நூல்கள் கட்டும் பிரிவு ஒன்று ஏற்படுத்த 1981-82ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளது.



# நூல் நயம்

இப்பகுதிக்கு இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும். அரசியல் கட்சிகள் தொடர்புள்ள நூல்கள் இப்பகுதியில் மதிப்புரை செய்யப்படுவதில்லை.

—ஆசிரியர்.

## தமிழ் இலக்கியக் கொள்கை—6

பதிப்பாசிரியர் : டாக்டர் சு. வே. சுப்பிரமணியன், டாக்டர் ந. கடிகாசலம்

வெளியீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அடையாறு சென்னை-20

விலை : ரூ. 16 பக்கங்கள் : 443

கொள்கை இல்லாத மனிதன், திசையறி கருவி இல்லாத கப்பலைப் போன்றவன் என்று நாம் கூறலாம். இது இலக்கியங்களுக்கும் பொருந்தும். பண்டைத் தமிழ் இலக்கியங்கள் தமிழ்ப் பெருங்குடி மக்களின் இலட்சியங்களை - நோக்கங்களை - கொள்கைகளைஎடுத்துக் காட்டும்காலக் கண்ணாடியாகத் திகழ்கின்றன. தமிழருக்கே உரிய அந்த இலக்கியக் கொள்கைகள் இந்நூல் முழுவதும்விரவி இருக்கக் காணலாம். தமிழின் சிறப்பையும், அம்மொழிக்குச் சொந்தக்காரனான தமிழனின் பண்பாட்டையும், புலமையையும் படம்பிடித்துக் காட்டுகிறது, இந்நூல்.

பல்வேறு தலைப்புகளில் பதினோரு கட்டுரைகளை உள்ளடக்கிய இத்தொகுப்பு நூல், தமிழின் தொன்மையினையும், வன்மையினையும் எடுத்துக்காட்டுகின்றது.

காப்பியப்பாகுபாடு, சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார், பள்ளு, குறவஞ்சி, சிந்து, பட்டினத்தார், வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், அண்ணாமலை ரெட்டியார், திரு.வி.க. கவியோகி சுத்தானந்தபாரதி ஆகிய தலைப்புகளில் தரப்பட்டுள்ள அரிய செய்திகள் ஆராய்ச்சி மாணவர்கட்கு மட்டுமல்ல, தமிழ் ஆர்வலர்களுக்கும் இனிய நல் விருந்தாகும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நடத்திய இலக்கியக் கொள்கைக் கருத்தரங்குகளிலிருந்து திரட்டிய இந்தக் கட்டுரை முத்துக்கள், அன்னைத் தமிழுக்கு அணியாரமாய்க் காட்சியளிக்கின்றன.

## கனல் மணக்கும் பூக்கள்

ஆசிரியர் : பி. ரங்கநாயகி

வெளியீடு : கலைஞன் பதிப்பகம், 54, பாண்டி பஜார், சென்னை-17.

விலை : ரூ. 8 பக்கங்கள் : 158

நாவலாசிரியைக்குப் பாரதியின் கவிதையிலே மிக்க ஈடுபாடு உண்டு போலும். இல்லாவிட்டால், பாரதியின், 'கனல் மணக்கும் பூக்கள்' என்ற வரியைத் தன் நாவலுக்குப் பெயராக சூட்டுவாரா? 'நான் இந்த நாவலை எழுதினேன் என்பதைவிட, பாரதியின் ஓர் ஜீவன்மிக்க வரி என்னை இந்த நாவலை எழுத வைத்தது என்பதே சரியானதாகும்'' என்கிறார்.

இந்த இருபதாம் நூற்றாண்டில்—இந்தச் சமுதாயத்தில் வாழ்கின்ற நாம் எத்தனையோ பேரைச் சந்திக்கிறோம்—சிந்திக்கிறோம். பிரியா, தேவி, சத்திய மூர்த்தி, பாகீரதி, நாகராஜன் இவர்களையெல்லாம் நாம் எங்கேயோ சந்தித்த மாதிரி இல்லை? இன்றைய சமுதாயத்தைப் படம் பிடித்துள்ளார், ஒளிப்பதிவாளராயிருந்து இந்நாவலாசிரியை!

## சிரி குழந்தாய் சிரி

ஆசிரியர் : புலவர் அ. அகமது பஷீர்

வெளியீடு : ஜே. சீ. ஏ. வெளியீட்டகம், 211 அ.காயிதே மில்லத் சாலை, சென்னை-5

விலை : ரூ. 3-75 பக்கங்கள் : 97

நாளைய தலைமுறைகளான இன்றைய குழந்தைகளின் மன வளர்ச்சிக்கேற்ற நல்ல நல்ல கதைகள், பாடல்கள் நிறைய எழுதப்படல் வேண்டும். அந்த வகையில் இந்த நூலில் குழந்தைகள் பாடவும் ஆடவும் ஏற்ப நிறைய பாடல்கள் உள்ளன.

'மலைகள் சிரித்தால் மணியாகும்
மரங்கள் சிரித்தால் கனியாகும்
பலரும் கூடிச் சிரிப்பதனால்
பகைமை எல்லாம் உறவாகும்!

—என்று 'சிரி குழந்தாய் சிரி' என்ற கவிதையில் அறிவுறுத்துகிறார் ஆசிரியர்.

தாயும் சேயும், வானொலி, வாழை, ஆலமரம், அழகு. எங்கள் வீட்டுப் பூனை போன்ற பாடல்கள் இனிமை. இதிலுள்ள பாடல்களுக்குக் குழந்தைகளே படம் வரைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

—பி. வி. கிரி

# உயர் விளைவு தரும் சிறுதானியங்கள்

பூ. சோலையப்பன்
இணை வேளாண்மை இயக்குநர்
(கூலம்)

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும், ஒருமைச் செயலாற்றும் தமிழக உழவர் பெருமக்கள் கால நிலைமைக்கும் பருவச் சூழ்நிலைக்கும், மண் பாங்கிற்கும் ஏற்பப் பயிரிடும் தோரணை விஞ்ஞான வேளாண்மை வழிக்கு ஒத்து வருதல் கண்கூடு.




தமிழ் நாட்டில் ஏறக்குறைய இருபத்தி ஆறரை இலட்சம் எக்டேரில் நெல்லும் பதினேழுரை இலட்சம் எக்டேரில் சிறு தானியங்களும் பயிராகிறது. சராசரி உற்பத்து எழுபத்தைந்து இலட்சம் டன் நெல்லும் பதினான்கரை இலட்சம் டன் சிறு தானியங்களும் ஆகும். பயிரிடும் பரப்பை நெல்லோடு ஒத்து நோக்கின் ஏறக்குறைய 66 விழுக்காடு இருந்தாலும், சிறுதானிய உற்பத்தியைக் காணும்போது நெல்லில் 19விழுக்காடே விளைகிறது. அதாவது நெல்லின் பரப்பளவில் மூன்றில் இரண்டு பங்கு சிறுதானியப் பயிரானாலும், உற்பத்தியின் ஐந்தில் ஒரு பங்கிற்குக் குறைவாகவே உள்ளது. இந்த ஏற்றத்தாழ்விற்குத் தலையாய காரணம் பெரும்பாலான சிறு தான்யங்கள் புன்செய்ப் பயிராக வான்மழை நோக்கி விளையும் பயிராக அமைந்ததாலும், அதன் காரணமாகத் தேவையான உரமிடுதலும், பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கைக்கொள்ளுதலும் இயலாமையாலே தான். தோராயமாக எந்த ஒரு பயிரும் பாசனப் பயிராக விளைவித்தால், வான் மழை நோக்கி விளையும் பயிரை விட இரண்டு மடங்கிற்கு மேல் உற்பத்தி கிட்டும். நீர் மேலாண்மையைக் கொண்டே உற்பத்தியைப் பெருக்க முடியும். என்றாலும், பாசன வசதி இருந்தால் உழவர் பெருமக்கள், உணவுப் பயிருக்குப் பதிலாக வணிகப் பயிரிடுவதையே நாடுவர். அதுதான் முறையுங்கூட, ஏன் புன்செய் நிலத்தில் கூட நிலவளங்குன்றாமல் இருக்க பயிர் சுழற்சிக் கருதி தான் வணிகப் பயிர் தவிர்த்து சிறுதானியம் பயிரிடுகிறார்களே தவிர தேவையைக் கருதி அல்ல என்று சொல்லலாம். பெரும்பாலான பெரு நிலக்கிழார்கள், தங்களுக்குச் சொந்தமான புன்செய் நிலச்சாகுபடியில், நன்செய் நிலச் சாகுபடிக்குக் காட்டும் பரிவு போன்றோ செய்நேர்த்தி செய்யும் முறையோ பாடுபடும் பாங்கோ குறைவுதான். ஏன்? சிறு உழவர் சின்னஞ்சிறு உழவர் கூட புன்செய் சாகுபடியில் செலவை சடுபட்ட தேவையான நிதிக்குறைவால் செம்மையான முறையில் முழுக்கவனத்தைச் செலுத்துவதில்லை. உழுதொழிலின் வரலாற்றைக் கூர்ந்துநோக்குங்கால், நாம் பெறும் படிப்பினை என்ன? மக்கள் தொகை மிகக் குறைவாக இருந்த நாளில் காடுகளில் தானே விளையும் காய் கனி உண்டு வாழ்ந்தனர். மக்கள் தொகை ஏற, ஏற நாகரீகம் வளர வளர புன்செய் நிலத்தில் பயிரிட்டு உற்பத்தி செய்து உண்ணத் தலைப்பட்டனர். மேலும் நெருக்கடிநிலை ஏற்பட ஏற்படப் பாசன வசதிகள் குறிப்பாக, ஆற்றில் அணைகள், ஏரிகள், குளங்கள் ஏற்படுத்தி உற்பத்தி பெருக்க முயன்று வெற்றி பெற்றனர்.

அதுவும் பற்றாமல் போகவே கிணறுகள், ஆழ் கிணறுகள், குழாய்க் கிணறுகள் என படிப்படியாக முன்னேறி, இப்போது



ஓடும் ஆறுகள், தேங்கும் ஏரிகள், குளங்கள் யாவற்றையும் முழுமையாகப் பயன்படுத்தியதோடு நிலத்தடி நீரையும் பெரும்பகுதி பயிர் உற்பத்திக்குப்பயன்படுத்தி விட்டோம். இன்னும் தேவையை ஈடுகட்ட முடியாததால்ஆராய்ச்சி செய்து, நீர் மேலாண்மை முறைகளை வகுத்து உழவர் பெருமக்கள் கைக்கொள்ள வழிவகை செய்யப்படுகிறது. நாகரீக முதிர்ச்சியில் எவ்வளவு உற்பத்தியைப் பெருக்கினாலும் வளரும் மக்கட் தொகையின் தேவையை ஈடுகட்ட, மீண்டும் துவக்க நிலைக்கு ஆனால், விஞ்ஞான நோக்கோடு செல்ல வேண்டியுள்ளது. இன்னும் சற்று ஆழ்ந்து சிந்திப்போமானால், வான்மழை நோக்கி பயிராகும் பயிரின் மூலம் உற்பத்தியைப் பெருக்கும் சாதனையைச் செய்தால் தான், பிறர் கை நோக்காமல், தன் கை கொண்டே உழைத்து வாழத் துடிக்கும் உழவர் சமுதாயம் முன்னேற வாய்ப்புக் கிட்டும்.

புன்செய் சாகுபடியில் அதிக வருவாய் பெற ஆக்கப் பூர்வமாகப் பல்வேறு செயல் திட்டங்களைத் தமிழக அரசு மைய அரசின் நிதி உதவியுடன் செயலாற்றி வருகிறது.

புன்செய் பயிரின்—குறிப்பாக சிறுதானியங்களான சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காச் சோளம் ஆகியவற்றில், முன்னேற்ற வகை விதைகளும், உயர் விளைவு தரும் வகைகளும், வீரிய ஒட்டு வகைகளும் கண்டு பிடிக்கப்பட்டு வேளாண் பெருமக்களும் அவற்றைப் பயன்படுத்தி அதிக விளைவு பெற்று வருகின்றனர். நடப்பு ஆண்டில் தமிழ் நாட்டில் வேளாண்மைத் துறை நாலேகால் இலட்சம் ஏக்கர் சோளமும், ஆறே கால் இலட்சம் ஏக்கர் கம்பும், நாலே முக்கால் இலட்சம் ஏக்கர் கேழ்வரகும், ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் ஏக்கரில் மக்காச் சோளமும் உயர் விளைவு தரும் முன்னேற்ற வகை விதைகளைக் கொண்டு பயிரிட்டு சிறுதானிய உற்பத்தியைக் கணிசமான அளவு அதாவது இருபத்தி இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் டன் கண்டுமுதல் செய்யத் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது.

உயர் விளைவு தரும் வகைகளாகக் கம்புப் பயிருக்கு கேயெம் ஒன்று, கேயெம் இரண்டு வகைகளையும், சோளத்திற்கு ஐயெஸ் 3541, கோவில்பட்டி நெட்டை வகைகளையும், கேழ்வரகில் கோ ஆறு, கோ ஏழுவகைகளையும், மக்காச் சோளத்தில் கோ. ஒன்று கே. இரண்டு வகைகளையும் பயி



ரிட ஆவன செய்யப்பட்டு வருகிறது.

மேலும் சிறுதானியங்களின் உற்பத்தியைப் பெருக்க இரசாயன உரம் இடுதல் இன்றியமையாததாகும். ஆதலின் ஒரு எக்டேர் நிலப்பரப்பிற்குக் குறைந்தபட்சம் சராசரி இருபத்தியேழு கிலோ சாம்பல் சத்தும், ஆறு பத்தைந்து கிலோ தழைச் சத்தும், முப்பது கிலோ மணிச்சத்தும் இட்டு பயிரிட உழவர் பெருமக்களுக்கு வேளாண்துறை விரிவாக்கப் பணியாளர்கள் ஆய்வுரை வழங்கி வருகின்றனர். சிறுதானிய உற்பத்தியைப் பெருக்க மேலும் சில வழிமுறைகள் கைக்கொள்ள உழவர் பெருமக்களிடையே வலியுறுத்தப்படுகின்றன.

நிலத்தில் ஈரப்பதம் உலருமுன்னே உரியகாலத்தில் உடனடியாக விதைப்பதும், விதைக்கு முன் விதை நேர்த்தி செய்வதும், பலநோக்கு உழவுக்கருவி பயன்படுத்துவதும் அளவு குறையாமல் பயிரின் எண்ணிக்கை இருக்க பார்த்துக் கொள்ளுதலும், களை நீக்கிக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளுதலும், பூச்சி பூசண நோய் தடுத்து ஒட்டுண்ணிச் செடிகள் வளராமல் கண்காணிப்பதும் அவ்வழி முறைகளில் அடங்கும்.

ஒருமித்த செய்நேர்த்தி முறைகளைக் கையாளும் பாங்கினை வேளாண்மைப் பெருமக்களிடையே பரப்ப செயல்முறை விளக்கப் பண்ணைகள் ஊராட்சி ஒன்றிய ஊர்களில் ஆங்காங்கே அமைத்தும் அனுசரணை ஆராய்ச்சி பாத்திகளை அமைத்தும் விளக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் இந்த ஆண்டு ஜூலை மாத முதல் செங்கல்பட்டு, தர்மபுரி, கோவை, மதுரை, புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் இராமநாதபுரம் மா. வட்டங்களில் ''பயிற்சி பூண்டு பார்வையிடும்''



முறையை அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் நிதி உதவி பெற்று வேளாண்மைத் துறை கைக்கொள்ள உள்ளது. இம்முறையில் உழவர் பெருமக்களில் செய்முறைத்தேவையை சுடுகட்டி ஐயப்பாடுகளைக் களைய உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு உள்ளது. பயிர்வகை மற்றும் சாகுபடி முறைகளில் அவ்வப்போது காணும் ஆராய்ச்சி முடிவுகளைக் காலவிரயமின்றி உழவர் பெருமக்களிடையே விளக்கிடப் பெருவாய்ப்புள்ளது.



குறுகிய காலச் சிறுதானியம் என்று சொன்னால் முக்கியமாக 90-முதல் 120 நாட்கள்ல் அறுவடைக்கு வந்து உயர் விளைவு தரும் சிறுதானியங்களைச் சொல்லலாம்.

சோளப் பயிரில் கோவில்பட்டி நெட்டை மற்றும் ஐயெஸ். 3541 வகைகளைச் சிறப்பாகப் பரிந்துரைசெய்தாலும் கே.5, கோ.21 கோ. 24, சி.எஸ்.எச். 1 மற்றும் ஐந்தும் பயிரிட சிறந்தது எனக் கூறலாம். சி.எஸ்.எச்.1, 5 மற்றும் கோ. 21, 24 ஆகிய வகைகள் 105நாள் வயது உடையவை. மற்றவை 95 நாட்களே. ஆடி மற்றும் புரட்டாசிப் பட்டங்களுக்கு ஏற்றவை. கோவில்பட்டி நெட்டை மற்றும் சி.எஸ்.எச்.5 ஆகிய வீரிய ஒட்டு வகைகள் மறுதாம்பு சாகுபடிக்கு ஏற்றவை. முதல் அறுவடையின் போது நிலத்திலிருந்து 15 செ.மீ.விட்டு தட்டை அறுவடை செய்யவேண்டும். அதன்பின் வரும் இரண்டு இலைகளை நீக்கி பிறகு குழிக்கு இரண்டு குருத்துக்களை மட்டும் வளரவிட வேண்டும். பிறகு வழக்கம்போல் களை எடுத்தலும் உரமிடுதலும் செய்தல் வேண்டும். மறுதாம்பு பயிருக்கு விதைப் பயிரை விட வயதில் 10 நாட்கள் குறைவு.

கம்பு பயிரில் 75 நாள் வயது கொண்ட கேயெம். ஒன்றும், 80 நாள் வயது கொண்ட கேயெம். இரண்டும் சிறந்தவையாகும். எல்லாப் பட்டங்களிலும் மானாவாரியிலும், பாசனத்திலும் பயிரிடலாம். பாசனப் பயிராக செய்யுங்காலை நாற்று விட்டு நடவு செய்தல் நலம். கம்பு வறட்சி தாங்கும் பயிரானாலும் காலத்தில் செய்நேர்த்திகளைச் செவ்வனே செய்தால் நல்விளைவு பெறுவது திண்ணம்.

அடுத்து கேழ்வரகில் கே. ஆறும், கோ. ஏழும் சிறந்தவகைகளாகப் பரிந்துரை செய்தாலும், கோ. பத்து, கோ. பதினொன்று மற்றும், கே. ஐந்தும் பரவலாகப் பயிரிடப்படுகின்றன. கே. ஆறு என்பது நாளுக்குட்பட்ட வயதும் கோ. ஏழும், கே. ஐந்தும் நூற்றைந்து நாட்களுக்குட்பட்ட வயதும், கோ.பத்தும் பதினொன்றும் 95 நாட்களுக்கு உட்பட்ட வயதும் உடையனவாகும். கே. ஐந்தும் ஆறும் ஆடிப்பட்டத்திலும் கோ. ஏழு ,பத்து, பதினொன்று, மார்கழிப் பட்டத்திலும் பயிரிடத் தக்கவையாகும். கோ. பதினொன்று உவர் நிலத்தில் பயிரிட ஏற்றது ஆகும். கேழ்வரகை உரிய செய்நேர்த்திமுறைகளைக் கைக்கொண்டு பயிரிட்டால் கதிர் ஒவ்வொன்றும் 8 அல்லது 9 விரல்களுடன் மதர்ப்பான மிகுந்த விளைவு தரும்.

மக்காச் சோளத்தில் கே. ஒன்று மற்றும் இரண்டு வகைகளைப் பயிரிடச் சிறந்ததாகப்பரிந்துரை செய்தாலும் ஆங்காங்கே கங்கா. ஐந்து என்ற வீரிய ஒட்டு வகையும் பயிரிடப்படுகிறது. கே. ஒன்று எண்பத்தைந்து நாட்களுக்கு உட்பட்ட வயதிலும், கங்கா. ஐந்து தொண்ணூற்று ஐந்து நாட்களுக்கு உட்பட்ட வயதிலும் அறுவடைக்கு வந்து பலன் வரும். பாசனப் பயிராக ஆடி, தை, மற்றும் புரட்டாசி பட்டங்களிலும் மானாவாரியாக ஆடிப்பட்டத்திலும் பயிரிடலாம். மக்காச்சோளம் வேளாண் தொழில் துறைக்கு ஓர் மூலப் பொருளாக அமைவதால், இதனை ஓர் வணிகப் பயிராக எண்ணியே பயிரிடலாம். ஒரு மித்த செய்நேர்த்தியை, ஒழுங்காகக் காலத்தில் செய்தால் பருத்த பெரிய கதிர்களை அறுவடை செய்வது திண்ணம்.

''உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாது'' என்று சொன்னது அந்தக்காலம். உழவை ஒரு தொழிலாகக் கருதி முழுமூச்சோடு காலத்தில்செய்ய வேண்டியதைத் திருந்தச் செய்தால், ஒவ்வொரு வயலும் களமும் தொழிற்கூடமாகக் காட்சியளித்து, விளைவும் வருவாயும் பெருகும் என்பது உறுதி.

இச் சிறுதானியங்கள் மட்டுமின்றி சில்லரை சிறுதானியமாகக் கருதப்படும் தினை, சாமை,வரகு பணிவரகு மற்றும் குதிரை வாலி பயிர்களுக்கு முன்னேற்ற வகை விதைகள் ஆராய்ச்சியில் கண்டு, உழவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. நல்ல விளைவு பெற, தினையில் கோ. ஐந்தும், கே. இரண்டும், சாமையில் கே. ஒன்றும், வரகில் கே. ஒன்றும், பணிவரகில் கே. ஒன்றும், குதிரைவாலியில் கோ. ஒன்றும், கே. இரண்டும் பயிரிடல் வேண்டும்.

# கல்வித் துறையில் ஒலியும் ஒளியும்



தமிழ்நாடு அரசின் உள்ளாட்சித் துறைக்குக் கட்டுப்பட்டு, சிறப்புறச் செயல்பட்டு வருகிறது 'வானொலி மற்றும் தொலைக் காட்சிப் பராமரிப்பு நிறுவனம்'!

எவ்வித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் அமைதியாக - அதே நேரத்தில் வியத்தகு வகையில் செயல்பட்டு வருகிற இந்த நிறுவனம், பாமர மக்களிடையே கல்வி பரப்புவதில் பெரிதும் அக்கறை காட்டி வருவதாகும்.

இப்பிரிவின் ஆரம்பகாலத்தில் கிராமங்கள்தோறும் வானொலிப் பெட்டிகள் பயன் நல்கிட வேண்டும் என்ற கருத்தில் 'ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு வானொலிப் பெட்டி' என்கிற திட்டம் தீட்டப்பட்டுச் செயல் படுத்தப்பட்டது. அதன்படி, துவக்கத்தில் ஊராட்சிகளில் இயங்கிவந்த வானொலிப் பெட்டிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ நான்காயிரம் ஆகும்!

இந்தியாவிலேயே அவ்வகையில் கடைசிக் குறியீட்டை அடைந்த ஒரே மாநிலம் தமிழ்நாடு தான்.

'கிராமவானொலி மன்றங்கள்' ஆங்காங்கே நிறுவப்பட்டன. அந்தந்தக் கிராமத்திலும் படித்தவர் ஒருவர், வானொலி மூலம் பயன் பெறுவோர் எண்ணிக்கையைக் கண்காணிப்பார். எந்தக் கிராமத்தில் அதிகம்பேர் பயன்பெற்றதாக அறியப்படுகிறதோ அதற்குப் பரிசு!

ஒரு வருவாய்க் கோட்டத்திற்கு ஒரு வானொலி மேற்பார்வையாளர் வீதம் ஊராட்சிகளின் சமுதாய வானொலிப் பெட்டியைப் பராமரிக்க நியமிக்கப்பட்டனர். நாளடைவில், வானொலி மேற்பார்வையாளரின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட வானொலிப் பெட்டிகளின் எண்ணிக்கை அதிகமாகவே, வட்டத்திற்கு ஒரு மேற்பார்வையாளர் என்ற வகையில் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது.

இப்படி நியமிக்கப்பட்ட வானொலி மேற் பார்வையாளரின் பணி என்ன தெரியுமா? தனது தலைமையிடத்திற்குக் கொண்டு வரப்படும் ஊராட்சி வானொலிப் பெட்டிகளைப் பழுது பார்த்துத் தருவது; மாதம் இருமுறை ஒன்றிய அலுவலகங்களுக்குச்சென்று அங்கே கொண்டு வரப்படும் வானொலிப் பெட்டிகளை முடிந்தவரை அங்கேயே பழுது பார்த்துக் கொடுத்துவிடுவது; பழுது எளிதில் சரிசெய்ய முடியாதபட்சத்தில் இருக்குமானால் வானொலிப் பெட்டியைத் தனது தலைமை நிலையத்திற்கு எடுத்துச்சென்று சரிபார்த்துத் தருவது ஆகியவை அவரது பணிகளாகும்.

## தலைமை வானொலி அதிகாரி

வானொலி மற்றும் தொலைக் காட்சிப் பராமரிப்பு நிறுவனத்தின் தொழில் நுட்ப வல்லுநராகத் தலைமை வானொலி அதிகாரி சென்னையிலிருந்து செயல்படுகிறார். அவரது நேரடி நிர்வாகத்திற்கு ஏற்றபடி மாநிலம் சென்னை, சேலம், மதுரை என மூன்று வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு வட்டார வானொலி அலுவலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஊராட்சி மன்ற சமுதாய வானொலிப் பெட்டிகளின் பராமரிப்பிற்கு, ஒரு பெட்டிக்கு, ஆண்டொன்றுக்கு ரூ. 30வீதமும் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட வானொலிபெட்டிகளுக்கு ரூ. 100 வீதமும் பராமரிப்புத் தொகை ஊராட்சி மன்றங்களிலிருந்து வசூலிக்கப்படுகிறது.

இடையே ஓராண்டுக்காலம் வானொலிப் பெட்டிகளை ஊராட்சி மன்றங்களே பராமரிப்பது என்ற நிலைவந்து அது சரிப்பட்டு வராத காரணத்தினாலே, மீண்டும் பழைய நிலையே தொடர்ந்தது.

'கற்பதை விடக் கேட்பதே பசுமரத்தாணிபோல மனதில் படியும்' என்ற கருத்தில் - 'கற்றலின் கேட்டலே நன்று' என்கிற வழக்கு ஒன்று உண்டு. அதையும் தாண்டி, கற்பதைவிட...கேட்பதைவிட....பார்க்கும் காட்சியே மனதில் படியும் சக்தியுடையது என்ற நிலை நாடெங்கும் உருவாகியிருப்பதை இப்போது நாம் பார்க்கிறோம்.

அதாவது - ஏடுகளின் மூலம் கற்பிப்பதைவிட வானொலி மூலம் சமுதாய, சுகாதார, கல்வித் தொடர்புடைய, அரசின் அன்றாட நடவடிக்கைகள் பற்றிய, அறிவார்ந்த செய்திகளைக் கேட்பதால் உண்டாகிற பலனைவிட, அந்தந்தச் செய்திகளுக்கு ஆதாரமான காட்சிகளைப் பார்ப்பதே நலம் விளைக்கும் என்கிற கருத்து பல்லோர் மனதிலும் பலமாக வேரூன்றி வருகிறது.

பி.எல்.ஆர்

இதற்கு மூலகாரணம், தொலைக்காட்சிப் பெட்டிகளே என்பதை யாராலும் மறுக்க முடியாது.

ஆகவே - ஊராட்சி மன்றங்களில் வெறும் வானொலிப்பெட்டிகள் மட்டுமே வைப்பது என்ற நிலையை மாற்றி, 1976ஆம் ஆண்டு முதல் தொலைக்காட்சிப் பெட்டிகளும் வழங்கப்பட்டு வருகின்றன

இத் திட்டத் துவக்கத்தில்- மத்திய அரசு மூலம் 125 தொலைக் காட்சிப் பெட்டிகள் இலவசமாக வழங்கப்பட்டன. அவைகள், வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு - ஒன்றியத்திற்கு மூன்று தொலைக்காட்சிப் பெட்டிகள் வீதம் வழங்கப்பட்டன.

வானொலி மூலம் ஒலிபரப்பாகும் 'கல்வி ஒலிபரப்புகள்' பெற்றுள்ளவரவேற்பைவிட தொலைக் காட்சி நிலையத்தின் மூலம் ஒளிபரப்பாகும் 'காண்போம். - கற்போம்' பகுதி பெற்றுவரும் வரவேற்பு ஓரளவுக்கேனும் அதிகம் என்றே கொள்ள இடமுண்டு ஊராட்சி மன்றங்களுக்கு இந்த நற்பயன் கருதியே தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப் பட்டு வருகின்றன.

ஆனால் - தமிழகமெங்கும் உள்ள ஊராட்சிகளுக்கு இதைத் தருவது சாத்தியமன்று. ஏனென்றால், சென்னையில் உள்ள தொலைக்காட்சி நிலையத்தில் இருந்து ஒளிபரப்பாகும் காட்சிகள் சுமார் 90 கிலோ மீட்டர் தூரம் வரை மட்டுமே விஸ்தரிக்கக்கூடிய சக்தி உடையதாக உள்ளது.

எனவே-சென்னைத் தொலைக் காட்சி நிலையத்திலிருந்து 90 கிலோமீட்டர் தொலைவிற்குள் அடங்கிய ஊராட்சிகளுக்கு மட்டுமே அவை கொடுக்கப்பட்டுவருகின்றன. இந்தவகையில், இது வரை ஏறத்தாழ 400க்கும் மேலான ஊராட்சி மற்றும் கல்வி நிறுவனங்களில் தொலைக்காட்சிப்பெட்டிகள் நிறுவிப் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இப்படி நிறுவப்படும்தொலைக் காட்சிப் பெட்டிகளின் பராமரிப்பிற்காக சென்னையில் ஓர் உதவிப்பொறியாளரும், அவருக்கு உதவியாக இரண்டு தொழில் நுட்ப உதவியாளர்களும் இரண்டு தேர்வுநிலை வானொலி மேற்பார்வையாளர்களும் உள்ளனர்.

அரசு மூலம் அமைக்கப்படும் ஒரு குழுவே, என்ன தொலைக் காட்சிப் பெட்டி வைக்கலாம் என்பதை ஆராய்ந்தறிந்து அறிவிக்கும். அதன்படி, வசதியுள்ள ஊராட்சி மன்றங்கள் தங்கள் சொந்தச் செலவிலும், வசதியற்றவை ஊராட்சி ஒன்றிய உதவியுடனும் தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கி மக்கள் நலன் கருதிப் பொதுவிடங்களில் தகுந்த பாதுகாப்போடு அமைக்கின்றன.

சாதிமத பேதம் நீங்கிட வேண்டும் என்ற கருத்தில், இந்த தொலைக்காட்சிப் பெட்டிகள் ஆதிதிராவிடர் குடியிருப்புக்களை ஒட்டியே அமைக்கப்பட வேண்டுமென அரசு ஆணையிட்டுள்ளதும் இங்கே கவனத்தில் கொள்ளத் தக்கதாகும்.



தென்ஆர்க்காடு , வடஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் - தொலைக்காட்சிப் பெட்டிகள் இருக்குமிடம் தவிர ஏனைய ஊராட்சிகளுக்கெல்லாம் விரைவில் வழங்கப்படவிருக்கின்றன. இதற்காக அரசு 75 சதவிகிதம் மான்யம் வழங்கும்; ஊராட்சிகளின் பங்கு 25 சதவிகிதம் இருக்க வேண்டும் என்கிற நியதி அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது.

இதுவரை ஏறத்தாழ 400க்கும் மேலான தொலைக்காட்சிப்பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன என்று மேலே குறிப்பிட்டோமல்லவா! அவற்றில், கல்வித்துறை மூலமாக 1979-80, 1980-81ஆம் ஆண்டுகளில் ரூ. 75 ஆயிரம் முன்பணமாகக் கொடுத்து ஆண்டிற்குப் பதினைந்து தொலைக்காட்சிப் பெட்டிகள் வீதம் வாங்கியவைகளும் அடங்கும்.

இந்தத் தொகையை மாணவ மாணவிகளிடம் இருந்து சிறு தொகையாக வசூல் செய்து கல்வி நிறுவனங்கள் அரசுக்கு ஈடுசெய்கின்றன.

தொடக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி, கல்லூரி ஆகிய பல கட்டங்களில் படித்து வரும் மாணவர்களும் தொலைக்காட்சி மூலம் அளிக்கும் கல்வி ஒளிபரப்பினாலே பெரும் பயன் பெற்று வருகிறார்கள் என்பது உண்மை-வெறும் புகழ்ச்சி இல்லை.

இத்தகைய உன்னத எண்ணத்தின் அடிப்படையிலே தொலைக் காட்சிப் பெட்டிகள் அமைப்பதற்காகத் தமிழக அரசு, 1981-82 ஆம் ஆண்டிற்குக் கல்வித்துறை மூலம் ஒரு இலட்சம் ரூபாய் முன்பணமாகக் கொடுக்க இசைந்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

எனவே, இந்த ஆண்டில் இருபது பள்ளிகள், தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பெற்றுப் பயனடைய இருக்கின்றன.

ஆக மொத்தத்தில்—

ஏட்டின் மூலம் படிப்பதைவிட வானொலி மூலம் கேட்டறிவதைவிட, தொலைக்காட்சிப் பெட்டிகள் மூலம் பார்த்தறிவதிலே மக்கள் காட்டும் கல்வி ஆர்வத்தின் பிரதிபலிப்பே ஊராட்சிகள் தோறும் தொலைக் காட்சிப் பெட்டிகள் அமைப்பதில் அரசு காட்டிவரும் இந்த அக்கறையின் ஆணிவேர்க் காரணம் என்றால் தவறில்லை!



# கதர் கிராமத் தொழில்கள் வாரியம்

கடந்த ஓராண்டின் கதர் கிராமத் தொழில்கள் வாரியம் 34,513 பேருக்கு நிலையான வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளது. மேலும், கதர்த் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நூற்பு மற்றும் நெசவுக் கூலிகள் 15-8-80-ல் உயர்த்தப்பட்டுள்ளது. இதன் பயனாக நூற்போருக்கு ஏறத்தாழ ரூ.5ம், நெய்வோருக்கு ரூ. 15-ம் கிடைக்கும். இம்மாதிரியே சோப்புத் தொழில், கைக்காகிதத் தொழில், பனைத்தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊதிய விகிதங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டில் 34 கிராமிய நூற்பு நிலையங்களும், 2 பட்டு உற்பத்தி அலகுகளும் புதிதாகத் துவக்கப்பட்டுள்ளன. தற்போது 362 கிராமிய நூற்பு நிலையங்கள் செயல்படுகின்றன. இதன் மூலம் கிராமப்புறங்களில் பெரும் பாலும் பெண்களுக்கு நிலையான வேலைவாய்ப்பு ஏற்படுத்தித்தரப்பட்டுள்ளது. 1979-80-ல் ரூ. 519 இலட்சமாக இருந்த கதர் உற்பத்தி, 1980-81ல் ரூ. 698 இலட்சமாக உயர்ந்துள்ளது. அதுபோன்றே இவ்வரசு எடுத்த சிறப்பு முயற்சியின் காரணமாக, ரூ. 615 இலட்சமாக இருந்த விற்பனை, ரூ. 693 இலட்சமாக உயர்ந்துள்ளது. 1979-80-ல் ரூ. 32 கோடியாக இருந்த கிராமப் பொருட்களின் உற்பத்தி, 1980-81-ல் ரூ. 41 கோடியாகவும், ரூ. 35 கோடியாக இருந்த விற்பனை ரூ. 45 கோடியாகவும் உயர்ந்துள்ளது. வளர்ந்து வரும் நாட்டுச் செக்கு எண்ணெய்யின் தேவையைக் கருத்தில் கொண்டு ஆறாவது திட்டக் காலத்தில் 10.000 மின்விசைச் செக்குகளை விநியோகிக்கும் பெரியதொரு திட்டத்தை வாரியம் வகுத்துள்ளது. இதுகாறும் 2,270 மின்விசைச் செக்குகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 400 மின்விசைச் செக்குகள் தயாரிக்கும் பணியினை ''டான்சி'' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கதர் கிராமத் தொழில்களில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் ஊதியத்தைப் பெருக்கவும் மேலும் பலரை இத்தொழிலில் ஈடுபடுத்தவும் ஆராய்ச்சியைப் பெரும் அளவில் அரசு மேற்கொண்டுள்ளது.

பனம் நுங்கினைப் பாதுகாப்பதற்கும் பழுதின்றி இயங்கும் மின்விசைச் செக்கினைத் தோற்றுவிக்கவும், கதரின் தரத்தினையும் அளவினையும் பெருக்கவும், வடிவமைப்பு செய்யவும், உண்ணா எண்ணெய்யிலிருந்து தயாரிக்கப்படும் சோப்பிலுள்ள கொழுப்புத் தன்மையைப் பற்றி ஆராயவும் அரசு நிதி உதவி நல்கியுள்ளது.

பனைமரம் ஏறுவோரின் நலனைப் பாதுகாக்கவும், புதிய கைவினைஞர்களைத் தமிழகத்தில் ஏராளமாக பனை செல்வத்தைப் பயன்படுத்துவதில் ஈடுபடுத்திடவும் ஆன இரு குறிக்கோளுடைய திட்டம் பரிசீலனையில் உள்ளது. கைத்தறி நெய்வோர்களுக்கு ஒப்ப, கதர் நெய்வோருக்கும் வீடு கட்டிக் கொள்ள ரூபாய் ஐந்து இலட்சமும், நூற்போர் நெய்வோர்களின் ஊதியத்தைப் பெருக்கவும்பஞ்சுடைத்துபட்டை போடும் கருவியை நிறுவிட ரூபாய் ஐந்து இலட்சமும், கொங்கம்பாளையத்திலுள்ள தோல் பதனிடும் அலகினை விரிவாக்க ரூ. 21.12 இலட்சத்தினையும் இவ்வரசு நிதி உதவியாக அளித்துள்ளது.

சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கு அவரவர் குடும்பத் தொழிலிலேயே பயிற்சி அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் புதியதாக ஒரு இணை இயக்குநர் பதவியும், 28தொழில் நுட்பப் பதவிகளும், ஏற்படுத்தப்பட்டுள்ளன. பல ஆண்டுகளாகப் பதவி உயர்வு பெறாமல் இருந்த 200 பேர்களுக்கு பதவி உயர்வு தரப்பட்டுள்ளது. ஊழியர்களின் பல பணிப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் புதியதாக ஒரு மாவட்ட அலுவலகம் துவக்கப்பட்டு அத்திட்டத்தை அம்மாவட்டத்தில் தீவிரமாகச் செயலாற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப் பாங்கான பகுதித் திட்டம் முதலிய சிறப்புத் திட்டங்களையும் இவ்வாரியம் செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

கதர் கிராமத் தொழில்கள் மூலம் கிராமப்புறங்களில் குறைந்த மூலதனத்தில் கிராம மக்கள் இருக்கும் இடத்தைவிட்டு இடம் பெயராமலேயே அதிக அளவில் வேலைவாய்ப்புத் தர முடியும் என்பதை அரசு நன்கு தெரிந்தமையினால் இத்திட்டங்களைச் சிறப்புற செயலாற்ற ஆவன செய்து வருகிறது.

1981-1982-ஆம் ஆண்டில் கதர் உற்பத்தி ரூ. 754 இலட்சமாகவும், விற்பனை ரூ. 810 இலட்சமாகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. கதரின் பாலியெஸ்டர் துணி தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1981-1982-ஆம் ஆண்டில் ரூ. 45 கோடி மதிப்புள்ள கிராமப் பொருட்களை உற்பத்தி செய்யவும், ரூ. 50 கோடி மதிப்புள்ள கிராமப் பொருட்களை விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1981-1982-ஆம் ஆண்டில் மேற்கொண்டு 33,000 பேர்களுக்கு நிலையான வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரவும் திட்டமிடப்பட்டுள்ளது..







# அஞ்சல் தலையின் கதை!

இந்தியாவில் அஞ்சல் தலைகள் முதன் முதலாக 1852-ல் வெளியிடப்பட்டது. பம்பாய் பிரசிடெண்ட்ஷிப்பின்கீழ் இயங்கிய சிந்து பிரதேசத் தலைமை ஆணையர் சர் பார்ட்டில் ஃப்ரெரெ சிந்து பிரதேசத்தில் பயன்படுத்தக் கூடிய வட்ட வடிவமான அஞ்சல் தலைகளை அறிமுகப்படுத்தினார்.

“சிந்து டாக்டஸ்” அஞ்சல் தலைகள் என்று அழைக்கப்படும் இவை தற்போது மிகவும் அரிதானவை. ராணி எலிசபெத்தின் உருவந் தாங்கிய இந்த அஞ்சல் தலைகள் கல்கத்தா மிண்ட்டில் அச்சிடப்பட்டு இந்தியாவில் அப்போதைய துணைத் தலைமை மேற்பார்வையாளர் சர் ஹென்றி வில்லியரின் மேற்பார்வையில் இயங்கியது.

அனைத்து இந்தியப் பகுதிகளுக்கும் பொதுவான கிழக்கிந்தியக் கம்பெனியின் அஞ்சல் தலைகள் 1854ல் வெளியிடப்பட்டன. இந்திய அஞ்சல் தலைகள் சில ஆண்டுகளுக்குக் கல்கத்தாவிலும், அதன்பின் இலண்டன் நிறுவனமான தாமஸ் லா ரூ விலும் அச்சிடப்பட்டது. 1926, நாசிக்கில் இந்தியப் பாதுகாப்பு அச்சுக் கூடம் நிறுவப்பட்டு, அஞ்சல் தலைகள் அச்சிடப்பட்டன.

விடுதலைக்குப்பின், முதல் அஞ்சல் தலை 1947 நவம்பர் 20ஆம் தேதி வெளியிடப்பட்டது. இந்த அஞ்சல் தலையில் சுதந்திர இந்தியாவின் கொடி சித்திரிக்கப்பட்டது. இந்திய விடுதலையின் முதல் ஆண்டு விழாவான 1948 ஆகஸ்ட் 15-ஆம் தேதி அன்று தேசப்பிதாவின் நினைவாக நான்கு அஞ்சல் தலைத் தொகுப்பு ஒன்று வெளியிடப்பட்டது.

அஞ்சல் தலைகளில் சித்திரிக்கப்பட்ட தலைவர்களில் மகாத்மா காந்தியும், பண்டித நேருவும் முதலிடம் பெறுகின்றனர்.

இந்தியாவில் அஞ்சல் தலை சேகரிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க, அஞ்சல் தந்தித்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றது. 30 அஞ்சல் தலை அலுவலகங்கள் 140 அஞ்சல் தலை ‘கவுண்டர்கள்’ ஆகியவற்றைக் கொண்ட ஒரு பெரிய நாடு இந்தியா. இதுமட்டுமின்றி பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான், மேற்கு ஜெர்மனி, பிரான்சு, ஸ்பெயின், ஆலந்து, சுவிட்சர்லாந்து மற்றும் ரஷ்ய நாடுகளில் விற்பனையை ஊக்குவிக்க அஞ்சல் தலை முகவர்களும் பணிபுரிந்து வருகின்றனர். 1980-ல் அஞ்சல் தலை விற்பனை சுமார் 1.90 கோடி ரூபாயாகும். சர்வதேசப் பொருட்காட்சிகளில் இத்துறை பூர்வமான முகவர்களின் மூலம் விற்பனை செய்யப்பட்ட இந்திய அஞ்சல் தலைகளின் விற்பனை மதிப்பு மட்டும் 8.50 இலட்ச ரூபாய்.

# இனிமை!

இனிய சொற்கள் குறிஞ்சி மலர்கள்
இழிந்த சொற்கள் நெருஞ்சி முட்கள்!
இனிய சொற்கள் கொண்டு நீங்கள்
இயற்ற வேண்டும் வாழ்வுஅறங்கள்!

நல்ல சொற்கள் வெல்லக் கட்டி
நசிந்த சொற்கள் கசக்கும் எட்டி!
வெல்லச் சொற்கள் கொண்டு நீவிர்
வெல்ல வேண்டும் வாழ்க்கை மீதில்!

கனிந்த மொழிகள் நீரோடைகள்
கசந்த மொழிகள் கடுங்கோடைகள்!
பணிந்த மொழிகள் நீவிர் கொண்டு
பயிரைச் செய்ய வேண்டும், தொண்டு!

தூய சொற்கள் இளைய நுங்கு
தீய சொற்கள் தீயின் கங்கு!
நேய சொற்கள் கொண்டே இங்கு
நிலை நாட்டுக புகழ் ஒருங்கு!

—புலவர் சா. அடல் எழிலன்

# பேசும் பல்

எஸ். எஸ். இராமசாமி

அறிவியல் அரங்கம்

பேசுவதற்கு நாக்குத் தான் இன்றியமையாத உறுப்பு என்று நாம் இதுவரைக் கருதி வந்தோம். ஆனால், இன்று பல் பேசும் புதுமையை அறிகிறோம். விஞ்ஞான உலகில் இக்காலத்தில் பல் மருத்துவம் ஒரு தனிப் பிரிவாக அமைந்துவிட்டது. செயற்கைப் பல் கட்டுவது ஒருபுறமிருக்க, இயற்கைப் பல்லைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளைக் கண்டுபிடிப்பதில் முனைந்திருக்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள். மிக நுட்பமான ஆராய்ச்சியில் ஈடுபட்டும் வருகிறார்கள். இதன் விளைவாகப் 'பேசும் பல்' உருவாகியிருக்கிறது.

விஞ்ஞானிகள் தங்களுடைய திறமையினால் உருவாக்கியுள்ள பல்லில் ஆறு நுண்ணிய ரேடியோ ஒலிபரப்புச் சாதனங்கள் காணப்படுகின்றன. ஒரு சாதாரண கடைவாய்ப் பல்லைப் போன்று அது தோற்றமளிக்கிறது. அதனுள் 28 மின்னணு உறுப்புகளும் இரண்டு 'பாட்டரி'களும் இருக்கின்றன.

இதனைச் சிகிச்சை பெறுபவரின் வாயில் பொருத்திவிட்டால், இப்பல்லின் உதவியினால் அவர் உணவை நன்கு மென்று உண்ண முடியும். அப்பொழுது ஏற்படக் கூடிய அழுத்தங்களையும் மேற்பரப்பில் தாக்கும் விசைகளையும் கணக்கிட்டு தகவல் தெரிவிக்கும் 'டெலிமீட்டர்' சாதனங்கள் மூலம் ஆராய்ச்சி நடத்துவதற்குத் தகவல்கள் கிடைத்து வருகின்றன.

ஆனால், இந்தப் பல் ஒலிபரப்பும் தூரம் குறுகிய வரம்பிற்கு உட்பட்டதாகவே இருக்கிறது. ஆய்வுக் கூடத்தில் பரிசோதனைகள் நடைபெறுகின்றன. சிறிய பையொன்றில் எடுத்துச் செல்லக் கூடிய மற்றொரு கருவியையும் விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர். இந்தப் பல் பொருத்தப்பட்டவர் எவ்வித இடையூறும் இன்றி வழக்கம்போல் தம்முடைய அலுவல்களைக் கவனிக்க முடியும். ஆனால், பல் மருத்துவர் அவருடைய பல் கூறும் மருத்துவ நுட்பங்களை வெகு தொலைவிலிருந்து கேட்டுக் கொண்டிருக்கலாம்பின்னர் மருத்துவ யோசனைகளைக் கூறலாம்.

அமெரிக்க மருத்துவ நிபுணர் டாக்டர் மேஜர் எம். ஆஷ் என்பவரும், பொறியியல் வல்லுநர் ஸ்காட் என்பவரும் சேர்ந்து இவ் விஞ்ஞானப் பல்லைத் தயாரித்துள்ளனர். இதற்கு இரண்டு ஆண்டுக் காலம் பிடித்தது. பல் மருத்துவ தேசியக் கழகம் அவர்களுக்குப் பொருள் உதவி அளித்தது.

### வண்ணப் பொன்னிழைகள்

பட்டு உற்பத்தியின் இரகசியம் 2000 ஆண்டுகளுக்கு முன்பே, சீனாவுக்கு மட்டும் தெரிந்திருந்தது. இதனைச் சீனர்கள் வெகு காலம் பாதுகாத்து வந்தனர். பின்னர் இந்த இரகசியம் ஜப்பான், பிரான்ஸ், இத்தாலி, இந்தியா முதலிய நாடுகளுக்கு எட்டியது. நீண்டகாலமாக இயற்கைப் பட்டை உற்பத்தி செய்துவந்த மனிதன் தற்செயலாகச் செயற்கைப் பட்டைக் கண்டுபிடித்துவிட்டான்! இக்காலத்தில் நவநவமான செயற்கை நார்களையும் ( Artificial Fibres ) நைலான் போன்ற பொன்னிழைகளையும் தயாரித்து வருகிறான்.

'நைலான்', 'டெக்ரான்', 'டெரிலீன்', 'ஆர்லான்'போன்ற வகை வகையான செயற்கைப் பட்டுத்துணிகளும், ஆடைகளும் இன்று நமக்குப் பயன்படுகின்றன. இவை யாவும் இரசாயன முறையில் தயாரிக்கப்படுகின்றன என்றால் நமக்கு வியப்பாக இருக்கிறதல்லவா!

இவை கண்டுபிடிக்கப்பட்டதே ஒரு விஞ்ஞான விந்தை நிகழ்ச்சியாகும். 1884ஆம் ஆண்டில் ஜோஸப் ஸ்வான் என்னும் ஆங்கிலேயர் மின் விளக்கிற்கு ஏற்றதொரு இழையைக் (Filament) கண்டுபிடிக்க முயன்று வந்தார். வெடிபஞ்சு அல்லது 'நைட்ரோ-செலுலோசை' காடியில் ('வினிகர்') கரைத்து நுண்ணிய துவாரங்கள் வழியாக 'ஆல்கஹால்' ஊற்றப்பட்ட தொட்டியில் தெளித்து வந்தார். இதன் விளைவாக இரசாயனப் பொருள்கள் ஒன்றிணைந்து நீண்ட மெல்லிய இழைகள் தோன்றின. ஆனால், மின்சார விளக்கிற்குத் தேவைப்பட்ட இழைகளுக்குப் பதிலாக, புதிய செயற்கை நார் கிட்டியது. இவ்வாறு செயற்கைப் பட்டுத் தயாரிக்கும் வாய்ப்பு உண்டாயிற்று. ஸ்வான், தொழில்துறையைச் சேர்ந்தவரல்லர். எனவே, இக்கண்டுபிடிப்பைப் பயன்படுபடுத்தத் தவறிவிட்டார்.

அதே சமயத்தில் பிரெஞ்சுக்காரர் ஒருவருக்கு இதே எண்ணம் உதித்தது. அவர் இம் முறையைப் பயன்படுத்தி ஒரு தொழிலதிபராக மாறிவிட்டார். செயற்கைப் பட்டு உற்பத்திக்கென்று 1901 ஆம் ஆண்டில் ஒரு தொழிற்



சாலையை நிறுவினார். இப் பொழுது 30 நாடுகளில் 450 கோடி ராத்தல் செயற்கைப் பட்டுக்குமேல் உற்பத்தி செய்யப்படுகிறது.

1939ஆம் ஆண்டில் 'டு பாண்டி நெமர்ஸ்' என்ற நிறுவனம் நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை வாயு ஆகியவற்றிலிருந்து இரசாயன முறையில் ஒருவகைச் செயற்கை நாரைத் தயாரித்தது. இதற்கு முதலில் 'நோரூவின்' என்று பெயரிட்டனர். பின்னர் இதன் பெயர் ''நைலான்'' என்று மாறி நிலைத்து விட்டது!

'நைலான்' பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டு மார்க்கெட்டிற்கு வந்ததும், பெண்கள் அணியும் ஆடையில் பல புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டது. இது உறுதியானதாகவும், சீக்கிரத்தில் உலரக் கூடியதாகவும் இருக்கிறது நீடித்தும் உழைக்கக் கூடியது. பல வண்ணங்களில் தயாராகின்றது. ஆண்களும் பெண்களும் இதனைப் பெரிதும் விரும்புகின்றனர். மேலும் 'டெக்ரான்', 'டெரிலீன்' போன்ற இழைகளினால் துணிகள் நெய்யப்படலாயின. இவற்றில் சுருக்கம் விழுவதில்லை. 'இஸ்திரி' போட வேண்டிய அவசியமும் இல்லை.

---

## இந்திய விமானப் படை

இந்திய விமானப்படை உலகிலேயே நான்காவது பெரிய விமானப்படையாகும். இது 45 ஸ்குவாட்ரன்களைப் பெற்றுள்ளது. வெகுண்டு விமானங்கள், பின்பற்றித் துரத்தும் விரைவு விமானங்கள், போர் புரியும் வெடிகுண்டு விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் ஆகியவை இதில் அடங்கும்.

மிக்-21 விமானமும் மற்றும் அதன் வகைகளான அஜீத், (நாட் விமானத்தின் வளர்ச்சியில் உருவானது) ஹண்டர்ஸ், மாருட்ஸ், சுக்கோயில், கான்பெர்ராஸ், ஏ. என்-12எஸ், ஃபேர் சைல்டு பேக்கட்ஸ், டாக்கோடாஸ், காரிபன்ஸ், ஹெச். எஸ். 748 எஸ். (ஆவ்ரோ) மற்றும் டியு-124எஸ் ஆகியவைகள் விமானப் படை செலுத்தும் முக்கியமான விமானங்களாகும்.

எட்டமுடியாத தூரங்களிலுள்ள வட்டாரங்களில் ஏ. ஏன். 12எஸ், ஃபேர்சைல்டு பேக்கட்ஸ், டகோடாஸ் மற்றும் கார்ரிபஸ் எம். ஐ. 8 எம். ஐ.-4 மற்றும் சேட்டாக் ஹெலி காப்டர்கள் பணியாற்றுகின்றன. மேலும் இவைகள் விபத்தில் பாதிக்கப் பட்டவர்களை மீட்கும் நிவாரணப்பணிகளிலும் ஈடுபடுகின்றன.

உள்நாட்டிற்குள் முக்கிய பிரமுகர்களை ஏற்றிச் செல்ல தலைநகரிலுள்ள தகவல் தொடர்பு ஸ்குவாட்ரனின் பிஎஸ் 748 எஸ். மற்றும் டியு-124 எஸ் விமானங்கள் செயல்படுகின்றன.

ஐதராபாத்தில் உள்ள விமானப் படை அகாடமி, பெங்களூரில் உள்ள விமானப்படை, தொழில் நுட்பக்கல்லூரி மற்றும் சென்னை பெங்களூர், பெல்காமிலுள்ள பயிற்சிக் கழகங்கள் விமானப் படை தொழில்நுட்ப ஊழியர்கள் மற்றும் தொழில்நுட்பமல்லாத ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றன.

1982-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 8-ஆம் தேதியன்று விமானப்படையின் பொன்விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்படவிருக்கிறது.

---

# கேள்வியும்-பதிலும்!

● குவிலென்ஸ் வழியாக சூரிய ஒளி செல்லும்போது ஒளி குவியும்
புள்ளியில் அதிக வெப்பம் உண்டாகிறது. அப்படி ஒரே புள்ளியில்
பல அதிகப்படியான எண்ணிக்கையில் குவிலென்ஸ்களைக் கொண்டு
ஒளியை குவிக்க முடியுமா? அப்படி குவிந்தால் அப்போது அப்
புள்ளியில் அதிக வெப்பம் ஏற்படும் அல்லவா?

குவிலென்சுகளால் சூரிய ஒளியை குவிக்க முடியும். ஆனால் சூரியன்
நகர்ந்துகொண்டே இருப்பதால், ஒவ்வொரு லென்சிலும் சூரிய ஒளி
விழும் கோணம் மாறுபட்டுக்கொண்டே இருக்கும். சூரிய ஒளியில்
பெருமளவு உள்ள வெப்பக் கதிர்களை, லென்சுகள் உட்கொள்
கின்றன. எனவே ராக்சால்ட் (rock salt) படிக லென்சுகள் தேவைப்
படுகின்றன.

● வெளவால் பறவை இனத்தைச் சேர்ந்ததா? பாலூட்டி இனத்தைச்
சேர்ந்ததா? இதுபற்றித் தற்கால ஆராய்ச்சியின் முடிவு ஏதேனும்
உண்டா?

வெளவால் பாலூட்டி இனத்தைச் சேர்ந்தது. இதில் ஐயம் எதுவுமில்லை.

● கோழிக் குஞ்சுகள் எப்போதும் கத்திக் கொண்டே இருப்பது ஏன்?

கோழிக் குஞ்சுகள் கத்துவதால் அவற்றின் சுவாச உறுப்புக்கள்
விரிவடைந்து நன்கு வளர்ச்சியடைய உதவியாக இருக்கிறது.

● மின்னல், இடி போன்றவை ஏன் ஏற்படுகிறது? மின்னலினால் ஏற்படும்
ஒளியினால் கண்களுக்குத் தீமை ஏற்படுமா?

புவிக்கு மேலே உள்ள மேகத்தின் கீழ்ப்பகுதி புவியைக் காட்டிலும்
அதிகமான மின்னழுத்தத்தைக் (வளி மண்டலத்தில் காஸ்மிக் கதிர்களி
லிருந்து நடைபெற்ற அயனியாக்கம் போன்றவைகளினால்) கொண்
டுள்ளது. ஆகையால், புவியை நோக்கி மின்னிறக்கம் (electric
discharge) ஏற்படுகின்றது. இதன் காரணமாக மின்னல், இடி போன்ற
வைகள் ஏற்படுகின்றன. மின்னலினால் ஏற்படும் ஒளியிலிருந்து புற
ஊதாக்கதிர்களும், அகச்சிவப்புக் கதிர்களும் அதிகமாக இருப்பதால்
மின்னலைப் பார்க்கும்பொழுது நிச்சயமாகத் தீமை
கண்களுக்கு ஏற்படும்.

# பத்திரப் பதிவு

நூறு ஆண்டுகளுக்கு மேல்பணியாற்றுகின்ற சிறப்பு மிகு பதிவுத் துறை, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஏழை, எளிய மக்களுக்கும் சேவை செய்திடவும், நிலச் சீர் திருத்தச் சட்டத்தினால் பயடைந்த கிராமப்புற மக்களுக்கும் மற்றும் நகர்ப்புற மக்களுக்கும் எளிதில் பத்திரங்களைப் பதிவு செய்து கொள்ள வசதி ஏற்படுத்தவும், 15 இடங்களில் சார் பதிவாளர்கள் அலுவலகங்கள் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான 15.9.80 லிருந்து திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், கீழ்க்காணும் இரண்டு இடங்களில் மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் 15.9.80 முதல் திறக்கப்பட்டுள்ளன.

1. செங்கல்பட்டு.
2. கோபிசெட்டிபாளையம்

**கட்டடங்கள்**

சார்பதிவகங்கள் பேணப்படும் பதிவேடுகள் மிகவும் முக்கியம் வாய்ந்ததென்பதால் கீழ்க்கண்ட சார்பதிவகங்களுக்காக அரசு கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டு வேலை நடந்து வருகிறது.

1. சார்பதிவகம், திட்டக்குடி, 2. சார்பதிவகம், திருத்துறைப் பூண்டி, 3. சார்பதிவகம், மணலூர்பேட்டை 4. சார்பதிவகம், கூத்தாநல்லூர் 5. சார்பதிவகம், வடமதுரை 6. சார்பதிவகம், கெங்கவல்லி. 7. சார்பதிவகம், குள்ளஞ்சாவடி 8. சார்பதிவகம், சத்தியமங்கலம்.

**முத்திரைத் தீர்வைச் சட்டம்**

முத்திரைச் சட்டத்தின் கீழ் பெறப்படும் வழக்குகள் துரிதமாக முடிக்க வேண்டி, வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட பின் 1.12.80முதல் முத்திரைத்தீர்வை சட்டத்தின் நிர்வாகம் பதிவுத் தலைவருக்கே அளிக்கப்பட்டுள்ளது.

**தணிக்கை**

துறையின் கணக்குத் தணிக்கையை மேம்படுத்த வேண்டி 22 தணிக்கை சார்பதிவாளர்களின் பதவி, மாவட்டப் பதிவாளரின் தகுதிக்கு உயர்த்தப்பட்டுள்ளன. நிர்வாகம் திறம்பட செய்யப் படவேண்டி 4 துணைப் பதிவுத் துறைத் தலைவர்கள் இடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்துறையின் நுட்பத் தன்மையுடையபணியினைக் கருத்திற் கொண்டு, துணைப் பதிவுத் துறைத்தலைவர் தகுதியில் ஒரு சட்ட அதிகாரி பதவி வழங்கப்பட்டுள்ளது.

1981-82ல் 15 சார்பதிவகங்கள் திறக்கவும், 2 மாவட்டங்கள் ஆரம்பிக்கவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**சங்கங்கள்**

32 கோடி ரூபாய் சொத்து மதிப்பும் ஆண்டுக்கு 24 கோடி ரூபாய் வருமானமும் கொண்டு 5 இலட்சம் உறுப்பினர்களுடன் 16000 சங்கங்கள் இயங்குகின்றன.

இச்சங்கங்களின் நிர்வாகப் பணிகள் சீராக நடைபெற வேண்டுமென்பது இத்துறையின் சீரிய நோக்கம். இவற்றின் நேரிய நிர்வாகத்தை மேற்பார்வை இடுவதற்குப் பதிவுத்துறை மூலம் 38 சார்பதிவாளர்களை அரசு நியமித்துள்ளது.

1980 ஏப்ரல் முதல் 31.12.80 வரை மொத்தம் 8,06,740 ஆவணங்கள் பதிவாகியுள்ளன. 31.12.80 முடிய பல்வேறு சட்டங்களின் கீழ் வருமானம்:

| | இலட்சத்தில் |
|---|---|
| 1. சீட்டு நிதி | 11.03 |
| 2. சங்கப் பதிவு | 1.28 |
| 3. தனித் திருமணச் சட்டம் | 0,05 |
| 4. இந்து திருமணச் சட்டம் | |
| 5. ஜனன மரண திரு மணச்சட்டம் | 0.19 |
| 6. பதிவுச் சட்டம் | 528.08 |

**தமிழ்நாடு சீட்டு நிதிச் சட்டம் 1961**

தமிழ்நாடு சீட்டு நிதிச் சட்டம் (1961) பதிவுத்துறையில் நிர்வகிக்கப்படுகிறது. பதிவுத்துறைத் தலைவரே இச்சட்டத்தின் கீழ் சீட்டு இயக்குநராக உள்ளார். 31.12.80 அன்று 17235 சீட்டுகள் நடைமுறையில் இருந்தன. இவற்றின் மொத்த சீட்டுத் தொகை ரூ. 13,82,95,211.00 சீட்டுக் கம்பெனிகள் சீட்டுகள் சரிவர நடத்தப்படுவதற்காக ரூ. 12,84,10,444 பிணையமாகச் செலுத்தியுள்ளார். இதில் ரூ. 2,65,53,302 கருவூலத்தில் ரொக்கபிணையமாகச்செலுத்தப் பட்டுள்ளது. மேற்படி காலத்தில் பதிவுறாச் சீட்டுகள் நடத்தியமைக்காக64வழக்குகள்தொடரப் பட்டன. இதனில் 31 வழக்குகளில் தண்டனை அளிக்கப்பட்டது. ஒரு வழக்கில் குற்றவாளி விடுதலை செய்யப்பட்டார். இதர ஒழுங்கீனங்களுக்காக 2248 வழக்குகள் உரிய நீதி மன்றத்தில் தொடரப்பட்டது. இதில் 2247 வழக்குகளில் தண்டனை அளிக்கப்பட்டது. 3 வழக்குகளில் குற்றவாளி விடுதலை செய்யப்பட்டனர். இவ்வழக்குகளில் ரூ. 55,620 தண்டனையாக வசூலிக்கப்பட்டது.

**தமிழ்நாடு சங்கப் பதிவுச் சட்டம் 1975**

தமிழ்நாடு சங்கப் பதிவுச் சட்டம் பதிவுத்துறைத் தலைவரால் நிர்வகிக்கப்படுகிறது. 31.12.80 முடிய 28,358 சங்கங்கள் நடைமுறையில் இருந்தன. துறை அலுவலர்களால் 7,202 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இச் சட்டத்தின் கீழ் பணியாற்றியமைக்காக கட்டணம் மூலமாக ரூ. 1,69,967.40 வரவு வந்தது. இச்சட்டத்தையும் சீட்டு நிதிச் சட்டத்தையும் நன்கு அமல் படுத்தவதற்காக 38 சார்பதிவாளர்கள் பணியிடம் அனுமதிக்கப்பட்டது.

பத்திர நகல் எழுதுபவர்களுக்கான உரிமம் வழங்க பதிவுத் துறைத் தலைவர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மாவட்டப் பதிவாளர்கள் உரிமங்களை ஓராண்டிற்குப் புதுப்பிக்க அதிகாரம்அளிக்கப்பட்டுள்ளனர். உரிமம் உடையவர்களின் பணி திருப்திகரமாய் இல்லாவிட்டாலோ அல்லது நன்னடத்தையில்லாவிடிலோ உரிமத்தைத் தற்காலிகம் நிறுத்திவைக்கவோ, அல்லது ரத்து செய்யவோ பதிவுத் துறைத் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 8,000 உரிமம் பெற்றவர்கள் இப்பணியில் உள்ளனர்.



# கால்நடைச் செல்வம்

காால்நடைப் பராமரிப்பு முன்னேற்றத் திட்டங்களின் மூலம் சிறு-குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களுக்கு உதவி நல்கி, அதன் மூலம் கிராமப்புறங்களை நலன் பெறச்செய்வதில் தமிழக அரசு 1977-முதல் முக்கியத்துவம் அளித்து வருகிறது. கால்நடை வளர்ப்போருக்கும் விவசாயிகளும் கால்நடை பராமரிப்புத்திட்டங்களின் வாயிலாக மேம்படும் வகையில் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. 1977-ஆம் ஆண்டில் அடைந்த குறிப்பிடத்தக்க சாதனைகளில் சில, சுருக்கமாகக் கீழே கொடுக்கப்படுகின்றன:

### 1977-ஆம் ஆண்டின் சாதனைகள்:

50ஜெர்ஸி இளங்காளைகளும், 2 காளைகளும் ஆஸ்திரேலியாவிலிருந்து பெறப்பட்டு, ஈச்சங்கோட்டையில் அயலினக் கால்நடை வளர்ப்புப் பண்ணை துவங்கப்பட்டது. 15 கேந்திர கிராம நிலையங்களும் 1 தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டமும் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டன. 12 கால்நடை மருந்தகங்கள் கூடுதலாகத் திறக்கப்பட்டு, 5 கால்நடை மருந்தகங்கள், மருத்துவமனைகளாகவும், 1 மருத்துவமனை, பிரதம மருத்துவமனையாகவும் உயர்த்தப்பட்டதன் மூலம் கூடுதல் கால்நடை மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டன.

மிகத் துரிதமாகவும், கவனத்துடனும் நோய்களைக் கண்டறியும் நோக்குடன் முதன் முறையாகத்தமிழகத்தில் 4 கால்நடை நோய் புலனாய்வு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. 4 வெக்கை நோய் சோதனைச் சாவடிகள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டதன் மூலம் வெக்கை நோய் ஒழிப்புப் பணிகள் விரிவுபடுத்தப்பட்டன. இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த்தடுப்பு மருந்து நிலையத்தில் முதன் முறையாக வெறிநோய் ஒன்றை ஊசிதடுப்பு மருந்து பி.பி.எல்.ஓ. ஆண்டிஜன், ஆட்டம்மை தைராய்டு செல் கல்ச்சர் தடுப்பு மருந்து ஆகியவை தயாரித்தது குறிப்பிடத்தக்க சாதனையாகும். கடந்த ஒரு வருடத்தில் கால்நடை பராமரிப்புத் திட்டங்கள் புதிய உத்தேவகம் பெற்றுள்ளது. அவைகளின் சுருக்கம் கீழே கொடுக்கப்படுகிறது:—

### மாட்டின் வளர்ச்சி:

ஓங்கோல் மாடு தமிழகத்திலுள்ள கால்நடை வளர்ப்போரின் நலனுக்காக, இரட்டைப் பலன்தரும் ஓங்கோல் மாடுகள் வாங்கப்பட்டு, சின்ன சேலத்திலுள்ள ஆட்டுப் பண்ணையில் வளர்க்கப்படுகின்றன.

### வம்சாவழி ஆய்வுத திட்டம்-எருமை

தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒரத்தநாடு மாவட்டக் கால்நடைப் பண்ணையில் 37.15 இலட்சம் ரூபாய் செலவில் எருமையினங்களுக்கான வம்சாவழி ஆய்வுத் திட்டம் ஒன்று துவங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம்:

தேர்ந்தெடுக்கப்பட்ட பால் வளப் பகுதிகளில் ஒருங்கிணைந்த கால்நடை வளர்ச்சிக்காகக் கூடுதல் வசதிகள் அளிக்கும்படி இயங்கிவரும் 7 தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டங்களுடன், மேலும் 2 திட்டங்கள் துவங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### கேந்திர கிராம திட்டம்:

தஞ்சை மாவட்டத்திலுள்ள நன்னிலம், குடவாசல், திருவாரூர், நாகப்பட்டினம், மன்னார்குடி ஆகிய இடங்களில் மேலும் 5 கேந்திர கிராமத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன.

### செயற்கை முறை கால்நடை இன விருத்தியில் உறைவிந்து தொழில் நுட்ப முறை கையாளுதல்:

38.81 இலட்சம் ரூபாய் செலவில் டென்மார்க் அரசு உதவியுடன், தஞ்சை மாவட்டத்தில் ஈச்சங்கோட்டையிலுள்ள அயலினக்கால்நடை வளர்ப்புப் பண்ணையில் உறைவிந்து வங்கி ஏற்படுத்தப்பட்டது. டென்மார்க் அரசு 20.03 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள உறைவிந்து உபகரணங்களை நன்கொடையாக வழங்கியதுடன் தொழில் நுட்ப முறையில் உதவியும் அளிக்கிறது. முதற்கட்டமாக, பண்ணையைச் சுற்றிலும் உள்ள பகுதுகளை உள்ளடக்கி 50 கிளை நிலையங்களுடன் இவ்வங்கி செயல்படும். திருநெல்வேலியிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் 14.55 இலட்சம் ரூபாய் செலவில் திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்து நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



**அயிலின மற்றும் முர்ரா காளைகள் வாங்குதல்:**

கால்நடை வளர்ப்புத் திட்டத்தில் கலப்பினத் திட்டங்களை ஆற்றுவதுடன் செயல்படுத்தும் பொருட்டு 7.26 இலட்சம்ரூபாய் செலவில், 103 ஜெர்ஸி காளைகளும்,3 ஹோல்ஸ்டீன் ப்ரிஸியன் களும், 25 முர்ரா எருமைகளும் வாங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**இளங்கிடேரிகள் உற்பத்தி:**

ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டம் மற்றும் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏழை விவசாயிகளுக்குத் தேவையான கலப்பினக் கிடேரிகளை வழங்கும் நோக்குடன், தரமுள்ள கிடேரிகளை உற்பத்திசெய்யும் திட்டம் 19.72 இலட்சம் ரூபாய் செலவில் புதுக்கோட்டை மற்றும் உதகமண்டலம் பண்ணைகளில் துவங்கப்பட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**ஆடு வளர்ப்பு:**

முறையாக, தகுந்த இடைவெளிக் காலங்களில் தொடர்ந்து ஆடுகளுக்குக் குடற்புழு நீக்கம் செய்யப்படுவதால், ஆடுகளின் எடை அதிகரிக்கப்பட்டு, ஆடு வளர்ப்போர் கூட்டுறவு கூடுதல் இலாபம் பெறுகின்றனர். இந்நோக்குடன் 1979-80 முதல் பெருமளவில் குடற்புழு நீக்கும் திட்டமொன்று தமிழகத்திலும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1980-81ல் 3.75 இலட்சம் ரூபாய் செலவில், திருச்சி, புதுக்கோட்டை, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது.

வெள்ளாடுகள் இறைச்சியும், பாலும் அளிக்கும் திறன் பெற்ற காலநடையாகும். எனவே முதன் முறையாக 1980-81ல் 15.98 இலட்சம் ரூபாய் செலவில் அடிப்படை இருப்பதாக 200 ஜமுனாபாரி வெள்ளாடுகளுடன் புதுக்கோட்டையிலுள்ள மாவட்ட கால் நடைப்பண்ணையில் 'வெள்ளாடு வளர்ப்பு நிலையம்' ஒன்று துவங்குவதற்கான திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**ஆடு வளர்ப்போருக்கு குறுகிய காலப் பயிற்சி:**

குறுகிய காலப் பயிற்சி அளிக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஆடு வளர்ப் போருக்கு, ஆடு வளர்ப்பில் பயிற்சி அளிக்கும் நிலையமொன்று சின்னசேலம் ஆட்டுப் பண்ணையில் துவங்கப்பட உள்ளது.

**கோழி வளர்ப்பு:**

கோழி வளர்ப்புத் தொழில் தமிழகத்தில் உத்வேகம் பெற்று வருகிறது. எனவே கோழி நோய்களினால் ஏற்படும் நஷ்டத்தைத் தடுப்பதற்கான துரித வசதிகளை அளிப்பதில், பெருங் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. நோய் கண்டறியும் வசதிகள் அளித்தல் கோழி வளர்ப்போரின் அவசரத் தேவையாகும். எனவே பெரியார் மாவட்டத்தில் கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடம் ஒன்று துவங்கப்பட உள்ளது.

**பன்றி வளர்ப்பு:**

உள்ளூர் இனப் பன்றிகளின் தரத்தை உயர்த்தும் பொருட்டு, முதற்கட்டமாக 125பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு ஒவ்வொரு வெள்ளை யார்க்ஷையர் பன்றி விநியோகிக்கப்படும். இதன் மூலம் பன்றி இனவிருத்தி ஊக்குவிக்கப்படும்.

**தீவன அபிவிருத்தி;**

தற்போதுள்ள 4 தீவன விதை உற்பத்தி நிலையங்களுடன் மற்றுமொரு நிலையம் 2.93 இலட்சம் ரூபாய் செலவில் தஞ்சை மாவட்டத்தில் ஈச்சங்கோட்டையிலுள்ள அயலினக் கால்நடை வளர்ப்புப் பண்ணையில் ஏற்படுத்தப்பட்டது. மேலும் ஒரு நிலையம் கூடிய விரைவில் துவங்கப்பட உள்ளது.

**கால்நடை நோய் நீக்கப் பணிகள்:**

1980-81ல் மேலும் 10 கால்நடை மருந்தகங்கள், வாய்மேடு, குருத்தங்கோடு, வலங்கைமான், திருப்புக்குழி, டொம்பச்சேரி, கடம்பூர், லத்தேரி, சென்னப்பட்டியிலுள்ள சனிச்சந்தை, கோபாலபுரம், நாகுடி ஆகிய இடங்களில் துவங்கப்பட்டன. பெரிய வளையம், பண்ருட்டி, பெரியநாயக்கன் பாளையம், கோவில்பட்டி, பள்ளபட்டி ஆகிய 5 இடங்களிலுள்ள கால்நடை மருந்தகங்களும் அகப்பிராணி வசதிகளுடன் மருத்துவ மனைகளாகவும், காஞ்சிபுரம், நாகர்கோயில் ஆகிய இடங்களிலுள்ள 2 கால்நடை மருத்துவ மனைகள் கூடுதல் நோய் நீக்கப் பணிகள் அளிக்கும் பொருட்டு 3.47 இலட்சம் ரூபாய் செலவில் பிரதம மருத்துவ மனைகளாகவும் உயர்த்தப்பட்டன. 20 கூடுதல் புதிய கால்நடை மருந்தகங்கள் 5 கால்நடை மருத்துவமனைகள், 2 பிரதம மருத்துவமனைகள் ஆகியவைகளை ஏற்படுத்த ஒப்புதலும் அளிக்கப்பட்டுள்ளது.





# கால்நடை வேளாண்மை


டாக்டர் ச. சண்முக சுந்தரம்,
பேராசிரியர், நலவியல்துறை,
கால்நடை மருத்துவக் கல்லூரி,
சென்னை - 600 007.


**"எந்த நாட்டில் தரமான கால்நடைச் செல்வம் குறைவாக உள்ளதோ அந்த நாடு செல்வச் செழிப்புடன் இருப்பதில்லை; எந்த நாட்டில் தரமான கால்நடைச் செல்வம் அதிகம் உள்ளதோ அந்த நாடு ஏழ்மை அடைவதில்லை."**

**— "அராபிய தத்துவ மொழி"**

**கா**ல்நடைகள் ஒரு நாட்டின் செல்வம் என்று கருதலாம். இதையே வள்ளுவர் "மாடல்ல மற்றயவை" என்று குறளிலே மேற்கோள் காட்டியுள்ளார். மேலே கூறப்பட்டுள்ள அராபியத் தத்துவ மொழியை உலகத் தத்துவ மொழியாகத் தற்சமயம் மாற்றிக் கொள்ளலாம். மனிதனுடைய வாழ்க்கை வெற்றியாகவும், அவன் வளர்க்கும் கால்நடைச் செல்வங்களால் ஏற்பட்டது என்று கூறினால் அது மிகையாகாது. இக்கால்நடைகளே, அவனுக்கு, உணவு, உடை, உழைப்பு, உரம் மற்றும் உல்லாசத்தையும் தருகிறது. முன்பெல்லாம் "வேளாண்மை என்றால், 'பயிர்த்தொழில்' செய்வதைக் குறிப்பிட்டு வருவோம். இன்று கால்நடைகளும் நம் அன்னை பூமி போல், நமக்கு வேண்டிய பால், முட்டை, இறைச்சி, கம்பளி மற்றும் தோல், உரப் பொருள்களை விளைவிப்பதால் கால்நடை வளர்ப்பையும் நாம் "கால்நடை வேளாண்மை" என்று குறிப்பிடுவது சாலப் பொருந்தும். என்று நம் முன்னோர்கள், காடு களைந்து, கழனி செப்பனிட்டார்களோ, அன்றே கால்நடை வளர்ப்பும், ஆரம்பித்து விட்டது என்று கூறலாம். காட்டிலே தறிக்கெட்டு அலைந்த விலங்கினங்களை மனிதன் தன் அறிவியல் கூர்மையால் அடக்கி, அவற்றை வீட்டிற்கு உகந்த மாதிரி மாற்றம் செய்தான். அந்த மாற்றமே இன்றைய கால் நடை வேளாண்மைக்கு 'அடிக்கல்' என்று கூறலாம்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்". இச் செல்வத்தை அடைவதற்கு நாம் சத்துள்ள புரதம் நிறைந்த உணவை உட்கொள்ள வேண்டும். உலகத்திலேயே முதன்மையான பிணித்தன்மை, சத்துணவு, இன்மையாலும், புரதச் சத்துக் குறைவாலும் என்பது நாம் அறிந்த ஒன்று. இக்குறைகளைப் போக்க விலங்கியல் புரதச் சத்தையும், ஊன், மற்றும் பால், முட்டை முதலியவற்றையும் உற்பத்திப் பெருக்கம் செய்வது நம் முதன்மையான கடமையாகும். 50 கோடிக்கு மேற்பட்ட உலகக் குழந்தைகளும், அதே அளவு பெரியவர்களும், சத்துணவு இன்மையால் அவதிப்படுகிறார்கள். குழந்தைகளுக்கு, 80 விழுக்காடு மூளை வளர்ச்சி அதனுடைய 2வது வயதிலேயே வந்து விடுகிறது. அந்நேரத்தில், நல்ல கலோரிச் சத்தும், வைட்டமீன் சத்தும், புரதச் சத்தும் அவர்களின் வளர்ச்சிக்கு அவசியம் தேவை. இவைகளை கால்நடை உற்பத்திப் பொருள்களான, இறைச்சி, பால் மற்றும் முட்டை பூர்த்தி செய்யும் என்பது விஞ்ஞானிகள் கருத்தாகும்.

**பால் பண்ணைகள் :**

முல்லை நில ஆய் மகள் ஒருத்தி, தான் வளர்த்த பசுக்கள், எருமைகள் ஆகியவற்றிலிருந்து பாலைக்கறந்து, இரவில் உறையிட்டு காலையில் அதனைக் கடைந்து மோராக்கி அருகில் உள்ள ஊர்களில் விற்று வந்ததைப் பெரும்பாணாற்றுப்படை விவரிக்கிறது.

"உறையமை தீந்தயிர் கலக்கி நுரை
தெரித்துப்
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமுட்டு இரீஇ
நாள் மோர் மாறும் நல்லமா மேனி"
—பெரும்பாணாற்றுப்படை—157-60

பால் ஒரு மிகச் சிறந்த உணவு. பாலை நன்றாகத் தூய்மை செய்யப்பட்ட கலத்தில் வைக்க வேண்டும். தூய்மையற்ற கலத்தில் பாலை வைத்திருந்தால் அது கெட்டுத் திரிந்து விடும். அதே போல் பண்பற்றவர்களிடத்தில் செல்வம் இருந்தால் அது ஒருவருக்கும் பயன் படாது என்ற கருத்தைக் குறளில் வள்ளுவர் கூறுகிறார்:



*பச்சைப் புல் தின்று வெள்ளைப்பால் தான்*
*என்ன பக்குவம் செய்வாய்?*
*வாய்க்கினிய பால் தருவாய், வயற்கு உரமும் தருவாய்.*

"வண்டி கட்ட காளையும் நீ வளர்த்து அளிப்பாய் பசுவே"

என்று பசுவைப் போற்றுகிறார், நம் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை.

பசுமாடுகள் மற்றும் எருமை மாடுகள் கறக்கும் பால் ஓர் சிறந்த உணவுப் பொருளாகும். சிறியோர் முதல் பெரியோர் வரை உட் கொள்ள பால் ஒரு சீரிய உணவு. இக்காலத்தில் பெரிய பால் பண்ணைகள் அமைத்து உயர் ரக சீமைப் பசுக்களில் இருந்துப் பாலைக் கறந்து பதனப்படுத்தி புட்டிகளில் அடைத்து மக்களுக்குக் கொடுக்கின்றனர். பால் படு பொருள்களான வெண்ணெய், நெய், தயிர், பாலாடைக் கட்டி, கோவா, குளிர்ந்த பால், பால் புவுடர், போன்றவை தயாரிக்கப்படுகினன்றன. பசுக்களைக் கொல்லாமலேயே அவற்றிலிருந்து பால் நாம் பெறுவது இயற்கையின் ஓர் அதிசயமாகும்.

முட்டைப் பண்ணை :

"பொழுதுவிடிந்தது; பொற்கோழிகூவிற்று
பூஞ்செடி கொடி வகை பாராய்;
காலை கூவி எங்களைக் கட்டில் விட்டெழுப்புவாய்
வேலை செய்ய ஏவுவாய்; வெற்றி கொண்ட கோழியே"

காலையிலே நம்மை எழுப்பும் கடிகாரம், நாம் நோயினால் வாடையிலே நம்மைக் காக்கும் நன் மருந்து முட்டை தரும் பெட்டகம். விருந்திலே உயர்ந்த சுவை தரும் (சிக்கன்) நாம் வருந்தையிலே பணம் தரும் பொன் முட்டையிடும் நம் வாத்து-கோழியே " என்று கோழியை வாழ்த்துவோம். தற்காலத்தில் பெரிய தொழிற்சாலை போல் கோழிப் பண்ணைகள் நடக்கின்றன. கோழிகளைக் கொல்லாமலேயே அடையக்கூடிய மற்றொரு உணவு முட்டையாகும். முட்டைகள் உணவுக்காகவும் குஞ்சு பொரிப்பதற்காகவும், இறைச்சி இனக் கோழி உற்பத்திக்காகவும், முட்டையினக் கோழி உற்பத்திக்காகவும், முட்டைப் பௌடர், வெண்கருத்தூள், மற்றும் மஞ்சள் கருத் தூள் தயார் செய்ய இங்கே உற்பத்தி செய்யப்படுகிறது.

இறைச்சி உற்பத்தி—ஆடுகளை வெட்டி இறைச்சியை விலைக்கு விற்ற செய்தியை ''விலை பொருட்டால் ஊன் தருவர்'' என்ற தொடர் மூலம் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். கால்நடைகளின் இறைச்சி மிருதுவாகவும், சாறு நிறைந்ததாகவும், ருசியானதாகவும் இருக்கும். மாடு, கன்று, செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி, கோழி வாத்து, வான்கோழி, முயல் ஆகியவற்றின் இறைச்சி பொதுவாக எல்லா நாட்டு மக்களாலும், விரும்பி உட்கொள்ளப்படுகின்றது. இவற்றை நன்றாக இன விருத்தி செய்து, வளர்த்து, பொது மக்களுக்குக் கொடுப்பதைக் கால்நடை வேளாண்மை என்று குறிப்பிடுவது சாலப் பொருத்தமாகும்.

கம்பளம் மற்றும் தோல் உற்பத்தி.—கம்பளங்களும், ஆடைகளும், மேல் அங்கிகளும் போர்வை மற்றும் தரை விரிப்புக் கம்பளங்களும், ஆடுகளிலிருந்து கிடைக்கிறது. ஆட்டுத் தோலைப் பதனிட்டு அதனைப் படுக்கை விரிப்பாகவும் பயன் படுத்தியுள்ளனர் என்பதை'' அதலோன் துஞ்சும் காப்பின உதல'' என்ற பெரும்பாண்-வரி-151ல் வரும் பாடலால் அறியலாம்.

உர உற்பத்தி—கால்நடைகளின் உரங்கள் நிலத்திற்கு வேண்டிய நீர்ப்பொருட்கள் நிறைந்த உரங்கள், நம் முன்னோர்கள் கால்நடைகளை ஒரு நடமாடும் உரத்தொழிற்சாலை என்று போற்றி வந்துள்ளனர். ''ஆட்டெரு அவ்வருடம்; மாட்டெரு மறு வருடம்'' என்பது பழமொழி''.

வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்களையும், கன்றார்த்திக் கல நிறை பொழி தரும் கறவைகளையும், வளர்த்து பால் வளம் பெருக்குவோம். நமக்கு உடை, உல்லாசம், உரம் மற்றும் ஊதியத்தைக் கொடுக்கும் இக் கால்நடைகளைப் பெருக்கி, இக் கால்நடை வேளாண்மையை அதிகம் பங்கேற்று நடத்தினால், நம் நாட்டின் வறுமைப் பிணி விரட்டப்படும். ஒரு வெண்மைப் புரட்சி உருவாகும் என்பதில் ஐயமில்லை.



# தமிழ்நாடு அரசுப் பண்ணைகள் கழகம்

தமிழ்நாடு அரசுப்பண்ணைகள் கழகம், கிராம மக்களுக்குக் கடன், உதவித்தொகை அல்லது மற்றைய சலுகைகள் வழங்குவதோ பொதுக் கிணறு வெட்டுதல், தொடர்புச் சாலைகள் அமைத்தல் மூதலிய திட்டங்களை மேற்கொள்வதோ கிடையாதெனினும் வளர்ச்சிப்பணியில் ஈடுபட்டுள்ளது.

தரிசாகக் கிடக்கும் அதிக அளவு விளைநிலங்களைக் கையகப்படுத்தி, பயிர்செய்து, உணவு மற்றும் வணிகப்பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதே இக்கழகத்தின் தலையாய குறிக்கோள் ஆகும்.

இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியோர்க்குக் கழகப் பண்ணைகளில் வேலைவாய்ப்பளித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் சமுதாய நோக்கம் இக்கழகத்தின் மற்றொரு தலையாய குறிக்கோள் ஆகும். 5 ஆண்டுகளில் 1232 எக்டேர் கன்னி நிலங்களைப் பயிரிடத்தக்க நிலங்களாகமாற்றியமைத்ததால் மொத்தம் 1255 எக்டேர் நிலங்கள் தற்போது பயிர் நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. 5 ஆண்டுகட்கு முன்பு இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 600 குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பளித்து மறுவாழ்வு வழங்க ஆரம்பித்து, தற்போது கழகத்தின் பல்வேறு பண்ணைகளில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 1043 குடும்பத்தினர்க்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. கழகம், நெய்வேலி, கரம்பக்குடி, திருவாரூர், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் பெரிய அளவுப் பண்ணைகளும், கொடைக்கானலில் நடுத்தர அளவுப் பண்ணையும் அமைத்து உள்ளது.

தரிசு நிலங்களைப் பயிர் நிலங்களாக மாற்றியமைப்பதால், விவசாயத் தொழிலாளர்க்கு வேலை வாய்ப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது தினமும் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 1582 தொழிலாளர்களுக்கு வேலை வழங்கப்படுகின்றது. இதுதவிர 1500 உள்ளூர் விவசாயத் தொழிலாளர்க்கும் பல்வேறு பண்ணைகளில் வேலை வாய்ப்பளிக்கப்படுகிறது.

உணவு மற்றும் வணிகப்பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பது இக்கழகத்தின் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாகும். இக்கழகம் சிறந்த தரமுள்ள நெல், நிலக்கடலை மற்றும் உளுந்து விதைகளை உற்பத்தி செய்கிறது. கடந்த ஆண்டு 10 டன் அளவு தரமுள்ள காய்கறி விதைகளை இக்கழகம் உற்பத்தி செய்துள்ளது.

# நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி!
# தொழில் வளர்ச்சிக்குத் தேவை
# டான்சி



தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

## டான்சி
**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR

# விளை பொருள் விற்பனைத் துறையின் வளர்ச்சி!



உழவர் பெருமக்கள் தம் விளைபொருளுக்கு நல்ல விலை கிடைத்திடச் செய்யும் சிறந்த நோக்குடன் உருவானதுதான் வேளாண்மை விளைபொருள் விற்பனைத் துறை.

நெற்றி வியர்வை நிலத்தில் விழ நாளெல்லாம் பாடுபட்டு விளைவித்த பொருளுக்குப் பன்னெடுங் காலமாகவே உரிய விலை கிடைக்காத நிலை இருந்து வந்தது. விளைபொருட்கள் விற்கும் சந்தைகளில் வியாபாரிகளும் இடைத்தரகர்களும்தான் ஏற்றம் பெற்று வந்தனர். இவர்கள் உழவர்களின் விளைபொருளுக்குச் சரியான எடை போடாமலும், உரியவிலை தராமலும், நியாயமற்ற முறையில் பலவித பிடித்தங்களைச்செய்தும் விவசாயிகளை நட்டத்திற்கு உள்ளாக்கி வந்தனர். இதன் விளைவால் உற்பத்தியில் ஊக்கமின்மை எங்கும் நிலவியது. உழவர்களில் பெரும்பாலோர் அதுவும் குறிப்பாகச் சிறு உழவர்கள் கடன்காரர்களாகவே ஆக்கப்பட்டனர். இவற்றை உணர்ந்த தமிழக அரசு உழவர்கள் உற்பத்தி செய்த பொருளுக்கு நல்ல விலை பெற்றுத் தர வேண்டும்; இடைத்தரகர்களின் இரும்புப் பிடியிலிருந்து இவர்களை விடுவித்து, விளைபொருட்களின் தரத்திற்கேற்ப நியாயமான விலை கிடைக்கச் செய்ய வேண்டும்; உழவர்களின் வருவாய் பெருகி, வளமான வாழ்வு பெற்றிட வேண்டும் என்பதோடு உண்போர் அனைவருக்கும் கலப்படமற்ற தரமான பொருட்களைக் கிடைக்கச் செய்தல் வேண்டும் என்ற தனது உயர்ந்த லட்சியத்தின் அடிப்படையில் இதுகாறும் விவசாயத்துறையின் ஓர் அங்கமாக இருந்து வந்த விற்பனைப் பகுதியை 1977-ம் ஆண்டு அக்டோபர் திங்களுக்குப் பின் ஒரு தனித்துறையாக அரசு தோற்றுவித்தது.

தமிழ்நாடு அரசு எடுத்த சீரிய முயற்சியால், விற்பனைத் துறை துவக்கப்பட்ட இக்குறுகிய காலத்தில் தமிழ்நாட்டில் வேளாண்மை விளைபொருள் விற்பனையில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது.

தமிழ்நாட்டில் 11 மாவட்டங்களில் இயங்கி வந்த விற்பனைக் குழுக்களின் எண்ணிக்கை அண்மையில்தான் 13 ஆக அதிகரித்தது. புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட புதுக்கோட்டை, சேலம் விற்பனைக் குழுக்கள் விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் செம்மையாகச் செயல்படத் துவங்கியுள்ளது. விளைபொருட்களை விற்கும் கேந்திரமான ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கை 1977-க்கு முன் 140 இடங்களில்தான் இருந்தன. ஆனால் இது பெருகி இன்று 216 இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

1977-க்கு முன் 71 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மட்டுமே சொந்த இடத்தில் இயங்கி வந்தன, தற்போது விரைவு நடவடிக்கை மேற்கொண்டதன் காரணமாக, 99 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குச் சொந்த இடம் வாங்கப்பட்டுள்ளது.

மேலும் 52 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கே போதுமான கட்டட வசதிகள் இருந்தன. இன்று 82 விற்பனைக் கூடங்கள் கட்டட வசதிகளைப் பெற்றுள்ளன. மேலும் 37 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.2.15 கோடிக்குக் கட்டுமானப் பணிகள் நடந்துமுடியும் தருவாயில் உள்ளன.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் வரத்துக்கள் 3.6 லட்சம் டன்னிலிருந்து நான்கு லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. விற்பனைக் குழுக்களின் வருவாய் 300 லட்சம் ரூபாயிலிருந்து 400 லட்சம் ரூபாயாக பெருகியுள்ளது 82 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் இணைக்கப்பட்டுள்ள தரம் பிரிக்கும் மையங்கள் உழவர்களின் விளைபொருட்களை இலவசமாகத் தரம் பிரித்து, நல்ல விலை ஈட்டித் தந்துள்ளன. இதனால் ஏறத்தாழ 10 லட்சம் உழவர்கள் பயன் அடைந்துள்ளனர்.

நுகர்வோருக்குக் கலப்படமற்ற தரமான 'அக்மார்க்' பண்டங்கள் கிடைக்கச் செய்யும் பணியிலும் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. இதற்கான 'அக்மார்க்' ஆய்வுக் கூடங்கள் தமிழ்நாட்டில் 20 இடங்களில்தான் இருந்தன. இன்று இது 31 இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

### வருங்காலத் திட்டங்கள்

தற்சமயம் பணியாற்றி வரும் 215 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நவீனப்படுத்தி உழவர்களுக்கு மேலும் பல வசதிகள் செய்து தர உலக வங்கியின் மூலம் ரூ. 102 கோடிக்கான திட்டம் தீட்டியுள்ளது.

மலைவாழ் உழவர்கள் தங்கள் விளைபொருட்களை விற்றுப் பயன்பெற ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் அமைக்க திட்டம் தீட்டியுள்ளது.

பெரியார், நீலகிரி மாவட்ட விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க விற்பனைக் குழுக்களை அமைக்கதிட்டமிடப்பட்டுள்ளது.

உழவர்கள் தங்கள் விளை பொருட்களைச் சேமித்துவைத்து பின்னர் நல்ல விலையில் விற்றுப் பயனடைய 75 இடங்களில் சேமிப்புக் கிடங்குகள் கட்ட திட்டமிட்டுள்ளது.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், விளைபொருளைப் பக்குவப்படுத்தி விற்க வசதியாக நெல் உலர்த்தும் ஆலைகள், கடலை உடைக்கும் இயந்திரங்கள், பருத்தி கொட்டை பிரிக்கும் எந்திரங்கள் அமைத்துக் கொடுத்தல் ஆகியவை எதிர்காலத் திட்டங்களாகும்.

# விவசாயிகள் மெச்சும் விதைச்சான்றுப் பிரிவு

ஒரு நல்ல பயிரைச் சாகுபடி செய்வதற்கு விதை அடிப்படையாகும். இனத்தூய்மையுடன் நல்ல முளைப்புத் திறனும் நோய் தாக்கப்படாத தன்மைகளை விதைகள் இன்மை ஆகியவையும் கொண்ட சுத்தமான விதைகளைப் பயன்படுத்தினால் நோயற்ற தன்மையுடன் நல்ல விளைச்சல் தரக்கூடிய பயிர் உருவாகிறது. விதைப்பதற்காக வாங்கப்படும் விதைகளில் இத்தகைய குணங்களை விவசாயிகளுக்கு உறுதி செய்வது அவசியம். தரக்குறைவான விதைகள் விற்கப்படுவதிலிருந்து விவசாயிகளைப் பாதுகாப்பது அரசின் கடமை. இந்தக் கருத்துடன் இந்திய விதைச் சட்டம் நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு இன்று நாடு முழுவதும் இயங்கிவருகிறது.

இந்தச் சட்டத்தின் மூலம் மத்திய அரசு எல்லா பயிர் விதைகளுக்கும் குறைந்தபட்ச சுத்தத் தன்மையையும் முளைப்புத் திறனையும் நிர்ணயித்து அறிவிக்கிறது. இந்தக் குறைந்த பட்ச தரங்கள் இல்லாத விதைகளை விற்பது குற்றமாகும். விற்கப்படும் விதைகளுக்கு அடையாளச் சீட்டு ஒட்டுவதையும், இந்தச் சீட்டில் விதையின் பெயர், முளைப்புத் திறன், தூய்மை சதவிகிதம் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்பதையும் இந்தச் சட்டம் கட்டாயப்படுத்துகிறது. இதனால் வாங்கும் விதைகளின் தரத்தைப் பற்றி விவசாயி அறிந்து கொள்வதுடன், தரக்குறைவான விதைகளை விதை வியாபாரிகள் விற்பதும் தடை செய்யப்படுகிறது. விதைச் சட்டம் விரும்பி விதைகளுக்குச் சான்றிதழ் பெறுவதற்கும் வழி செய்கிறது.



தமிழ் நாட்டில் 1970ஆம் ஆண்டு வேளாண்மைத்துறையின் ஒரு பகுதியாக விதைச் சான்று பிரிவு துவக்கப்பட்டது. விதை உற்பத்தியிலிருந்து தனிப்பட்டு இயங்கும் வகையில் விதைச் சான்று அமைந்திருக்க வேண்டும் என்ற கருத்தினை அரசு கொண்டிருந்ததனால், விதைச் சான்றளிப்புத் துறையினை வேளாண்மைத் துறையினின்றும் பிரித்திட அரசு ஆணையிட்டது. கோயம்புத்தூர் நகரினைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தனித்தன்மையுடன் இயங்கும் துறையாக, விதைச் சான்றளிப்புத் துறை இயங்க அரசு ஆணையிட்டுள்ளது. விதைச் சான்றுத்துறை 24-10-1979 முதல் தனித்துறையாகச் செயல்பட்டு வருகிறது.

1980-81ஆம் ஆண்டில் மேலும் அதிக பரப்பளவை விதைச் சான்றளிப்பின் கீழ் கொண்டு வருவதன் மூலம் வேளாண் மக்களுக்கு மேலும் அதிக அளவில் சான்றளிக்கப்பட்ட விதைகள் கிடைக்குமாறு செய்ய நடவடிக்கைகளை இந்தத் துறை எடுத்தது. வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு போன்ற மாவட்ட நிலங்களில் நிலவிய வறட்சியின் காரணமாக நெல் விதைப் பண்ணைகளின் பரப்பளவு குறைந்திடினும், வீரிய ஒட்டு சிறுதானியம் பருத்தி போன்ற பயிர்களின் சான்றளிப்புப் பரப்பினை அதிகரித்ததின் மூலமாக 1979-80-ஆம் ஆண்டில்3 1763 ஏக்கராக இருந்த பரப்பளவு, 1980-81 ஆம் ஆண்டில் 31812 ஏக்கராக உயர்ந்துள்ளது.

இதைப் போன்றே 1979-80ஆம் ஆண்டில் 82450 குவிண்டாலாக இருந்த சான்றளிக்கப்பட்ட விதையின் அளவு, 1980-81ஆம் ஆண்டில் 119540 குவிண்டாலாக உயர்ந்துள்ளது. இது முந்தைய ஆண்டைவிட 45 சதவிகிதம் கூடுதலாகும். 1970ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட சான்றளிப்புத்திட்டத்தில் இது,இதுவரையில் அதிகமான சாதனையாகும். சான்றளிப்பில் பங்கு கொள்ளும் உற்பத்தியாளர் எண்ணிக்கையும் 1977-78ஆம் ஆண்டில் 124 இல் இருந்து, சென்ற ஆண்டு 400-க்கும் அதிகமாகக் கூடியுள்ளது.

மதுரையில் ஒரு துணை வேளாண்மை இயக்குநர் (விதைச் சான்றுரை) அலுவலகமும், திருநெல்வேலியில் ஒரு உதவி வேளாண்மை இயக்குநர் (விதைச் சான்றுரை) அலுவலகமும் துவக்கப்பட்டுள்ளன.

சென்ற ஆண்டில் பயறு வகைகள், காய்கறிப் பயிர்கள் போன்ற பயிர்களில் சான்றளிப்பின் பரப்பினை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. விதை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள வேளாண்துறை அலுவலர்களுக்கும் மற்றும் தனியார் துறையிலுள்ள உற்பத்தியாளர்களுக்கும், சான்றுரை பெற்ற விதைகள் உற்பத்தியில் தொழில் நுணுக்கங்கள் பெற பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இதன் மூலமாகச் சான்றளிப்புத் தரத்தினை எட்டாத பயிர்களின் அளவைக் குறைப்பதற்கும் விதைகளின் தரத்தினை உயர்த்துவதற்கும் வழிமுறைகள் விவரிக்கப்பட்டன.



# நகராட்சிகளின் நற்பணிகள்

**1980-81** ஆம் ஆண்டில் அரசு நகராட்சிகளுக்குச் சாலை வசதிகளுக்கென ரூ. 45.00 இலட்சம் கடனாகவும், ரூ.27.23 இலட்சம் மான்யமாகவும் வழங்கியுள்ளது. மேற்படி கடன் தொகை 68 நகராட்சிகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டது. இத்தொகையின் மூலம் நகராட்சிகள் 190 சாலை வேலைகளை எடுத்துள்ளன. தனியார் மனைப் பிரிவுகளில் உள்ள சாலைகளை மேம்படுத்த புதிய திட்டமான சுழல் நிதித் திட்டத்தை அரசு அங்கீகரித்து ரூ. 25.00 இலட்சம் வழங்கியுள்ளது. 1980-81ஆம் ஆண்டு இத்தொகையின் மூலம் 26 நகராட்சிகள் 70 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அமைத்து வருகின்றன.

1980-81ஆம் ஆண்டில் 40 நகராட்சிகளுக்கு அரசு தமிழ்நாடு ஒருங்கிணைப்பு நகர் முன்னேற்றத் திட்டத்தின் கீழ் ரூ. 93.82 இலட்சம் வழங்கியுள்ளது. இத்தொகையின் மூலம் கீழ்க்கண்ட மேம்பாட்டு வேலைகள் நகராட்சிகளால் எடுத்துக் கொள்ளப்பட்டு வேலைகள் நடந்து வருகின்றன.

1 அங்காடி, 5 பேருந்து நிலையங்கள், 1 அலுவலகக் கட்டடம், ரூ.4.05இலட்சம் செலவில் 5 நகராட்சிகளில் கடைகளும், ஸ்டால்களும், 2 தங்கும் விடுதிகள், 29 நகராட்சிகளில், 40 கட்டண கழிப்பிடங்கள்.

இதுவரை 53 நகராட்சிகள் 92 கட்டணக் கழிப்பிடங்களைக் கட்டியுள்ளன. 1980-81ஆம் ஆண்டில் 40 கட்டணக் கழிப்பிடங்களைக் கட்ட 29 நகராட்சிகளுக்கு அரசு ரூ. 21.26 இலட்சம் வழங்கியுள்ளது. வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன. கட்டணக் கழிப்பிடங்கள் இல்லாத மற்ற நகராட்சிகளும் இவற்றைக் கட்டுவதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

1980-81ஆம் ஆண்டு முடிய கடந்த 4 ஆண்டுகளில், அரசு, நகராட்சிகளின் குடிசைப் பகுதிகளில், சாலைகள், குடிதண்ணீர், தெருவிளக்குகள், பொதுக் கழிப்பிடங்கள் ஆகிய வசதிகள் செய்ய ரூ. 200.00 இலட்சம் மான்யமாக வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 19 நகராட்சிகள் 110 குடிசைப்பகுதிகளை மேம்படுத்தியுள்ளது. இதனால் 3.90 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர்

## நகராட்சி பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டும் திட்டம்

1980-81-ஆம் ஆண்டு அரசு ஆரம்பப் பள்ளிக் கட்டடங்கள் கட்ட ரூ.21.50 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. இந்தத் தொகையின் உதவியினால் 60 நகராட்சிகளில் 95 பள்ளிக் கட்டட வேலைகள் நடப்பு ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு வேலைகள் முடியும் தறுவாயில் உள்ளன.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சிகளுக்கு வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதி உதவி விவரம் கீழ்வருமாறு :

| | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| வட ஆர்க்காடு மாவட்ட நகராட்சிகள் | 40.00 |
| சேலம் மாவட்டம் | 10.00 |
| புதுக்கோட்டை மாவட்டம் | 8.00 |
| இராமநாதபுரம் | 29.61 |

பஞ்ச நிவாரண வேலைகள் அதி தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இவ்வேலைகள் மாவட்ட ஆட்சியாளர்கள் ஒப்புதல் பெற்று குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

பிற்பட்ட பகுதிகளை மேம்படுத்த, ஒருங்கிணைந்த பிற்பட்ட பகுதிகள் முன்னேற்றத் திட்டம் 1977-78ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு 1981-82ஆம் ஆண்டில் 47 நகராட்சிகளுக்கு பிற்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகள் அளிக்க ரூ. 25.00 இலட்சம் அரசு வழங்கியுள்ளது



# அமோக விளைச்சலுக்கு





# உரத்தைத் திறம்படப் பயன்படுத்துங்கள்



உயர் விளைச்சலுக்கு உரம் மிகவும் அவசியம். உரத்தின் விலையும் சாகுபடி செலவும் அதிகமாக உள்ள இந்நேரத்தில் உரத்தைத் திறம்படப் பயன்படுத்துவது மிகவும் முக்கியம்.

1. முதலில் உங்கள் நிலத்துக்கும் பயிருக்கும் ஏற்ற சரியான உரத்தைத் தேர்ந்தெடுங்கள். மண் பரிசோதனை செய்து, அதன் சிபாரிசுப்படி உரமிடுங்கள்.

2. ஒவ்வொரு பயிருக்கும் உரமிடும் முறைகள் வேறுபடும். அதை அறிந்து முறையாக உரமிட வேண்டும்.

3. பண்ணையில் கிடைக்கக்கூடிய தொழு உரம், பண்ணைக் கழிவுகள் போன்றவற்றையும் சிறந்த முறையில் சேகரம் செய்து பாதுகாத்துப் பயன்படுத்த வேண்டும்.

4. மேலுரமாக யூரியாவை ஒரே தடவையில் இடாமல், இரண்டு-மூன்று தடவைகளில் பிரித்து இட வேண்டும். யூரியாவை வேப்பம் புண்ணாக்குடன் கலந்து இட வேண்டும்.

மேலும் உரத்தைத் திறம்படப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளையும், விரிவான சாகுபடி முறைகளையும் அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள் :

மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001




சமச்சீர் உரமிட

# விஜய்

HTM-MFL-2926



# வறட்சி நிவாரணப் பணிகள்

## புதுக்கோட்டை மாவட்டம்

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களிலும், கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. 1980-81-ஆம் ஆண்றில் தென்-மேற்கு, வட கிழக்குப் பருவ மழை தமிழகத்தில் சரிவரப் பெய்யாததால் இத்தகைய கடும் வறட்சி தோன்றியுள்ளது.

தமிழ்நாட்டில் செங்கல்பட்டு, வடார்க்காடு, தென்னார்க்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் தர்மபுரி, சேலம். திருச்சிராப்பிள்ளி, தஞ்சாவூர், மதுரை, பெரியார், கோயம்புத்தூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 14 மாவட்டங்கள், கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த வறட்சியின் விளைவாக, கிராமங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு, வேலைவாய்ப்புகளும் குறைந்துள்ளன.

வறட்சி என்றால் என்ன? என்பதை எங்களால் முடிந்தவரையில் விளக்கவும் வறட்சியைப் போக்க என்னென்ன பணிகள், அரசு தரப்பில் நடைபெற்று வருகின்றன என்பதை அறியவும், அதை மக்கள் எப்படித் தங்கள் இதய நன்றியறிதலைக் கூறுகிறார்கள் என்பதையும் நேரில் கண்டறியவும்தான், வறட்சிப் பகுதிகளுக்குப் புறப்பட்டோம். வறட்சிப் பகுதிகளில் தமிழக அரசு எடுத்த போர்க்கால நடவடிக்கையின் பயனாக எந்த விதப் ''பட்டினிச் சாவு'' என்பதற்கே இடமில்லாமல் போய் விட்டது.

தமிழக அரசு எந்தவிதப் புகாருக்கும் இடம் அளிக்காத வகையில் விருப்பு-வெறுப்பின்றி காரியம் ஆற்றி வறட்சியின் கோரப் பிடியில் இருந்து மக்களைக் காப்பாற்றியது என்று சொன்னால் அது மிகையாகாது.

ஆம்!

வறட்சிப் பகுதிகளில் நான்கு நாட்கள் தங்கியிருந்து அங்கு நடைபெறும் நிவாரணப் பணிகளைப் பார்வையிட அதாவது ''பத்திரிகையாளர் குழு'' புதுக்கோட்டை-இராமநாதபுரம் — மதுரை ஆகிய மாவட்டங்களுக்குச் சென்றது.

**முதல் நாள் இரவு**

*(28-5-81)* அன்று 'பத்திரிகையாளர் குழு' சென்னையிலிருந்து ரெயில் மூலம் புறப்பட்டது.

29-5-81 அன்று காலையில் நாங்கள் கண் விழித்துப் பார்த்ததோ புதுக்கோட்டை இரயில்வே நிலையம்தான்.

அங்கு தயாராக வைக்கப்பட்டிருந்த தனிப்பேருந்தில் எங்களை ஏற்றினார்கள். பேருந்துசெல்லும் போதே அதிகாரியிடம் நேற்று இங்கு மழை பெய்ததுபோல இருக்கிறதே என்று சந்தேகத்தை எழுப்பினேன்.

**ஆனந்தன்**

உடனே அவர், ''பத்திரிகையாளர்கள் வருகிறார்கள் என்பதை அறிந்தோ என்னவோ இந்தக் கொடும் வறட்சிப் பகுதிகளான புதுக்கோட்டை முழுவதும் நேற்று மழை கொட்டோ கொட்டு என்று கொட்டிவிட்டது'' என்றார். அவர் கூறிய வார்த்தை எங்களுக்கு எல்லையில்லா மகிழ்ச்சியை உண்டாக்கி விட்டது.

பேருந்தும் புறப்பட்டது. முந்தைய தினம் நல்ல மழை பெய்திருந்ததால் எங்களுக்கு வெயிலின் கொடுமை அவ்வளவாகத் தெரியவில்லை. முதலில் நாங்கள் தோப்புக்கொல்லை என்ற பகுதிக்குச் சென்றோம். ஆதிதிராவிட மக்கள் குடியிருக்கும் பகுதி அது. தண்ணீர் இல்லாமல் வற்றிப் போய் இருந்த கிணறு-மீண்டும் ஆழப்படுத்தும் பணி நடந்ததனால் தண்ணீர் கிணற்றில் நிறைய இருந்தது. அந்தக் கிணறு பற்றிய விவரங்களை எங்களுக்கு அந்தப் பகுதிப் பொறியாளர் திரு. ஜெயசீலன் எடுத்துச் சொன்னார். 58 அடி ஆழம் தோண்டிய பின்பு இப்போது 13 அடி உயரம் வரை கிணற்றில் நீர் உள்ளதாக அவர் கூறினார். அருகில் நின்றுகொண்டிருந்த பெண்களை நாங்கள் விசாரித்தபோது 'இந்தக் கிராமம் முழுவதுமே இந்தக் கிணற்றுத் தண்ணீரைத் தான் நம்பி இருக்கிறோம்,' என்றார்கள்.

'வறட்சிக் காலத்தில் கிணற்றில் தண்ணீர் இல்லாததனால் மக்கள் பல மைல்கள் சென்று குடிநீருக்கு

அலைகிறார்கள். "இன்னும் சில தினங்களில் இந்த அவலம் போய்விடும் என்று அதிகாரிகள் கூறினார்கள். இந்த ஊருணியில் வறட்சி நிவாரணப்பணிகள் நடைபெற்று வருவதைப் பார்த்திருக்கும்போது மழைத் தூரல் விழுந்ததும் எங்களுக்கு மீண்டும் மகிழ்ச்சி கரை புரண்டு ஓடியது. அதன் பின் நாங்கள் கொத்தக் கோட்டைப் பகுதியில் உள்ள கிரகதாம்பாள் சத்திரம் என்னும் ஏரியில் 10 ஆயிரம் ரூபாய் செலவில் ஏரிக்கரையைப் பலப்படுத்தும் பணியைப் பார்வையிட்டோம். வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்ய, யாருக்கும் தொடர்ந்து "காண்ட்ராக்ட்" கொடுப்பதில்லை-அந்தந்த ஊர்களில் உள்ள விவசாயிகளிடம் தான் சிறிய சிறிய "காண்ட்ராக்ளைத் தருகிறோம்" என்று ஒரு அதிகாரி நிருபர்களின் ஐயப்பாட்டைப் போக்கினார்.

அதையடுத்து, நாங்கள் மேலக் கோட்டை என்ற ஊருக்குச் சென்று 505 அடி ஆழத்தில் ஆறு இலட்சம் ரூபாய் செலவில் தோண்டப்பட்டு வரும் குழாய்க் கிணறு பணியையும் ஆலங்குடியில் 127 அடி ஆழத்தில் குழாய்க் கிணறு தோண்டும் பணியையும் பார்வை யிட்டோம். அப்போது அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஏஞ்சல்மேரி என்ற பெண் எங்களிடம் 'தண்ணீருக்காக நாங்கள் பல மைல் தூரம் நடந்து செல்கிறோம்'. அப்படியிருந்தும் நல்ல குடிதண்ணீர் கிடைக்கவில்லை. எங்கள் ஊரில் புதிதாக ஒரு இலட்சம் ரூபாய் செலவில் தோண்டப்படும் குழாய்க் கிணற்றில் எங்களுக்கு ஒரு புதுவாழ்வு வந்தது போல் இருக்கிறது. நிரந்தரக் குடிதண்ணீர் வசதியைத் தந்த தமிழக அரசுக்கு நன்றியும் எங்கள் பாராட்டும்'' என்று மகிழ்ச்சியுடன் கூறினர். 'கட்சிப் பாகுபாடு இன்றி இதனை நாங்கள் கூறுகிறோம்' என்று அந்த பெண்மணி தெரிவித்தார்.

கீழப்பட்டி, கல்லாக்கோட்டை ஆகிய கிராமங்களில் உள்ள கிணறுகளை ஆழப்படுத்தும் பணியையும் நாங்கள் பார்வையிடத் தவறவில்லை - வாராப்பூர் என்ற கிராமத்திற்குப் பின்னர் வந்த போது எங்களுக்காக ஒரு அதிசயம் காத்திருந்தது. நிலத்தில் நடப்பட்டிருந்த ஒரு பெரிய குழியிலிருந்து "மளமள" என்று தண்ணீர் தானாகவே கொட்டிக் கொண்டிருந்ததைக் கண்ட நாங்கள் அருகில் இருந்த அதிகாரிகளிடம் இதைப் பற்றிக் கேட்டபோது அவர்கள் தெரிவித்த தகவல் மேலும் எங்களை வியப்பில் ஆழ்த்தியது.

1979-ஆம் ஆண்டு வறட்சி ஏற்பட்டபோது தமிழக அரசின் வேளாண்மைத்துறை இந்தப் பகுதியில் 800 அடி ஆழத்தில் ஏழு இலட்சம் செலவில் குழாய்க் கிணறு தோண்டியதாகவும் அது முதல் இதுவரை தானாகவே தண்ணீர் கொட்டிக் கொண்டு இருப்பது ஆகவும் அவர்கள் கூறினார்கள். குழாயிலிருந்து தொடர்ந்து தண்ணீர் வருவதால் அந்தத் தண்ணீர் வீண் போகாத அளவுக்கு அருகிலேயே ஒரு குளம் வெட்டி தண்ணீரைத் தேக்கி வைத்திருக்கிறார்கள். அந்தத் தண்ணீரை நாங்கள் சுவைத்துப் பார்த்தபோது கொஞ்சம் உப்புக் கரித்தது. ஆனாலும், அந்த நீரைத்தான் எங்கள் பகுதியிலுள்ள பாசனம் உட்பட எல்லாத் தேவைகளுக்கும் பயன்படுத்துகிறோம் என்று ஊர்ப் பெரியவர் ஒருவர் கூறினார், இதேபோல ஊற்று மூலம் தொடர்ந்து தண்ணீர் வரும் குழாய்கள் கீராத்தூர். செங்கைமேடு ஆகிய இடங்களிலும் அமைக்கப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி கூறினார். ஆதரங்கோட்டிலிருந்து கீரனூருக்குச் செல்ல குறுக்கு வழியாக 24 கிலோ மீட்டர் நீளத்தில் புதியதாக ஒரு சாலை அமைக்கப்பட்டிருந்ததையும் நாங்கள் பார்த்தோம். இந்தப் புதிய சாலை அமைத்ததன் மூலம் போக்குவரத்து நெரிசல் பெருமளவுக்குக் குறைந்துள்ளதாக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அதனையடுத்து நாங்கள் குன்றாண்டார் கோவில் என்னும் பகுதிக்குச்சென்றோம். பாறைகள் மிகுந்துள்ள குன்றுகள் உள்ள அந்தப் பகுதிகளில், தண்ணீர் வறண்டதால் அதை ஆழப்படுத்தும் பணி நடைபெற்று வந்தது. பாறைப் பகுதிகளில் 1 அடி ஆழம் தோண்ட அந்தத் தொழிலாளிகள் படும்பாடு பெரும்பாடாக இருந்தது. மிகவும் கடினமாக உள்ள பாறையை வெடிவைத்துத் தகர்க்கிறார்கள். அந்தப் பணியையும் பார்வையிட்ட நாங்கள் மதிய உணவுக்காக பிற்பகல் 2 மணிக்கு குடுமியான்மலையில் உள்ள அண்ணா தோட்டப் பண்ணைக்குச் சென்றோம். அந்தப்பண்ணையில் விளைந்த காய்கனிகளைக் கொண்டே சமைத்த உணவை முக்கனிகளுடன் சேர்த்து அங்கிருந்தவர்கள் விருந்தாக எங்களுக்குப் படைத்தார்கள். அதைச் சுவைத்து மகிழ்ந்த நாங்கள் பிற்பகல் பண்ணையைப் பார்க்கப் புறப்பட்டோம்.

மாவட்டத்திலே மிகப் பெரிய ஏரியான கவிநாடுஏரியின் மூலம் 1,800 ஏக்கர் நிலப்பரப்பு பாசன வசதி பெற்று வந்ததாம். இப்போது 2 இலட்சம் ரூபாய் செலவில் ஏரியின் கரையைப் பலப்படுத்தும் பணியும் முப்பத்தைந்தாயிரம் ரூபாய் குளத்தூர், ஏரியைப் பலப்படுத்தும் பணியும் நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகள் குறித்து இந்தப் பணியின் நிர்வாகப் பொறியாளர் திரு. அச்சுதன், உதவி நிர்வாகப் பொறியாளர், திரு. கோதண்டபாணி ஆகியோர் விளக்கிக்கூறினார்கள். இந்த மாவட்டத்தில் உள்ள 201 கிணறுகளை ஆழப்படுத்தும் பணி தீவிரமாக நடைபெறுகிறது. 193 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டு விட்டன. மாவட்டம் முழுவதும் உள்ள 882 ஏரி குளங்களின் கரைகளைப் பலப்படுத்தும் பணிகளும் நடந்து வருகின்றன. சாலைகளை அகலப்படுத்தி சீர் செய்வதற்காக 359 வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

"புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகளில் குடிநீர் வசதி, சாலை

கிணறுகளை ஆழப்படுத்தும் பணி.





வறட்சிப் பகுதியில் தண்ணீரைத் தேடி பல மைல்கள்.....?

வசதி, ஆகியவற்றுக்குத்தான் அதிக முக்கியத்துவமும் அக்கறையும் காட்டப்படுகிறது. இனிமேல் எதிர்காலத்தில்இதுபோன்ற வறட்சியின் கோரத்திற்கு இடம் தராத. அளவுக்கு—குடிநீருக்குப் பஞ்சமே ஏற்படக்கூடாது என்பதற்காக-மிகவும் முன் எச்சரிக்கையாகத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், கவனமாகப் பணியாற்றி வருவதாகவும் எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. காசிராஜன் அவர்களும் இதனைத்தான் தெரிவிப்பார்.''—இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவரின் உதவியாளர் திரு. குலசேகரன் தெரிவித்தார்.

வறட்சிப் பணியில் தினமும் 4 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் என்றும், கடந்த 2 மாதங்களாகப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். குண்ணாண்டவர் கோயில், திருமயம், விராலிமலை போன்ற இடங்களில் உள்ள 785 கிராமங்களில் 460, கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தில் பருவத்தே பெய்ய வேண்டிய மழை பொய்த்ததைத் தொடர்ந்து குடிநீர் வசதியைப் பெருக்க ஏற்கெனவே திட்டம் தயாரிக்கப்பட்டது. அதை அரசு உடனே ஏற்று 17.54 இலட்சம் ரூபாயை ஒதுக்கியும் உள்ளது. எனவே, குடிநீர்ப் பிரச்சினை பெருமளவுக்குக் குறைக்கப்பட்டுவிட்டது.



நிவாரணப் பணிக்குப்பின் தண்ணீர் கொட்டுகிறது!

புதிய ஆழ் குழாய்க் கிணறுகளும், குழாய்க் கிணறுகளும் ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டுள்ளன. புதுக்கோட்டை மாவட்ட வறட்சிப் பணிக்காகத் தமிழக அரசு 2.25 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாகவும், இதில் இதுவரை 1 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த அதிகாரி தெரிவித்தார். மாலை, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த வறட்சித் தடுப்புப்பணி அதிகாரிகளிடமும் விடை பெற்றுக்கொண்டு, இராமநாதபுரம் மாவட்டம் காரைக்குடிக்கு விரைந்தோம்.

தொடரும்

# மக்களின் நம்பிக்கையை மறுபடியும் பெற்ற அண்ணாவின் அரசு

## ஓராண்டில் ஆற்றிய பணிகள்









### விவசாயிகளின் நலன் :

விவசாயிகள் செலுத்தவேண்டிய ரூ. 72 கோடி கடன் ரத்து செய்யப்பட்டது
குறைந்த மின் கட்டணம்
சிறு விவசாயிகளுக்கு — 12 காசு
பெரும் விவசாயிகளுக்கு — 14 காசு
20 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை வருமானவரி ரத்து செய்யப்பட்டுள்ளது
பயிரிடும் குத்தகைதாரர் நலனுக்காக — மொத்த உற்பத்தியில் நியாயக் குத்தகை 25 சதவீதமாகச் செய்து திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டன
சிறு விவசாயிகளுக்கு 11,343 கறவை மாடுகள்

### நெசவாளர் நல்வாழ்வு

30 இலட்சத்திற்கும் மேற்பட்ட நெசவாளர்களுக்கு சேமிப்பு பாதுகாப்புத் திட்டமும் வீட்டுவசதி, ஆயுள் காப்புறுதித் திட்டமும் கூட்டுறவு அமைப்பின் நன்மைகள் விரிவாக்கம் — பாதுகாப்புத் திட்டத்தில் சேர்ந்த உறுப்பினர் மரணமடைந்தால் ரூ. 3,000 நிதி உதவி

### தமிழ் வளர்ச்சி :

ஆண்டுதோறும் தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு பாரதிதாசன் விருது ரூ. 10,000
ஆண்டுதோறும் சிறந்த எழுத்தாளர் ஒருவருக்கு திரு. வி.க. விருது ரூ. 10,000
சிறந்த தமிழ் நூல்களுக்கு ஒவ்வொரு நூலுக்கும் ரூ. 5 ஆயிரம் பரிசளிப்பு
தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவிட மதுரையில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு
உலகத் தமிழ்ச் சங்கம், தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவத் திட்டம்

### அரசு அலுவலர் நலன்

மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையான கூடுதல் அகவிலைப்படி
அரசு அலுவலர்களுக்கு முதன் முறையாக விடுமுறை பயணச் சலுகை

**அறிஞர் அண்ணாவின் இலட்சியத்தை நிறைவேற்றும் அரசின் பணிகள் தொடர்கின்றன..............**

### காவலருக்குச் சலுகைகள்

ரூ. 3.82 கோடி செலவில் காவலர்களுக்கு இன்றியமையா உணவுப் பொருள்கள் மலிவு விலையில் வழங்கப் பட்டுளளது. இதன் மூலம் 47,000 குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன
காவலர்களுக்கு வீடுகள் கட்டித்தரத் தனி வீட்டு வசதிக் கழகம்
கடமையாற்றும்போது இறந்து போகும் காவலர் குடும்பத்தினருக்கு அரசு ஊழியர்களுக்குரிய ரூ. 10 ஆயிரத்துடன் மேலும் ரூ. 10 ஆயிரம் அளிக்கப்படுகிறது
கூடுதல் காவலர் நியமனத் திட்டத்தின் கீழ் 4,000 காவலர்கள் நியமிக்கப்பட்டனர்

### கல்வி மேம்பாடும் ஆசிரியர் நலனும் :

அண்ணா அன்று சொன்னார் ; அண்ணாவின் அரசு இன்று நிறைவேற்றுகிறது
ரூ. 239 கோடி செலவில் கல்வி மேம்பாடு
64 தொடக்கப்பள்ளி, 78 நடுநிலைப்பள்ளி 110 உயர்நிலைப்பள்ளிகள் புதிதாக தொடங்கப்பட்டன
2800 கூடுதல் ஆசிரியர் பதவிகள் உருவாக்கப் பட்டன
ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள்— பள்ளிப்பணியாளர்கள் 97,000 பேர் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டனர்
தனியார்பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடிச் சம்பளம்
ஆசிரியர்களுக்கு வீடு கட்டித்தர தனிவாரியம்
கிராமப்புற பள்ளிகளுக்கு 32 தொலைக் காட்சிப் பெட்டிகள். 1018 உயர்நிலைப்பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக்கூடங்கள்

### மின் வசதி :

31 விழுக்காடு மின் உற்பத்தி அதிகரிப்பு.
மாதம் ரூ. 2.50 நிலைத்த கட்டணத்தில் 2.7 இலட்சம் குடிசைகளுக்கு மின் வசதி.

### வீட்டு வசதி :

ரூ. 34.12 இலட்சம் செலவில் பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கான 1959 குடியிருப்புகள்
ரூ. 2.78 கோடி செலவில் குறைந்த வருவாயினருக்கான 1680 குடியிருப்புகளும்
ரூ. 6.31 கோடி செலவில் நடுத்தர வருவாயினருக்கான 869 குடியிருப்புகளும்
ரூ. 19.86 இலட்சம் செலவில் தொழிலாளர்களுக்கான 240 குடியிருப்புகளும் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன
கிராம வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 29,479 வீடுகள் கட்டப்பட்டுள்ளன

### மருத்துவ வசதி :

ரூ. 84.97 இலட்சம் செலவில் மருத்துவமனை கூடுதல் கட்டிடங்கள் மருத்துவமனைகளில் 1,000 படுக்கைகள் அதிகரிப்பு
250 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்தமருத்துவப் பிரிவுகள் தொடக்கம்

### ஊனமுற்றோர் நலன் :

ஊனமுற்றோருக்கு ரூ. 13 இலட்சம் செலவில் 1,666 கருவிகள்.
ரூ. 3.41 இலட்சம் செலவில் 70 ஊனமுற்றோருக்கு பயிற்சி.
ரூ. 1.76 இலட்சம் செலவில் 46 ஆசிரியருக்கு பயிற்சி.
42 ஊனமுற்றோர் பள்ளிகளுக்கு ரூ. 33.25 இலட்சம் நிதியுதவி.
ஊனமுற்றோர் 94 பேர்களுக்கு பெட்டிக் கடை வைக்க ரூ. 0.99 இலட்சம் மானியம்.
ரூ. 2.00 இலட்சம் செலவில் பயிற்சி பெற்ற 130 ஊன முற்றோருக்கு பயிற்சியும் வேலை வாய்ப்பும்.
ஊனமுற்றோருக்கு சிறப்பு பணியாற்ற மதுரையில் ஒரு பிராந்திய மறுவாழ்வு நிலையம்.
ஊனமுற்றோருக்கு 86 பேர்களுக்கு சுய தொழில் செய்ய 1.25 இலட்சம் மானியம்.

### தொழிலாளர் நல்வாழ்வு

மூடப்பட்டிருந்த 11 தொழிற்சாலைகள் திறக்கப்பட்டு — 3300 தொழிலாளர் குடும்பங்கள் பயன் பெற்றன
மூடப்பட்ட தொழிற்சாலைத் தொழிலாளர்களின் துயர் துடைக்க தொழிலாளர் ஒருவருக்கு ரூ. 200 வீதம் 14,300 தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவித்தொகை வழங்கப்பட்டது
இதில் பி & சி ஆலைத் தொழிலாளர்கள் 13,000 பேருக்கு ரூ. 26 இலட்சம் வழங்கப்பட்டது
தற்காலிக (Casual ) தொழிலாளர்களை நிரந்தர ஊழியர்களாக்க புதிய சட்டம்

### ஆதிதிராவிடர் நலன் :

ஆதிதிராவிட மாணவர்களுக்கு 15 புதிய விடுதிகள்
8267 பேருக்கு இலவசத் தொழிற் கருவிகள்
31,126 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க
ரூ. 122 இலட்சம் செலவில் 1858.66 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது
தீண்டாமை ஒழிப்புக்கு ஒரு தனிக் காவல்துறைத் துணைத் தலைவர்
கலப்புத் திருமணம் செய்துகொண்ட 123 தம்பதிகளுக்கு நிதியுதவி
வருமான வரம்பின்றி ஆதிதிராவிட மாணவர்களுக்குக் கல்லூரிப் படிப்பில் கட்டணச் சலுகை
ஆதிதிராவிட மக்களுக்கு 5,000 புதிய இல்லங்கள்





### ஏழை எளியவர் நலன் :

ஒய்வு ஊதியத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் முதியோர், உடல் ஊனமுற்றோர், விதவைகள் ஆகியோருக்கு வாரம் ஒரு கிலோ அரிசியும் ஆண்டுக்கு இருமுறை புத்தாடையும் வழங்கப்படுகிறது. 1,37,492 பேர் இதன்மூலம் பயன் பெற்றுள்ளனர்

### மகளிர் நலன் :

ரூ. 20.49 இலட்சம் செலவில் கிராமப்புற ஏழை எளிய 200 பெண்களுக்கு பயிற்சியும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பும்.
மகளிர் நலம் பேணும் 40 தனியார் நிறுவனத்திற்கு ரூ. 4.66 இலட்சம் மானிய உதவி.
விதவை மறுமணம் புரிந்த 418 தம்பதிகளுக்கு ரூ. 20.00 இலட்சம் நிதியுதவி
ரூ. 55.26 இலட்சம் செலவில் 2,76,530 குழந்தைகளுக்கு சிறப்பு சத்துணவு வழங்குதல்.
4 அநாதை இல்லங்கள் மூலம் 1000 ஏழைக் குழந்தைகளுக்கு பராமரிப்பு.

### போக்குவரத்து :

கிராமப்புற, மலைப்பகுதி மக்களின் தேவைகளை நிறைவு செய்ய 47 சிறு பேருந்துகளும், 236 குறுகிய சக்கர அடித்தளப் பேருந்துகளும் விடப்பட்டன
277 புதிய வழித்தடங்களைக் கொண்டு 126 பலமுனை வழித்தடங்கள்

### தன்னிறைவுத் திட்டம் :

69 வட்டாரங்களில் கீழ்க்கண்ட பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன
2,208 குடியிருப்புகளுக்கு ரூ. 16.88 கோடி செலவில் குடிநீர் வசதி
ரூ. 53 இலட்சம் செலவில் ஆதிதிராவிட மக்களின் மயானங்களுக்கு 856 கி.மீ. நீளப்பாதை
ரூ. 1.71 கோடி செலவில் 2615 சிறு பாலங்கள்
ரூ. 2.46 கோடி செலவில் 162 புதிய கூடுதல் பள்ளிக் கட்டடங்கள்
ரூ. 39 இலட்சம் செலவில் 765 சிறிய நீர்ப்பாசனப் பணிகள்
ரூ. 71 இலட்சம் செலவில் 234 தாய்சேய் நல விடுதிகள்
ரூ. 30 இலட்சம் செலவில் 79 ஊரக மருந்தகக் கட்டடங்கள்

### வறட்சி நிவாரணம் :

வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் ரூ. 3954 கோடி செலவில் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள்

இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்புத் துறை,













**இந்திய மொழிகள் நடுவண் நிறுவனத்தின் தென்னக வட்டார மொழிகள் மையத்தில் தமிழ் கற்றுக் கொண்ட அந்த ஆசிரியர்கள், இந்தியத் திருநாட்டின் பல்வேறு மாநிலங்களில் – பைந்தமிழ் பரவிடும் வகையில் எங்கோ உள்ள சின்னஞ்சிறிய ஊர்களில் எல்லாம் ஓய்வு நேரத்தில் மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்து வருகிறார்கள், அவர்கள்....**

எங்கோ பிறந்து, எப்பணியிலோ ஈடுபட்டு அதன் தொடர்பாக தமிழ்நாட்டுக்கு வந்த வெளிநாட்டு அறிஞர்கள், செந்தமிழ் வளர்த்த சான்றோர்களாக மாறியதை அறிவோம். பாரெங்கும் பைந்தமிழின் பெருமையைப் பரப்பிய அந்த நல்லவர்களை போல இந்தியத் திருநாட்டின் சிற்றூர்களில் எல்லாம் தமிழை வளர்க்கும் திருப்பணியில் பல ஆசிரியப் பெருமக்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஒரிசா மாநிலத்தின் ஊரகப் பகுதிகளில், மத்திய பிரதேசத்தில், மகாராஷ்டிரத்தில் ராஜஸ்தான் மாநிலத்தில் மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தமிழ் கற்பிக்கும் திருப்பணியில் அந்த ஆசிரியப் பெருமக்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் ஆர்வம் எப்படி பிறநதது?

மைசூரில் இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம் ( Central Institute of Indian Languages ) 1969-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பின்னர் நான்கு வட்டார மொழி மையங்கள் 1970-ல் தொடங்கப்பட்டன.

தென்னக மொழிகளான தமிழ் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளுக்காகத் தென்னக வட்டார மொழிகள் மையம் மைசூரிலும், அசாம், வங்காளம், ஒரியா ஆகிய மொழிகளுக்காகக் கிழக்கு வட்டார மொழிகள் மையம் புவனேஸ்வரிலும், மராத்தி, குஜராத்தி, சிந்து ஆகிய மொழிகளுக்காக மேற்கு வட்டார மொழிகள் மையம் புனாவிலும் உருவாக்கப்பட்டன. 1973-ல் உருது ஆராய்ச்சி மையம் இமாசலப் பிரதேசம் சோலனிலும் தொடங்கப்பட்டது.

இவை அனைத்தும் இந்திய மொழிகளை வளர்த்து பரப்பிடும் பணியினை இலட்சிய நோக்காகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

எடுத்துக் காட்டாக. தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்கள், இந்தியாவின் எந்தப் பகுதியில் வாழ்பவர்களாக இருந்தாலும் தமிழைக் கற்றுக்கொள்ள வழி வகுக்கும் வகையில் இந்நிறுவனம் திட்டம் வகுத்து செயல்பட்டு வருவதை அறிவோம்.

மேல்நிலைப் பள்ளிகளில், உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களாக உள்ளவர்கள், தங்கள் தாய்மொழியல்லாத வேறு ஒரு இந்திய மொழியைக் கற்றுத் தேர்ந்து மாணவர்களுக்குக் கற்பிக்க விரும்பினால், எந்தமொழியைக் கற்க விரும்புகிறார்களோ அந்த மொழிக்குரிய இந்திய மொழிகள் நிறுவனத்தின வட்டார மொழிகள் மையத்தில் ஓராண்டுப் பயிற்சி பெறலாம். அப்படி பயிற்சி பெற்றவர்கள், தாங்கள் பணியாற்றுமிடத்தில் தாங்கள் கற்ற மொழியை மாணவர்களுக்குக் கற்பிக்கலாம்.

இப்படி இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் மைசூரிலுள்ள தென்னக வட்டார மொழிகள் மையத்தில் தமிழ் மொழியைக் கற்றுக் கொண்ட ஆசிரியர்கள் ஏறத்தாழ 300 பேர்கள் ஆவார்கள். இவர்களில் தமிழ் கற்றுக் கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை 3,000-க்கு அதிகமாகும். இந்தியத் திருநாட்டின் எந்தப் பகுதியிலோ எந்தச் சிற்றூரிலோ இப்படி தமிழைக் கற்பிக்கும் பணி ஆர்வத்தோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

பெரும் நகரங்களில் பல்கலைக் கழகங்களில் தமிழ்மொழிக் கற்பிக்கப்படுவது இயல்பான ஒன்றாக இருக்கலாம். ஆனால், சின்னஞ்சிறிய ஊர்களில் அம்மொழியோடு நெருக்கமான தொடர்பு இல்லாத மாணவர் உள்ள இடங்களில், கைம்மாறு கருதாமல் தமிழைக் கற்பித்து வரும் ஆசிரியர்கள் நமது பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியவர்கள் ஆவார்கள்.

மும்மொழித் திட்டம் உள்ள வடபுலத்து மாநிலங்களில் பல இடங்களில் தென்னக மொழி அல்லாத பிறமொழிகளே வகுப்புகளில் கற்பிக்கப்படுகின்றன. ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் தமிழும் கற்பிக்கப்படுகின்றது. எனினும் இவ்வாசிரியர்கள் வகுப்பு நேரம் முடிந்த பிறகு தமிழை மாணவர்களுக்குக் கற்பித்து வருகின்றனர்.

**சென்னையில் தமிழ்மொழியில் மறுபயிற்சி பெற்ற ஆசிரியர்கள், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி, இந்திய மொழிகள் நடுவண் நிறுவன ஆசிரியர்கள் ஆகியோர்.**



# வணக்கத்திற்குரியவர்கள்

## மாழலன்

மைசூரில் ஓராண்டுகள் இவ்வாசிரியர்கள் தமிழ் மொழியைக் கற்றுக் கொண்டனர். தமிழ் மொழியில் மேலும் தங்கள் பயிற்சியை வளர்த்துக் கொள்ள இந்திய மொழிகள் நிறுவனம் பலவகையில் உதவிகள் செய்து வருகின்றது. தமிழ் கற்றுச் சென்று தமிழ் கற்பித்துவரும் அந்த ஆசிரியர்கள் பத்துபேருக்கு அண்மையில் மீண்டும் தமிழில் மறுபயிற்சி அளிக்கப்பட்டது.

சென்னை சிந்தாதிரிப்பேட்டை மேல்நிலைப் பள்ளியில், இந்திய மொழிகள் நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் ஜி. சுப்பையா, டாக்டர் இரெ. பன்னீர் செல்வம் ஆகியோரிடம் பயிற்சி பெற்றனர். ஆசிரியர்கள், தமிழை மேலும் நன்கு கற்பிக்கும் முறைகளை விளக்கி, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத்துறைப் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி உரையாற்றினார்.



பிரசன்ன குமார் ரத்தா, எஸ். பி. திவாரி, ஜெட்மல் ஆச்சாரியா

சென்னையில் ஏறத்தாழ ஒரு மாதம் தமிழில் மறுபயிற்சி பெற்ற அந்த ஆசிரியர்கள் தமிழ் மீது கொண்டுள்ள பற்றும் ஆர்வமும் பாராட்டுக்குரியவாகத் திகழ்ந்தது. தங்களது ஓய்வு நேரத்தில் பிறருக்குத் தமிழைக் கற்றுக் கொடுப்பதை ஒரு கடமையாக மேற்கொண்டுள்ள அவர்கள் தமிழ் உள்ளங்களின் வணக்கத்துக்குரியவர்களாகத் திகழ்ந்தார்கள்.

மைசூரில் உள்ள இந்திய மொழிகள் நடுவண் நிறுவனத்தின் தென்னக வட்டார மொழிகள் மையத்தைச் சேர்ந்த டாக்டர் ஜி. சுப்பையா, டாக்டர் இரெ. பன்னீர்செல்வத்துடன், சிந்தாதிரிப்பேட்டை மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் எஸ். மணி



தமிழார்வமிக்க அவர்களினால் பாரதம் எங்கும் பைந்தமிழ் பரவிடும் அரும்பணி ஆரவாரமில்லாமல் அமைதியுடன் நடைபெற்று வருவது மனத்துக்குப் பெருமகிழ்ச்சியூட்டும் நிகழ்ச்சியாகத் திகழ்ந்தது. இப்பணிக்கு அவர்களை ஊக்குவித்தும் உதவியும் வரும் நல்லவர்களையும் இந்திய மொழிகள் நிறுவனத்தாரையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

பிறமாநிலங்களில் தமிழ் கற்பித்து வரும் ஆசிரியப் பெருமக்கள் மறுபயிற்சி பெற்ற ஆசிரியர்கள் விவரம் வருமாறு:—

**டாக்டர் பி. என். திவாரி**

மத்திய பிரதேசத்தில் உள்ள பிகிண்ட் மாவட்டம் கோஹாட் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் விரிவுரையாளரான டாக்டர் பி. என். திவாரி தமிழ் கற்பித்து வருகிறார். இவரிடம் இருபத்திரண்டு மாணவர்கள் தமிழ் கற்று வருகிறார்கள்.



சி. சீத்தி, டி. கிருஷ்ணன்

**எச். எஸ். சுவர்ணாகர்**

மத்திய பிரதேசத்தில் உள்ள விதிஷா மாவட்டத்திலுள்ள மகுத்பூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் விரிவுரையாளரான எச். எஸ். சுவர்ணாகர் 15 மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்து வருகிறார்.

**எச். டி. சர்மா**

மத்திய பிரதேசம் மோரெனாவில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளியில் விரிவுரையாளரான எச். டி. சர்மா 22 மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்து வருகிறார். 1970-ஆம் ஆண்டுமுதல் இவர் இதுவரை 250 மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்துள்ளார், இவர் தனது குழந்தைகளுக்கும் தமிழ் கற்றுக் கொடுத்துள்ளார். அவர்களையும் சென்னை வகுப்புகளுக்கு அழைத்து வந்திருந்தார்.

**ஜே. எல். பீசேன்**

மத்திய பிரதேசம் பலாகாட் மாவட்டம் வாரஸ்கோனி மேல்நிலைப் பள்ளி விரிவுரையாளரான ஜே. எல். பீசேன், 25 மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்து வருகிறார்.

**டாக்டர் எஸ். பி. திரிபாதி**

உத்திரப்பிரதேசம் டேராடூன் அரசினர் ராணிபோகாரி இடைநிலைக் கல்லூரி வடமொழி விரிவுரையாளரான டாக்டர் ஷியோ பூஷண் திரிபாதி 20 மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்து வருகிறார்.



லோக்டோங்ரே, ஜே. எல். பீசேன், பி. என். திவாரி,

**ஜேத்மால் ஆச்சாரியா**

ராஜஸ்தான் மாநிலம் பிகானீரில் உள்ள அரசினர் சாதூல் மேல்நிலைப் பள்ளியில் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். தமிழை இந்திமொழி வாயிலாகக் கற்பிப்பதற்குத் தனியாக ஒரு புத்தகத்தை தயாரித்துள்ளார். இவரிடம் எழுபது மாணவர்கள் தமிழ் கற்று வருகிறார்கள்.

**பிரசன்ன குமார் ரத்தா**

ஒரிசா மாநிலம் கோராபுட் மாவட்டம் குன்பூர் அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராக இருப்பவர். இவரிடம் 17 மாணவர்கள் தமிழ் கற்கிறார்கள். அகிலன் கதைகளை இவர் ஒரியா மொழியில் மொழிபெயர்த்துள்ளார்.

**லோக் டோங்ரே**

மத்திய பிரதேசம் வாரசோனியில் டி. பி. அரசினர் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியராக உள்ள லோக் டோங்ரே தமிழில் மிகுந்த ஆர்வம் உள்ளவராகத் திகழ்கிறார்.

**டி. கிருஷ்ணன்**

கேரள மாநிலம் தகளச்சேரியில் உள்ள தூய சூசையப்பர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக உள்ள டி. கிருஷ்ணன் 30 மாணவர்களுக்குத் தமிழ் கற்றுக் கொடுக்கிறார்.

தீபிக் சர்மா எச். எஸ். ஸ்வர்ணாகர், எச். டி. சர்மா நந்தித் சர்மா,



**சி. சீத்தி**

கேரள மாநிலம் கள்ளிக்கோட்டை அருகிலுள்ள நடக்காவு அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக உள்ள சி. சித்தி 20 மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்து வருகிறார்.

இதுபோன்று, இந்தியா எங்கும் வேறுமொழியைத் தாய் மொழியாக உடையவர்களுக்குத் தமிழைக் கற்பிக்கும் திருப்பணியில் சுமார் 300 ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

பாரதம் எங்கும் பைந்தமிழ் பரவிட, நாளும் உழைக்கும் அந்த நல்லவர்களை வணங்குவோம்! வாழ்த்துவோம்!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்…அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
Sir

பதிவு எண். M. 8676 Licence No. TN/MS(C)/PP-23 தமிழரசு

